ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P
ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 7 09 – 15 ஒகஸ்ட் 2001 முழக்கம்: 343

AYNGARAN VIDEO
உங்களுக்குத் தேவையான
ORIGINAL VIDEO, VCD, DVD, CD
மற்றும் தொலைக்காட்சி
நாடகங்கள், பிரபல மேடை
நிகழ்ச்சகள், பட்டிமன்றங்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)
80, Burlington Road
New Malden
SURREY KT3 4NU
Tel: 07939238296
Pub.

# சிறீலங்கா அரசு பெரும் குழப்பத்தில்

## - பிரச்சாரத்திற்கு சென்ற பிரதமர் திருப்பி அழைக்கப்பட்டார் -

(07.08.01)

எதிர்வரும் 21ம் திகதி சிறீலங்கா அரசு நடாத்த இருந்த சர்வஜன வாக்கெடுப்பு தமக்கு வெற்றியைத் தேடித் தரப்போவதில்லை என்ற நிலையில் சிறீலங்காவின் சந்திரிகா அரசு பெரும் குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ளது. இதனால் உடனடியாக சர்வஜன வாக்கெடுப்பை இடைநிறுத்தும் முடிவுக்கு சந்திரிகா வந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனை இடைநிறுத்தும் முயற்சியில் இது தொடர்பான அவசர ஆலோசனைகளிலும் சந்திரிகா இறங்கியுள்ளதாகவும் எமக்கு கிடைத்த கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று கொழும்பில் தனது அமைச்சர்களுடன் அவசர ஆலோசனைக் கூட்டம் ஒன்றை சந்திரிகா நடாத்தியிருப்பதாகவும், அக் கூட்டத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் தமது திட்டத்தை நிறுத்திக் கொள்வதற்கான முடிவை எடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது. இதே வேளை, கொழும்புக்கு வெளியே சர்வஜன வாக்கெடுப்பிற்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் அவசர அவசரமாக கொழும்பிற்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வஜன வாக்கெடுப்பு நிறுத்துவது பற்றி உறுதியான தகவல்கள் இதுவரை வெளிவராத போதிலும் எவ்வேளையிலும்

(☞ 2ம் பக்கம்)

# வவுனியா ரெலோ முகாம் படையினரால் சுற்றிவளைப்பு

(06.08.01)

வவுனியா கற்குழியில் அமைந்துள்ள தமது முகாம் இன்றும் படையினரின் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், முகாமின் வீட்டு மூன்று அறைகளில் ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் தோண்டிப் பார்த்ததாகவும் வெளியில் உள்ள கட்டிடம் ஒன்றின் அறைப்பகுதியையும் படையினர் தோண்டிப பார்த்ததாகவும், ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தலைமையக உத்தரவின் பேரிலேயே தாங்கள் இவ்வாறு சோதனையை மேற்கொண்டதாக சோதனை நடவடிக்கைக்காக வந்திருந்தவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும், முகாமைச் சோதனையிடுவதற்கான நீதிமன்ற உத்தரவைத் தாங்கள் பெற்றிருப்பதாகப் படையினர் உத்தரவுப் பத்திரத்தையும் தம்மிடம் காட்டியதாகவும் அவர் கூறினார். இராணுவம், பொலிஸ், சிறப்பு புலனாய்வு பொலிசார், ஆகியோர் இந்தத் தேடுதல் நடவடிக்கைக்காக வந்திருந்ததாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். தம்மிடம் இருந்த ஆயுதங்களை மீளப் பெற்றுள்ள அரசாங்கம் நிராயுதபாணிகளாக இருந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமது முகாம்களில் ஏன் இவ்வாறு சோதனை நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பது புரியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்டுநாயக்கா தாக்குதலை எத்தனை தடை விதித்தாலும் பேசுவோம்

## - வைகோ

(06.08.01)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதலை எத்தனை தடை விதித்தாலும் ஊர் ஊராகச் சென்று பேசுவோம் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் எழுதிய, கவியரசர் என்

(☞ 2ம் பக்கம்)

# தென்மராட்சியில் தொடரும் விமானத் தாக்குதல்

(06.08.01)

யாழ். தென்மராட்சிப் பகுதியில் சிறீலங்கா வான்படையினரின் தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இன்று பளைப் பகுதி மீது வான்படையின் கிபீர் மற்றும் மிக்-27 விமானங்கள் கடும் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இதேவேளை, கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களிலும் வடக்கு கிழக்கின் பல பகுதிகளிலும் விமானப்படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீதான தாக்குதலுக்கு பின்னர் சிறீலங்கா வான்படையினரின் தொடர்ச்சியான தாக்குதல் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இத் தாக்குதல்கள் பற்றி விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எவ்வித செய்திகளும் வெளிவரவில்லை.

# சுவிசில் இருந்து சென்ற தமிழர்கள் திருச்சி விபத்தில் பலி

(06.08.01)

சுவிஸ் நாட்டில் இருந்து விடுமுறைக்காக தமிழகம் சென்ற குடும்பஸ்தவர்கள் வீதி விபத்தில் சிக்கி பலியாகியுள்ளனர். இவர்களது குழந்தைகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று, மதுரைக்கு அருகிலுள்ள சமயநல்லூர் எனும் இடத்தில் இடம் பெற்றுள்ளது. நேற்று, காலை 11 மணியளவில் 12 பேர் இணைந்து, தனியார் வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி திருச்சியில் இருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்தனர். இதன் போது, முன்னால் சென்ற வாகனம் ஒன்றை விலத்தி முன்னே செல்ல முற்படுகையில், எதிர்த் திசையில் இருந்து வந்த அரச பேருந்துடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269
பல்பொருள் அங்காடி

**ஈழமுரசு**

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE PUBLI-HEBDOS 1
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**AMUTHASURABI**
**Rheinische Str-55, 44137 Dortmund.**
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07884051522
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: `EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, Ont., M4C 5R4
Tel (416) 686-3041
Fax: (416) 686-3041



குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


# தமிழகத்தில் இருந்து திரும்பிய ஆறுபேர் கைது

*(06.08.01)*

96ம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்து சென்றிருந்த ஆறுபேர் இலங்கைக்குத் திரும்பி வந்தவேளை, தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிசார் மூலமாக மன்னார் மாவட்ட நீதிபதி முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். இவ் ஆறு பேரையும் மன்னார் பேசாலையில் உள்ள திறந்த வெளி நலன்புரி நிலையத்தில் வைத்து பராமரிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டு இவர்களை பள்ளிமுனை கிழக்கு கிராம சேவை அதிகாரி மூலமாக அங்கு அனுப்பி வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் பேசாலையைச் சேர்ந்த ஸ்ரிபன் (26), திருவையாறு, இரணைமடு, கிளிநொச்சியைச் சேர்ந்த ஞானமுத்து யோசராசா(54), விநாயகபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜெயராசா(31), சிப்பித்திடல் தம்பலகாமம் திருமலையைச் சேர்ந்த பாக்கியநாதன் ஜெயக்குமார்(27), வவுனியா கண்டிவீதி தேக்கங்காட்டைச் சேர்ந்த செல்லையா தர்மசீலன்(25), அவருடைய மனைவி விஜயலட்சுமி செல்லையா(22) இவர்களின் ஒரு வயது குழந்தை ஆகியோரே இவ்வாறு தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் கிளர்ச்சித் தடுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்கள்.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீலங்கா அரசு...

சந்திரிகா அரசு இவ் அறிவித்தலை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சந்திரிகா அரசின் சர்வஜென வாக்கெடுப்பிற்கு எதிராக ஜே.வி.பியினர் இன்று பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளனர். பல்வேறு இடங்களில் நடைபெறும் இவ் ஆர்ப்பாட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இவ் சர்வஜென வாக்கெடுப்பை 11 தமிழ்க் கட்சிகளும் பலமாக எதிர்த்துள்ளதுடன் எதிர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட உள்ளதாகவும் அறிவித்துள்ளது. இந்நிலையில் சந்திரிகா அரசு சர்வஜென வாக்கெடுப்பை நடத்தினால் சுமார் 13 இலட்சம் வரையான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்திக்க வேண்டி ஏற்படும் என கணிப்பீட்டாளர்கள் எச்சரித்துள்ளமையை அடுத்து சர்வஜென வாக்கெடுப்பை நிறுத்தும் முடிவுக்கு சந்திரிகா தள்ளப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இது இவ்வாறிருக்க, சந்திரிகா அரசு நடத்தவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து விடுதலைப் புலிகளுக்கு நம்பிக்கையில்லை எனவும் இந்த விடயத்தில் அவர்கள் ஆர்வமோ அக்கறையோ காட்டவில்லை எனவும் வன்னிக்குச் சென்று திரும்பியுள்ள நீதிக்கும் சமாதானத்துக்குமான அமைப்பின் பணிப்பாளர் அருட்திரு.பஸில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார். கடந்த வியாழக்கிழமை 300 பக்தர்களுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மடுவுக்குச் சென்ற அவர், அங்கிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் செய்தியாளர்களிடம் இப்படிக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான மூர்த்தி, அருள் மாஸ்டர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே தான் இதனை அறிந்துகொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி

## சுவிசில் இருந்து....

இதன்போது வேலுப்பிள்ளை குகதாசன்(41) என்பவர் அவ்விடத்திலேயே பலியாகியுள்ளார். அவரது துணைவியார் குகதாசன் சியாமளா(37) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகையில் மரணமாகியுள்ளார். உயிரிழந்த குகதாசன் தாயகத்தில் தொட்டிலடி சங்கானையை சேர்ந்தவர் எனவும் அவரது துணைவியார் நீர்வேலியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை, இவர்களது மகளான ஜதானா(10), மகன் பிரணவா (ஒன்றரை வயது) ஆகியோரும் அவர்களுடன் பயணம் செய்தவர்களும் காயமடைந்துள்ளனர். சுவிஸ் செங்காலன் மாநிலத்தில் மார்பாக் நகரில் வசித்துவந்த இவர்கள் தமது விடுமுறையை தமிழகத்தில் கழிப்பதற்காக சென்றிருந்தபோதே இக்கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கட்டுநாயக்கா...

காவலன் என்ற நூலின் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் சனிக்கழமை சென்னை நடிகர் அரங்கக் கலையரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே வைகோ இதனைத் தெரிவித்துள்ளார்.

கவிக்கோ அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை வைகோ அவர்கள் வெளியிட்டு வைக்க இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் பெற்றுக் கொண்டார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய வைகோ தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் எங்கள் தமிழ்க் குழந்தைகளை, ஆண்களை, பெண்களைக் குண்டு மழை பொழிந்து, கொன்று குவித்தவர்களுக்குச் சரியான பதிலடி கொடுத்திருக்கிறார்கள். தமிழர்கள் நாதியற்றவர்களா? பலஸ்தீனர்களுக்கு உலக நாடுகள் ஆதரவு கொடுக்கின்றன. எங்கள் ஈழத் தமிழர்களையோ எந்த நாடும் ஆதரிக்கவில்லை. எந்த நாட்டு ஆயுத உதவியும் இன்றி ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அவர்கள் போரிடுகின்றனர். தலைநகர் கொழும்புக்குள் சென்று, விமானப்படைத் தளத்தினுள் நுழைந்து, சிங்கள இராணுவ விமானங்களை அழித்தவர்கள் எம் தமிழர்கள். பிரபாகரன் தலைமையிலான படையே இதைச் செய்தது. இந்தப் பெருமையை நாங்கள் பேசக் கூடாதா? இதைப் பேசக்கூடாது என்று தடை போடுகின்றார்கள். எத்தனை எத்தனை தடைவிதித்தாலும் ஊர் ஊராகச் சென்று பேசுவேன். இதைப் பேசாது தமிழனாக இருந்து பயன் என்ன?

தாக்குதல் நடத்திய நேரத்தில் அவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்துள்ளனர். பயணி ஒருவரது உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளோ 21 பேர், இராணுவத்தினரோ 25,000 பேர். 21 பேரை எதிர்த்து 9 மணி நேரம் போராடியிருக்கிறார்கள். இனி எந்த நாடும் சிங்கள இராணுவத்துக்கு விமானம் தராது. அந்த வீர இளைஞர்கள் வெற்றி பெறட்டும்? யாழ்ப்பாணம் மீட்கப் படட்டும். இவ்வாறு தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.


**DURON 800 Mhz**
**CARTE MERE MATSONIC**
**SD RAM 128 Mo PC 133**
**DISK DUR 20 Go**
**CD ROM 52X**
**FLOPPY 1.44 Mo**
**CARTE VIDEO 16 Mo Intégré**
**CARTE SON AC3 Intégré**
**MODEM 56 Kbps AMR**
**BOITER MOYEN TOUR ATX**
**CLAVIER PS/2**
**SOURIS PS/2**
**HP 240 W**
**ECRAN 15 `` IMPRIMANTE CANON BJC 2100SCANNER ARTEC USB 36BITS**

Garantie 2 ans

**Prix 4900 FTTC**

**LUNE INFORMATIQUE**
**26 RUE PERDONNET, 75010 PARIS**
**TEL 0153267670 / FAX 0153260874**
**LUNE INFORMATIQUE@IFRANCE.COM**

**ERRANCES TRAVELS**

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# ஜனநாயக ரீதியான போராட்டங்களை நசுக்க வேண்டாம்!

## - யாழ். சுதந்திர மாணவர் அமைப்பு

(05.08.01)

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குடாநாட்டில் இடம்பெற்ற பகிஸ்கரிப்புப் போராட்டத்திற்கு யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் ஆதரவு தெரிவிக்க முற்பட்டபோது, அதற்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிர்வாகமும் அங்கு கல்வி கற்கும் ஒரு சில மாணவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இச் செயலைக் கண்டித்து யாழ். சுதந்திர மாணவர் அமைப்பு கடந்த செவ்வாயன்று துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டது.

அத் துண்டுப் பிரசுரத்தில் உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் செயற்பாட்டை வெளிப்படையாகக் கண்டித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இன்றைய காலகட்டத்தில் எமது மாணவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் உட்பட அனைத்துக் கொடுமைகளுக்கும் ஒத்தாசை புரிந்துவரும் அரசின் அடிவருடித் தமிழ் கட்சிக்கு வாழ்த்துத் தெரிவித்து, அதன் மூலம் தாமும் தமிழ் மாணவர்களுக்கு எதிரானவர்கள் என்பதை உயர் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் சிலர் நிரூபித்துள்ளனர். அண்மையில் யாழ். பல்கலைக் கழக மாணவன் திவ்வியனின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குடாநாட்டில் இடம் பெற்ற பகிஸ்கரிப்புப் போராட்டத்திற்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் ஆதரவு தெரிவிக்க முற்பட்டபோது, அதற்கு தொழில் நுட்பக்கல்லூரி அதிபரால் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்ததை நாம் அறிவோம். இருந்தும் திட்டமிட்டபடி மாணவர்கள் பகிஸ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திவ்வியனின் கைது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகம் உட்பட அனைத்துக் கல்வி நிறுவனங்களும் மேற்கொண்ட ஜனநாயக ரீதியிலான போராட்டத்திற்குக் குறிப்பிட்ட தமிழ்க்கட்சி பூரண எதிர்ப்பைத் தெரிவித்தது. இது அனைவரும் அறிந்ததே. எனவே இப்படிப்பட்ட தமிழ்க் கட்சியின் செயற்பாட்டிற்கு உடந்தையாக இருக்கும் சிலருக்கு நாம் தெரிவிக்க விரும்புவது, இனிமேலும் மாணவர்களின் போராட்டங்களை நசுக்கவோ குறிப்பிட்ட தமிழ் கட்சிக்கு வாழ்த்துப்பாடவோ வேண்டாம் என்பதேயாகும். அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்காக இனிமேலாவது நிறுவனம் சார்பாக அனைவரும் குரல் கொடுக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை அரசியல் தீர்வுக்கு தாய்லாந்து உலக ஆசிரியர்கள் மாநாட்டில் தீர்மானம்

(05.08.01)

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் நோர்வேயின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கான முயற்சியை துரிதப்படுத்தும்படி சிறீலங்கா ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று தாய்லாந்து நாட்டில் ஜொம்ரில் நகரில் நடந்த உலக ஆசிரியர்கள் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர். 'எடுயுகேசன் இன்ரநசனல்' (Education International) அமைப்பின் ஆதரவுடன் இம் மாநாடு நடத்தப்பட்டது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் ஸ்தாபக தலைவர் திரு. எம்.பி.மென்டிஸ் மற்றும், இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் ஸ்தாபக தலைவர் திரு. ஸ்ரான்லி பெரேரா ஆகியோர் இலங்கை சம்பந்தமான தீர்மானத்தை பிரேரித்தனர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளரான திரு. மகாசிவம் தீர்மானத்தை வழிமொழிந்தார். இத் தீர்மானம் ஒரு வாரத்திலுள் சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

# மேஜர் பட்றிக் வீரச்சாவு

(05.08.01)

மன்னார் பள்ளிமுனையில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தின்போது மேஜர் பட்றிக் அல்லது சத்தியசீலன் என்றழைக்கப்படும் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த சந்தணம் நேசகுமார் என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

இதேவேளை, அம்பாறை திருக்கோவிலில் 29ம் திகதி சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலின்போது வீரவேங்கை கவாஸ்கர் அல்லது அருணசீலன் (மாணிக்கம் ரவிக்குமார் - அம்பாறை), 2ம் லெப். புஸ்பானந்தன் (தட்சணாமூர்த்தி தவநேசன் - அம்பாறை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

01.08.01 முள்ளிக்குளம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் துணைப்படை வீரர் வசீகரன் அல்லது பூங்கண்ணன் (காந்தராசா வசீகரன் - திருமலை) என்பவர் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளார். நாகர் கோவில் பகுதியில் தவறுதலான வெடிவிபத்தின்போது அழகினியன் என்றழைக்கப்படும் (சின்னத்துரை நேசராசா -யாழ்.) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

# குடியேற்ற காவல் படையினர் மீது தாக்குதல்

## - ஐவர் பலி -

(05.08.01)

பொலநறுவை வெலிக்கந்தவிலுள்ள நாகஸ்கன்ன கிராமத்தில் கடந்த செவ்வாயன்று காலை 9 மணியளவில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்து சிறீலங்கா ஊர்க்காவல் படையினர் கொல்லப்பட்டனர். வெலிக்கந்த பொலிஸ் நிலையத்திலிருந்து நாகஸ்கன்ன சிங்கள குடியேற்றக் கிராமத்திற்கு காவலுக்கு சென்ற ஊர்க்காவல் படையினரே இடைமறித்து விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டனர். இச் சம்பவத்தையடுத்து இப் பகுதியை சுற்றியுள்ள பிரதேசங்களை சுற்றிவளைத்த படையினர் கடும் தேடுதல்களை நடத்தியுள்ளனர். இதேவேளை இத் தாக்குதலில் தம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்களின் விபரங்களையும் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். எஸ்-84 ரக பட் மொடல் துப்பாக்கிகள் 02, எஸ்-84-1 ரக துப்பாக்கிகள் 01, ரி-56-1 ரகத்துப்பாக்கி 01 மற்றும் ஏராளமான துப்பாக்கி ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 29ம் திகதி இரணை இலுப்பைக்குளம் இராணுவ காவலரண் பகுதியில் துப்புரவு வேலையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் பொலிசார் சுட்டுக்கொலை

(05.08.01)

சிறீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பான பிரதேசமான மன்னார் நகரப்பகுதியில் வைத்து பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த 31ம் திகதி காலை 10.30 மணியளவில் பிஸ்ரல் அணியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் உயிலங்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள கிளர்ச்சித்தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர் என சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சந்திரிகாவின் ஆட்சி நீடிக்க ஜே.வி.பி. ஆதரவு

(05.08.01)

சந்திரிகாவின் ஆட்சி தொடர்வதற்கு ஜேவி.பி. முன்நிபந்தனையுடன் ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அரசாங்கம் ஒரு வருடகாலம் ஆட்சியைத் தொடர்வதற்கு இடமளிக்கத் தயாராக இருப்பதாகவும், அரசுக்கு ஒரு வருடம் நன்னடத்தைக் காலமாக வழங்கப்படுமெனவும், இக் காலகட்டத்தில் முன்வைக்கப்படும் சில நிபந்தனைகளை அரசு நிறைவேற்ற வேண்டுமெனவும் கடந்த வியாழனன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் வெளியிட்ட கருத்தே சந்திரிகாவிற்கான ஜே.வி.பியின் ஆதரவை வெளிக்காட்டியுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அரசுக்கு வழங்கப்படும் ஒருவருட நன்னடத்தைக் காலத்துக்குள் 5 ஆணைக் குழுக்களை நியமிக்க வேண்டும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும், வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும், ஒரு வருடத்திற்கு அரசின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கப் புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், தொழில் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமிக்க வேண்டும் என்ற முன்நிபந்தனைகளை விதிப்பதாகவும் இப் பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, முன்நிபந்தனைகளுடன் ஒரு வருடகாலம் அரசாங்கம் ஆட்சியை தொடர்வதற்கான சமிக்ஞையை ஜே.வி.பி. வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் புரிந்துணர்வு அடிப்படையில் அரசாங்கம் தொடர்ந்து செயற்பட இடமளிப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியான நிலையில் பாராளுமன்றத்தில் 10 உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ள ஜே.வி.பி.யின் நிபந்தனையுடனான சமிக்ஞைக்கு சந்திரிகா அரசாங்கம் சாதகமான முறையில் இணக்கம் தெரிவிக்குமா என்ற பலத்த சந்தேகமும் எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

GLENMORE
PROPERTY SERVICES LTD

Sales | Lettings | Management | Mortgage advice

எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்

You have tried the rest, now come to the best

810 Harrow Road. Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040

website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220

your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

Pub.Lon

# அவுஸ்திரேலியா பொதுநலவாய மாநாட்டில் சிறீலங்கா மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## - சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு -

*(05.08.01)*

அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேன் நகரில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளும்போது இலங்கை உட்பட நான்கு நாடுகளில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதாக சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது. இலங்கை, மலேசியா, சிம்பாவ்வே மற்றும் கென்யாவில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவது குறித்து தொடர்ச்சியாக முறைப்பாடுகளைத் தெரிவித்துவந்த சர்வதேச மன்னிப்புச்சபை, அவுஸ்திரேலியா பிறிஸ்பேனில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் மாநாட்டின்போது கடும் எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பொதுநலவாய அமைப்பு நாடுகளில் அங்கம் வகிக்கும் 50 நாடுகளில் அரைவாசி நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றவுள்ளனர். இதன் போதே இந்த எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளதாக மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ள மலேசியப் பிரதமர் மஹதீர் மொகமட், சிம்பாவ்வே ஜனாதிபதி றொபேர்ட் முகாபே, கென்ய ஜனாதிபதி டானியல் அரப்மொய் மற்றும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளது.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பேச்சாளரான றோஸ் டானியல், இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பொதுநலவாய நாடுகளின் அமைப்புகளின் தலைவர்கள் உதவவேண்டும் என மன்னிப்புச் சபை இந்த மாநாட்டில் பங்குபற்றும் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது. அத்துடன் இந்த மாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக முக்கியமான பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். இதேவேளை, இந்த மாநாட்டில் பங்குபற்றும் மேற்படி தலைவர்களுக்கு எதிரான அமைதி எதிர்ப்பின்போது, மெழுகுவர்த்தியை ஏந்தியபடி ஆர்ப்பாட்ட ஊர்வலம் மேற்கொள்ள உள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

# ரெலோ அலுவலகம் மீது வரதர் குழு தாக்குதல்

*(05.08.01)*

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் ரெலோ அலுவலகம் மீது ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் குழுவைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதுடன், அங்கு நின்ற ரெலோக் குழுவைச் சேர்ந்தவர்கள் மூவரையும் பிடித்துச் சென்று தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் உள்ள ஐந்து தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் வைரவபுளியங்குளத்தில் உள்ள ரெலோ அலுவலகத்தில் கூடி, வரும் 8ம் திகதி நடைபெறவுள்ள பொதுக்கூட்டம் பற்றிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தபோதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இச் சம்பவத்தின் பின்னர் மன்னார் வீதியில் குருமண்காடு பகுதியில் ரெலோ குழுவைச் சேர்ந்தவர்களும் வரதர் குழுவைச் சேர்ந்தவர்களும் கைகலப்பில் ஈடுபட்டதாகவும் இதில் ரெலோவைச் சேர்ந்த இருவரும், வரதர் குழுவைச் சேர்ந்த இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவங்களையடுத்து, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் குழு பொறுப்பாளர்கள் இருவரையும் சிறீலங்கா இராணுவ இணைப்பதிகாரி தமது அலுவலகத்திற்கு அழைத்து விசாரித்ததாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகங்கள் அனைத்தும் இராணுவ உயரதிகாரிகளின் உத்தரவின்பேரில் இன்று சோதனையிடப்பட்டுள்ளதுடன், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் குழுவின் இடங்களிலும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சர்வஜன வாக்கெடுப்புக்குத் தடைவிதிக்க கோரி மனித உரிமை அமைப்பு மனுத்தாக்கல்

*(05.08.01)*

சிறீலங்கா அரசு மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்துள்ள சர்வஜன வாக்கெடுப்பைத் தேர்தல் ஆணையாளர் நடத்துவதற்கு இடைக்காலத் தடையொன்றை விதிக்கக் கோரும் மனுவொன்று மனித உரிமை அமைப்பு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த வாரம் தாக்கல் செய்துள்ளது. மனித உரிமை அமைப்பின் பணியாளர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாக்கல் செய்யப்பட்ட அம் மனுவில், இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பின் படி, இறுதி இறைமை மக்களிடமே உள்ளதாகவும், மக்கள் அந்த இறைமையைப் பாராளுமன்றத்திற்கு அளித்துள்ளதாகவும், இதனை எவராலும் இரத்துச் செய்ய முடியாது எனவும், அந்த உரிமையை எவரும் எடுத்துக் கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டுள்ள மனித உரிமைப் பணியாளர்கள், பாதுகாப்புக் காரணங்களைத் தவிர, வேறெந்தக் காரணங்களுக்காகவும் ஜனாதிபதி இவ்வாறு செயற்பட முடியாது. ஜனாதிபதியின் இவ்வாறான செயற்பாட்டை, பாராளுமன்றத்தின் செயற்பாட்டிலும் மக்களின் இறைமையிலும் 'குறுக்கீடு செய்யும் நடவடிக்கையாகவே' கருதவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

# மக்கள் பெருமளவில் உள்ள பகுதி மீது பெரும் தாக்குதல் நடாத்த சிறீலங்கா திட்டம்

*(05.08.01)*

நிலப்பிரதேசங்களை பெருமளவில் கைப்பற்றுவதை விட மக்கள் அதிகளவில் உள்ள பகுதிகளை கைப்பற்றும் திட்டத்துடன் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு சிறீலங்காப் படைகள் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இத்தாக்குதலுக்கான விசேட பயிற்சிகள் இராணுவப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன அண்மையில் தெரிவித்த கருத்தொன்று படையினரின் இத் திட்டத்தை வெளிக்காட்டியுள்ளதாகவும், இவரது கருத்து பெரும் நிலப் பிரதேசத்தைப் பிடிப்பதாக அல்லாமல் மக்கள் குடியிருப்புப் பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாக அமைந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதேவேளை, படையினர் மக்கள் பெருமளவில் வசிக்கும் பகுதிகள் மீது தாக்குதலை தொடுத்தால் பொது மக்கள் பெரும் உயிரழிவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினரால் கைது செய்யப்பட்டவர் சடலமாக ஒப்படைப்பு

*(05.08.01)*

சிறீலங்காப் படையினரால் கொக்குவில் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் சடலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளார். காலை 10 மணியளவில் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞரே மறுநாளான நேற்று சடலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் இளைஞனை ஒப்படைத்ததாகவும் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயம் அவ் இளைஞன் சயனைட் உட்கொண்டு உயிரிழந்ததாகவும் சிறீலங்காப் பொலிசார் கூறியுள்ளனர்.

மேற்படி இளைஞர் 25 வயது மதிக்கத்தக்கவர் எனத் தெரிவிக்கும் யாழ். செய்திகள், படையினரின் சித்திரவதையில் இவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

# 5 வயது மகனுடன் தந்தை கைது

*(05.08.01)*

வவுனியாவில் இருந்து கதிர்காமத்திற்குச் செல்வதற்காகச் சென்ற தந்தையும் அவருடைய 5 வயது மகனும் சிறீலங்காப் பொலிசாரினால் கடந்த 27ம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர். கந்தசாமி சிவராசா(31) மகன் சசிகரன் (5) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களது கைதுக்கான காரணங்கள் என்னவென்று தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கடற்படைத் தளத்தில் குண்டு வெடிப்பு

*(05.08.01)*

திருகோணமலை சிறீலங்கா கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பொன்றில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றுள்ளது. பயிற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்தபோதே இக்குண்டு தவறுதலாக வெடித்ததாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

உலகெங்கும் துரிதகதியில் உங்கள் பணத்தை உரியவர்கட்கு சேர்த்திட

World Wide Money Transfer IITAG Holding/ Innovative Independent Trust AG

இது ஒரு வரையறுக்கப்பட்ட சர்வதேச கூட்டு நிறுவனம். இவற்றின் கிளைகள் உலகெல்லாம் பரந்துள்ளன.

ஒரு மணித்தியாலத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் உங்கள் பணம் சேரவேண்டியவர்களிடம் அனுப்பிவைக்கவும், பிரயாண காசோலைகளை பெற்றுக்கொள்ளவும், அனுமதிபெற்ற நிறுவனம். இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து, டென்மார்க், முதலிய நாடுகளுக்கு சட்டபூர்வமாக அனுப்பிவைக்கவும், பெற்றுக்கொள்ளவும்...

தொலைபேசி இலக்கங்கள்: தலைமை அலுவலகம் சுவிற்சர்லாந்து 0041 81 354 99 11, 354 99 12. ஜேர்மனி 069 24 00 49 80

நீங்கள் உங்கள் இடங்களிலிருந்தே எங்கள் வங்கிக்கணக்கிற்கு பணத்தை செலுத்தி தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ பற்றுச்சீட்டையும் பணம் சேரவேண்டியவர்களினுடைய விபரங்களையும் அனுப்பிவைத்தால் குறித்த நேரத்தில் எங்கள் கிளைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

Head office - New Address - Tele Phone and Fax

சில வங்கிகளின் விபரம், Swiss: UBS AG Chur, 208-929016.06D, Germany: Commerzbank Frankfurt 030043 00 BLZ 500 400 00, Postbank: 17279-604 BLZ 500 100 60

தொடர்புகட்கு: IItag Holding/Innovative Independent Trust AG
7002 Chur-Switzerland http//www/iitag.com, Email:iitag@iitag.com
Tel:++41 81 354 99 11, 354 99 12 Fax: ++ 41 81 354 99 10
அல்லது அந்நாடுகளிலுள்ள எமது கிளைகள் அல்லது பிரதிநிதிகளிடம் தொடர்பு கொள்ளவும்.

# அவசரகாலச் சட்டம் காலாவதியான பின்னர் கைதானவர்களை எந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளீர்கள்?

**- வவுனியா பொலிசாரிடம் நீதிபதி இளஞ்செழியன் கேள்வி -**

*(05.08.01)*

சிறீலங்கா அரசின் அவசரகாலச் சட்டம், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாது நிறைவேறாமல் போனமை தெரிந்ததே. இந்நிலையில் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைதானவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியாவில் நடைபெற்றன. இதன்போது, அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை அந்தச் சட்டம் காலாவதியான பின்னரும் எந்தச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைத்திருந்தீர்கள்? எனக் கேள்வி எழுப்பியதுடன், இது குறித்து பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் குற்றத் தடுப்புப் பொலிசாரை பணித்தார்.

வவுனியாவில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 21 பேர் தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எம்.இளஞ்செழியன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் 21 பேரும் எந்தச சட்டத்தின் கீழ், யாருடைய உத்தரவின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறித்து நாளை (06.08.2001) நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குற்றத்தடுப்புப் பொலிசாருக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.

## கட்டுநாயக்கா தாக்குதல் குறித்து எங்களுடன் பேச என்ன இருக்கின்றது புலிகளுடன் அல்லவா பேசவேண்டும்!

**- ரெலோ சிறீகாந்தா -**

*(05.08.01)*

கட்டுநாயக்கா விமானநிலையம் மீதான புலிகளின் தாக்குதல் மற்றும் இன்றைய அரசியல் நிலைமை ஆகியவை குறித்து பேச்சு நடத்துவதற்கு வருமாறு சிறீலங்கா ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பை ரெலோ நிராகரித்ததற்கான காரணத்தை சிறீகாந்தா வெளியிட்டிருக்கின்றார். அதில் கட்டுநாயக்கா தாக்குதல் குறித்து ஜனாதிபதியுடன் நாங்கள் பேசுவதற்கு என்ன இருக்கின்றது? அவர் புலிகளுடன் அல்லவா பேச வேண்டும்! எனத் தெரிவித்துள்ளதுடன், இன்றைய சூழ்நிலையில் ஜனாதிபதியுடன் பேசுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று கருதுகிறோம்.

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணவேண்டும் என்ற உண்மையான எண்ணம், விசுவாசமான நோக்கம் சந்திரிகாவிற்கு இருக்குமானால் அவர், நாடாளுமன்றத்தை உடன் கூட்டவேண்டும். பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற அரசு அமைவதற்கு இடமளிக்கவேண்டும். சர்வஜன வாக்கெடுப்பைக் கைவிடவேண்டும். அமையும் புதிய அரசுடன் சேர்ந்து, யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் அரசியல் பேச்சுக்களை நடத்த முன்வரவேண்டும். புலிகளுடன் பேச்சு நடத்துங்கள் என்று தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்து நாம் அலுத்துவிட்டோம். இந்த சர்வாதிகார அரசுக்கு எதிராக ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து உறுதியுடன் குரல் கொடுக்கின்றோம். கொடுப்போம். அதற்காக ஐ.தே. கட்சி உட்பட சிங்களப் பேரினவாத சக்திகளிடம் ஏமாறவும் நாங்கள் தயாரில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

## குருதிச்சோகையினால் 272 பேர் பாதிப்பு

*(05.08.01)*

முள்ளியவளை மத்திய மருந்தக மகப்பேற்று மனையில் கடந்த மாதம் குருதிச்சோகையினால் பாதிக்கப்பட்ட 272 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். வன்னிப் பகுதி மீதான சிறீலங்கா அரசாங்கத்தின் தொடர்ச்சியான பொருளாதார தடை காரணமாக வறிய நிலையில் உள்ள வன்னி மக்களில் அநேகர் இவ்வாறாக போதிய ஊட்டச்சத்தின்றி குருதிச்சோகைக்கு இலக்காகி வருவது அதிகரித்த வண்ணமே உள்ளது.

இந்த வகையில் முள்ளிவளையில் இயங்கி வரும் மத்திய மருந்தக மகப்பேற்று மனையில் கடந்த ஜூலை மாதம் மட்டும் ஊட்டச்சத்தின்றி குருதிச்சோகைக்கு இலக்கான 272 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வன்னி பெருநிலப்பரப்பு வைத்தியசாலைகளுக்கான 3வது காலாண்டுக்குரிய மருந்து வகைகள் காலம் கடந்தும் இதுவரை வந்து சேராமையின் காரணமாக, மேற்படி பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகள் பலவற்றில் சாதாரணமான மருந்து வகைகளின் கையிருப்புக்கள் தீர்ந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. ஏற்கனவே முக்கியமான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதன் காரணத்தால் சம்மந்தப்பட்ட நோயாளர்கள் மருந்தின்றி பெரும் அவலங்களை சந்தித்து வருகின்றனர்.

## சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான வழக்குகள் 10ம் திகதி தீர்ப்பு!

*(05.08.01)*

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்காக சிறீலங்கா ஜனாதிபதி கொண்டுவந்துள்ள பிரகடனத்தைத் தள்ளுபடி செய்யக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 13 மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றன. இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் முடிவுற்ற நிலையில், எதிர்வரும் 10ம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என நீதியரசர்கள் அறிவித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., ரெலோ ஆகிய கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் தனிப்பட்டவர்கள் சார்பில் மொத்தம் 13 மனுக்கள் தாக்கலாகி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## நாகர்கோயில் பகுதியில் கிபீர் தாக்குதல்

*(05.08.01)*

நாகர்கோவில் பகுதிகள் மீது சிறீலங்கா விமானப் படையின் கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியுள்ளன. கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாட்கள் நாகர்கோயில் பகுதியில் இவ் வான்படைகள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளன. புலிகளின் நிலைகள் மீதே தமது வான்படைகள் தாக்குதல் நடாத்தியுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் தென்மராட்சி மற்றும் பூநகரிப் பகுதிகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதையடுத்து சிறீலங்கா விமானப்படைக்கு விடுதலைப் புலிகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 24ம் திகதி கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தில் சிறீலங்கா வான்படையின் கலங்கள் தாக்கியழிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்காவில் உயிரிழந்தவர்களின் உடல்களை ஒப்படைக்க நீதிமன்றம் தடை

*(05.08.01)*

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களை நீதிமன்ற உத்தரவின்றி எவரிடமும் ஒப்படைக்கக் கூடாதென நீர்கொழும்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதல் தொடர்பான விசாரணைகள் கடந்த புதனன்று நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாக்குதலில் உயிரிழந்தவர்களது உடல்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான மரண விசாரணைகள் முடிவுறும் வரை உடல்களை எவரிடமும் ஒப்படைக்க கூடாதென நீதிபதி உத்தரவிட்டார். முன்னதாக இவ் உடல்களை செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் போவதாக சிறீலங்கா படைதரப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் 4 படையினர் காயம்

*(05.08.01)*

தென்மராட்சியில் நுணாவில் மற்றும் கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை விடுதலைப் புலிகள் நடாத்திய ஆட்டிலெறித் தாக்குதலில் நான்கு படையினர் படுகாயமடைந்துள்ளதாக சிறீலங்கா விசேட ஊடகத் தகவல் நிலையம் கூறியுள்ளது.




லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் தனித்துவமான உணவகம்

சுவை அருவி

உங்கள் திருமண, பிறந்தநாள், மங்கலகரமான வைபவங்களுக்கு சுவைமிக்க உணவு வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும் இடம்!!

Suvai Aruvi
96, High Street,
Colliers Wood
London SW19 2BT

Srilankan & South Indian Restaurant

Tel: 020 8286 6677/020 8543 6266

# தமிழ் மக்களின் துயரங்களை வெளிக்கொணர பத்திரிகையாளர் முன்வரவேண்டும்

## – பேராசிரியர் அ.சண்முகதாஸ் –

(05.08.01)

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் படும் துன்பங்கள், துயரங்களை வெளிக்கொணர்வதில் பயிற்சி பெற்றுள்ள இளம் பத்திரிகையாளர்கள் முன்வர வேண்டும் என, யாழ் ஊடகவியலாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட 'பத்திரிகையாளர் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவமும், பத்திரிகையாளர் கௌரவிப்பும் விழாவில்' பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார். கடந்த வியாழனன்று மாலை நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. யாழ். ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் வேதவச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பேராசிரியர் சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான பத்திரிகையாளர் பயிற்சி நெறி நடத்தப்படுவது சிறந்ததாகும். இதை நடத்திய ஊடகவியலாளர் சங்கத்தின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதே. இந்த மண்ணில் ஒவ்வொரு பத்திரிகையாளரும் கௌரவிக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். அதேபோல் ஒவ்வொரு பத்திரிகையாளரும் தனது கடமையை உணர்ந்து தமிழ் மக்களின் தேவைகளை அறிந்து சேவையாற்ற வேண்டும். இதனை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு உரையாற்றிய யாழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் வேதவச்செல்வன், பத்திரிகையாளர்களாகப் பயிற்சி பெற்றுள்ள நீங்கள் இந்த மண்ணிலே மக்கள் படும் அவலங்களைத் துணிச்சலுடன் வெளிக்கொணர வேண்டும். குறிப்பாக வடக்குக் கிழக்கில் வாழும் பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கத்தினால் விருதுகளாகத் துப்பாக்கிக் குண்டுகளே வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் எந்த விருதையும் ஏற்கக்கூடிய விதத்தில் துணிச்சலாக இந்த மண்ணுக்குச் சேவையாற்ற வேண்டும். எமது பகுதியில் இளம் பத்திரிகையாளர்கள் புதிதாக உருவாக வேண்டும். பத்திரிகைத்துறை என்பது மிகவும் புனிதம் வாய்ந்த நடுநிலையான துறையாகும். இதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். இங்கு இளம் பத்திரிகையாளர்களை உருவாக்கும் விதத்தில் பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி எதுவும் வழங்கப்படாத நிலையில் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே எமது ஊடகவியலாளர் சங்கம் இந்த பயிற்சி நெறியை நடத்தியுள்ளது. இப்பயிற்சியைக் கொண்டு நீங்கள் இனிமேல் தொடர்ந்து உங்கள் சேவையை இந்த மண்ணுக்குச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மன்னாரில் போசாக்கு மேம்பாட்டுக் கருத்தரங்குகள்

(05.08.01)

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மன்னாரில் போசாக்கு மேம்பாட்டுக் கருத்தரங்குகள் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த சித்திரை மாதம் முதல் மீனவ, விவசாய கிராமங்களிலும், புனர்வாழ்வு நிலையங்கள், நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றில் நடைபெற்று வரும் இக்கருத்தரங்குகளில் போசாக்கின் அவசியம் குறித்து பொதுமக்கள் மத்தியில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

போசாக்கு பற்றிய போதிய அறிவின்மை காரணமாக இளந் தாய்மார்கள் எடைகுறைந்த சிசுக்களைப் பிரசவிப்பதுடன், பல்வேறு ஆரோக்கிய பிரச்சினைகளுக்கும் அவர்களும், அவர்களின் குழந்தைகளும் ஆளாகி வருகின்றார்கள். இந்த நிலைமை மாற்றப்படாவிட்டால், முழுமையான வளர்ச்சி குன்றிய ஒரு சமுதாயத்தை உருவாக்கிய பழிச்சொல்லுக்கு நாம் ஆளாக நேரிடும் என்றும் கலந்து கொண்டு உரையாற்றிய சிரேஷ்ட விவசாய போதனாசிரியரும், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் பயிற்சியாளருமாகிய பீற்றர் சின்கிலேயர் தெரிவித்தார்.

# நாவாந்துறையில் மோட்டார் படையணி பொதுமக்கள் மீது தாக்குதல்

(05.08.01)

யாழ். நாவாந்துறை பகுதியில் கடந்த புதனன்று காலை சிறீலங்கா இராணுவ மோட்டார் சைக்கிள் படையணியினர் பொது மக்கள் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். இதன்போது மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறுக்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் வீடுகளினுள் புகுந்து பெண்களையும் இளைஞர்களையும் கடுமையாக தாக்கியுள்ளனர். இதன் போது மூன்று ஆண்கள் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். இதேவேளை, அப்பகுதி மக்கள் சம்பவ இடத்திற்கு திரளாக வரத்தொடங்கவே படையினர் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர். தனிப்பட்ட விரோத காரணங்களுக்காக சிலர் படையினரிடம் முறையிட்டமையை அடுத்தே அங்குவந்த படையினர் அப்பகுதி மக்களை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. இரு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் எதிரொலியாகவே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன.

# சிறீலங்காவுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தவேண்டும்

## - அமெரிக்க அதிகாரியிடம் ரெலோ -

(05.08.01)

சிறீலங்காவிற்கு ஆயுத தளவாடங்கள் வழங்குவதை அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய உலக நாடுகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என ரெலோ அமைப்பின் குழு ஒன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரியை நேற்றுச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது. ரெலோ செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் சென்ற இந்தக் குழுவினர், அரசு சமாதானம் என்று கூறிக்கொண்டு நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் படைக்கு ஆள்சேர்ப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது என்றும், இதனை ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய உலக நாடுகள் சிறீலங்கா அரசிற்கு தாராளமாக ஆயுதங்களை வழங்கி வருகின்றன என்றும், இந்நிலையானது யுத்தநிலை நீடிப்பதற்குக் காரணமாக அமைந்து வருகின்றது என்றும் அமெரிக்க அதிகாரியிடம் எடுத்துக் கூறியுள்ளனர்

# மிதிவெடியில் குடும்பஸ்தர் கால் இழப்பு

(06.08.01)

யாழ். கட்டைக்காடு பகுதியில் மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் தனது காலை இழந்துள்ளார். பளையைச் சேர்ந்த சின்னன் முருகேசு (46) என்பவரே தனது காலை இழந்துள்ளார். கட்டைக்காடு பகுதிக்கு வேலைக்குச் சென்ற போது சிறீலங்கா படையினரால் முன்னர் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை முழங்காலுக்கு கீழே இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

தற்போது புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**Pega Star -Co Verleger**
**Mr. A. Thevaraj**
**Böblinger str. 87**
**D-70199 Stuttgart/ Germany**
**Tel: 0049 + 711 - 6157028**
**Fax: 0049 + 711-6157030**
**E-Mail: theva@t-online.de**

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்

Fullname: ........................................
Date of Birth:.................. Time of Birth:.............
Place of Birth: ........................................
Address:........................................
........................................
City/ Date:.......................... Signature

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

Pub.Gr






Experienced Tamil Jeweller in London

western Jewellers

வெஸ்டன் ஜூவல்லர்ஸ்

Opening hours,
Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m

230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

# வவுனியாவில் புதைகுழியில் இருந்து பிரேதப்பெட்டி கொள்ளை

## எட்டுப் பேர் கைது

(06.08.01)

இறந்தவரின் புதைக்கப்பட்ட சடலத்தை தோண்டி அதன் பிரேதப் பெட்டியை திருடி இன்னொரு சடலத்திற்கு பயன்படுத்திய எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, வவுனியா பூந்தோட்ம் பகுதியில் கடந்த வாரம் தற்கொலை செய்துகொண்ட விஜிதா என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரின் சடலத்தை வைப்பதற்காக பணத்தினை கொடுத்து எட்டுப்பேரை பிரேதப்பெட்டி வாங்கிவரும்படி அனுப்பியுள்ளனர். அவர்களும் பிரேதப் பெட்டியினைக் கொண்டு வந்துள்ளனர். ஆனால் அம் மரண வீட்டுக்கு வந்த பெண்ணொருவர் அப் பிரேதப் பெட்டியில் சந்தேகம்கொண்டு அதுபற்றி ஆராய்ந்தபோது அது அண்மையில் மரணமான அவரது கணவரை வைத்து புதைத்த பெட்டி என்பதை அடையாளம் கண்டுகொண்டுள்ளார். அத்துடன் பெட்டியில் இருந்து துர்நாற்றம் ஒன்றும் வீசியதையடுத்து, கணவரைப் புதைத்த இடத்தை சென்று பார்த்போது உண்மை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பிரேதப் பெட்டி வாங்கிவரச் சென்ற எட்டுப்பேரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போது, பிரேதப்பெட்டி வாங்கக் கொடுத்த பணத்தை குடித்து முடித்துவிட்டு அப்பிரேதம் புதைக்கப்பட்டிருந்த குழியைத் தோண்டி தாங்கள் பிரேதப்பெட்டியை எடுத்து கழுவிச் சுத்தமாக்கிய பின்னர் கொண்டுவந்து கொடுத்ததாகக் கூறியுள்ளனர்.

# பூரணை தினத்தில் ஒரு மரணம்

## – நீதிமன்றம் அனுமதி

(05.08.01)

பிரசன்ன விதான என்பவரால் தயாரிக்கப்பட்டு சிறீலங்கா அரசினால் தடைவிதிக்கப்பட்ட பூரணை 'தினத்தில் ஒரு மரணம்' (புரஹந்த களுவர) என்ற சிங்களத் திரைப்படத்தை திரையிடுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் நஷ்டஈடாக இப்படத்தின் இயக்குநருக்கு தேசிய திரைப்படக் கூட்டுத்தபானம் ஐந்து இலட்சம் ரூபாய்களையும் வழங்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வடக்கு கிழக்கில் நடைபெறும் போரையும் அதன் விளைவுகளையும் சித்தரித்துத் தயாரிக்கப்பட்ட இப் படம் இராணுவத்தினரின் போரிடும் மனநிலையை பாதிக்கும் எனத் தெரிவித்து சிறீலங்கா அரசு தடை விதித்திருந்தது. ஆனால், இத் தடை உத்தரவு தனது சுதந்திரத்தையும், உரிமையையும் மீறுவதாக பிரசன்ன விதான உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இதன் தீர்ப்பு கடந்த வாரம் வழங்கப்பட்ட போதே, படத்தை திரையிடுவதற்கு அனுமதி வழங்கியதுடன் ஐந்து இலட்சம் ரூபாய் நட்டஈடும் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் கட்டுப்பாட்டு பகுதிக்குச் செல்ல பத்திரிகையாளர்களுக்கு மீண்டும் தடை

(06.08.01)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குச் செல்வதற்கு பத்திரிகையாளர்களுக்கு சிறீலங்கா அரசு மீண்டும் தடை விதித்துள்ளது. கடந்த சில மாதங்களின் முன்னர் இத் தடை நீக்கப்பட்டுள்ளதாக அரசதரப்பு கூறியிருந்த போதிலும் தற்போது மீண்டும் பத்திரிகையாளர்களுக்கான தடை விதிக்கப்பட்டுள்ளது. இத் தடை கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்பவர்கள் எழுத்து மூலமாக அரசுக்கு அறிவிக்கவேண்டும் எனவும் அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னரே அவர்களுக்கான முன்னனுமதி வழங்கப்படும் எனவும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். எனினும் இத்தடை எதற்காக கொண்டுவரப்பட்டது என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# பேருந்து விபத்தில் 12 பயணிகள் பலி

(06.08.01)

பதுளை மாவட்டத்திலுள்ள மொனராகலைக்கு அருகில் பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்கு உள்ளாகியதில் 12 பேர் பலியாகியுள்ளனர். இன்று மாலை இரத்தினபுரியிலிருந்து மொனராகலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் போது 12 பேர் பலியாகி ஐந்து பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்தப் பேருந்தில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்ற விபரங்களையும் பெறமுடியாதுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர். பலியானவர்களின் சடலங்கள் பதுளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# மன்னாரில் புலிகள் துண்டுப் பிரசுரம்

(05.08.01)

மன்னாரில் சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளால் நேற்று துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தேசத்தின் தேவையை உணர்ந்து வெற்றிக்காக அணி திரள்வோம் என்ற தலைப்பில் இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தாகவும், புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை இப்பிரசுரத்தை வெளியிட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மன்னார் நகரப்பகுதியிலேயே இவை அதிகளவில் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# அதிரடிப்படை சிப்பாய் தற்கொலை

(05.08.01)

அக்கறைப்பற்று சங்கமான் கண்டி சிறீலங்கா விசேட அதிரடிப் படை முகாமில் இருந்த அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டுதற்கொலை செய்து கொண்டுள்ளார். கடந்த சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இவரது தற்கொலைக்கான காரணம் என்ன என்று தெரிவிக்கப்படவில்லை.

# வைத்தியசாலைக்குள் நுழைந்து கடித்த விசர் நாய்

(05.08.01)

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த விசர்நாய் ஒன்று அங்கிருந்த இருவரை கடித்து காயப்படுத்தியுள்ளது. இன்னொருவரை கடிப்பதற்கு துரத்திய சமயம் வைத்தியசாலை ஊழியர்களால் நாய் அடித்துக் கொல்லப்பட்டுள்ளது. காயமடைந்த வைத்திய பரிசோதகரான வேலாயுதபிள்ளை ரவீந்திரன்(50), வல்லிபுரம் வசந்தமலர்(29) ஆகிய இருவருக்கும் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. யாழ். வைத்தியசாலைக்குள் கட்டாக் காலிகளாகத் திரிந்த 15 நாய்கள் கடந்த இரு வாரங்களின் முன்னரே நஞ்சூட்டி அழிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# டக்ளஸ் அழைப்பிற்கு கிராம சேவகர்கள் மறுப்பு

(06.08.01)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம சேவையாளர்களைக் கருத்தரங்கு மற்றும் சில தேவைகளுக்கும் தம்முடன் கதைக்க வரும்படி சிறீலங்கா அரசின் கூலிக் குழுவைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா விடுத்த அழைப்பை கிராம சேவகர்கள் நிராகரித்துள்ளனர். தமக்கு நிர்வாக ரீதியில் அரசாங்க அதிபரே அழைப்பு விடுவிக்க முடியும் என்றும் டக்ளஸ் எமக்கு பொறுப்பான அமைச்சர் இல்லை என்று தெரிவித்தே இவ் அழைப்பை நிராகரித்துள்ளனர்.

# சூட்டுக் காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலம் ஒப்படைப்பு

(05.08.01)

மட்டு. வாழைச்சேனை வைத்தியசாலையில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்களை சிறீலங்கா இராணுவத்தினர் கடந்த புதனன்று ஒப்படைத்துள்ளனர். வழக்கம்போல் சுட்டுக் கொல்லப்பட்ட இருவரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என படையினர் தெரிவித்தே இச் சடலங்களை ஒப்படைத்துள்ளனர். இரு உடல்களிலும் பலமான துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# கிளாலி காவலரண் மீது கைக்குண்டு தாக்குதல் 3 படையினர் காயம்

(06.08.01)

கிளாலிப் பகுதியில் இராணுவத்தினரின் காவலரண் ஒன்றின் மீது கடந்த .வெள்ளிக்கிழமை இரவு விடுதலைப் புலிகள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று படையினர் படுகாயமடைந்துள்ளதாக சிறீலங்கா விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. இரவு 11 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

# பூவரசங்குளத்தில் குண்டு வெடிப்பு

(06.08.01)

வவுனியா மன்னார் வீதியில் பூவரசங்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் முன்னர் வைத்திருந்த குண்டொன்று பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலை 5.30 மணிக்கு இக் குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது. இந்தக் குண்டு வெடிப்பில் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரியவருகிறது.



# தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலப் பெயரா? திரையரங்கு முன்னால் போராடுவோம்!

## - தமிழ் தன்னுரிமை இயக்கம் -

தமிழ் மக்களுக்காக தயாரிக் கப்படும் தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலப் பெயர் வைப்பதா? மீறிச் செயற்பட்டால் திரை அரங் குகள் முன் போராட்டம் நடத்து வோம் என தமிழ் தன்னுரிமை இயக்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக பொதுமக்களுக் கும், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் திரையரங்குகளுக்கும் விளக்கி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளது. அதில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களுக்காக தயாரிக் கப்படும் தமிழ்த் திரைப்படங்க ளின் பெயர்களை ஆங்கிலத்தில் வைப்பது தமிழ் மொழிக்குச் செய் யும் மிகப்பெரும் துரோகமாகும். தமிழ் மொழியை வைத்து புகழை தேடிக்கொள்ளும் இயக்குநர்க ளும், தயாரிப்பாளர்களும் தங் கள் படைப்புகளுக்கு தமிழில் பெயர் வைக்காமல் லவ்லி, தோஸ்த், லூட்டி, டைம், சிடி சன், பவர் ஆப் உமன், போன்ற ஆங்கிலப் பெயர் வைப்பதை தமிழ்த் தன்னுரிமை இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது.

ஆங்கில மொழி திரைப்படங் களைப்போல் பல விந்தைகளை தமிழில் தயாரித்து அளிப்பதே சிறப்பு என்பதை மறந்துவிட்டு ஆங்கிலத்தின் மேல் மோகம் கொள்வது தவறு. தங்களுக்கு ஆங்கிலத்தின் மேல் அளவு கடந்த நம்பிக்கை இருக்குமேயா னால் அவர்கள் தமிழில் படம் எடுப்பதை நிறுத்திவிட்டு, ஆங் கில படங்களை எடுத்து வெற்றி பெறட்டும். அதன் வாயிலாக தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற் கும் பெருமை சேர்த்தவர்களாக போற்றப்படுவார்கள். அதை விடுத்து தனித்து இயங்கும் தமிழ் திரைப்படத்துறையில் நஞ்சு கலப்பதுபோன்று ஆங்கில பெயர் வைப்பதும், ஆங்கிலம் கலந்து பாட்டு எழுதுவதும், ஆங்கிலத்தில் வசனம் எழுதி பேச வைப்பதும் நம்மை நாமே அழித்துக்கொள் வதற்கு ஒப்பாகும் என்பதை இன்றைய இளம்கலைஞர்கள் உணர வேண்டும்.

திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்குச் சாதனம் மட் டுமல்ல, அது நமது வீரத்தையும், அன்பையும் இறைபற்றையும் நமது கலாச்சாரத்தையும் போதி க்கும் சாதனமாகும். ஆனால் அது தமிழும் தமிழர் பண்பா டும் சீரழிக்கும் சாதனமாக மாற் றப்பட்டு வருகிறது. புதுமை என்ற பெயரால் தமிழ்த் திரை யுலகம் தன் பழமை சிறப்புகளை எல்லாம் இழந்து நிற்கிறது. மிகச் சிறந்த நடிக, நடிகையர்கள் மற் றும் தொழில்நுட்பக் கலைஞர் களை இந்தியா முழுவதற்கும் வழங்கிய தமிழ் திரைப்படத் துறை இன்று நிலைதடுமாறி இருப்பதைக்கண்டு எம்மைப் போன்றோர் வருத்தப்படாமல் இருக்க முடியாது.

எச். ஒடு என்றும் 'பவர் ஆப் உமன்' என்றும் தமிழ்படங்க ளுக்கு பெயர் வைத்து பூசை செய்வது என்பது ஒரு ஆங்கில படத் தயாரிப்பாளர் செய்யத் துணியாத செயலாகும். தமிழ் உணர்வுள்ள எவரும் இது போன்ற செயலை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதை யும் மீறி ஆங்கில பெயர் வைப்பு தொடருமானால் ஆங் கில பெயருடன் வெளியிடப்ப டும் திரைப்படங்கள் திரையிடப் படும் திரையரங்குகள் முன்பு ஆர்ப்பாட்டம் செய்வோம் என் பதை திரைப்பட தயாரிப்பாளர் களுக்கு முன் கூட்டியே எச்ச ரிக்கை விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# என்னை தாக்கிய பொலிசாரை பதவி விலக்க வேண்டும்!

## - கருணாநிதி -

தன்னை மிருகத்தனமாக தாக்கிய பொலிசாரை பதவி விலக்க வேண்டும் என தி.மு.க. கொண்ட முறைகள் பற்றி பத்தி ரிகையாளர்களிடம் பேசிய கரு ணாநிதி, தன்மீது பொலிசார் ஏற்



காயத்தை காட்டும் கருணாநிதி

தலைவர் கருணாநிதி தெரிவித் துள்ளார்.

தன்னை கைது செய்த போது பொலிசார் நடந்து படுத்திய காயங்களின் அடை யாளங்களையும் ஆடையைக் கழற்றி பத்திரிகையாளர்களுக்கு காட்டியுள்ளார்.

# நடிகராகும் பாடகர்

பிரபல பின்னணிப் பாடகர் ஹரிகரன் நடிகராக அறிமுகமா கின்றார். ஜெயதேவி நிறுவனம் தயாரிக்கும் ஆங்கிலம், தமிழ், ஹிந்தி ஆகிய மும்மொழிகளில் தயாரிக்கும் 'Power of women' என்ற படத்திலேயே கதாநாயக னாக அறிமுகமாகின்றார்.



ஹரிகரன்- குஷ்புவிடம் காட்சியை விளக்கும் இயக்குநர் ஜெயதேவி

பெண் ஒருவரால் இயக்கப் படும் இப் படத்தில், பாடகராக, ஓவியராக பாத்திரங்களை ஏற்று தான் நடிப்பதாக கூறியுள்ள ஹரிகரன் இப் படத்தின் பெரும் பகுதி கனடா நாட்டில் எடுக் கப்பட உள்ளதாகவும் கூறியுள் ளார்.

தொடர்ந்து வாய்ப்புகளும் ஏற்பட்டால் படங்களில் நடிக்க உள்ளதாகவும், எனினும் பாடல் பாடுவதுதான் தனது பிரதான இலக்கு என்பதையும் தெரிவித் ததுடன், காட்சிக்கு தேவைப் பட்டால் தன் 'குடுமியை' யும் இழக்கவும் தயார் என ஹரி கரன் படப்பிடிப்பின்போது இடம்பெற்ற பேட்டி ஒன்றில் பதில் அளிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.

# செப்டெம்பர் 16ல் தமிழகத்தில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு

## - நீதிமன்றம் அனுமதி வழங்கியது -

தமிழர் தேசிய இயக்கத் தலை வர் பழ.நெடுமாறன் தலைமை யில் கடலூரில் நடாத்த இருந்த ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டிற்கு முன்னைய தி.மு.க. அரசு தடை விதித்திருந்தது. இந் நிலையில் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இருந்தது. இவ் வழக்கு விசாரணைகள் கடந்த 30ம் திகதி முடிவடைந்தது. விசா ரணைகளின் முடிவில் மாநாட் டினை நடத்துவதற்கு அனுமதி வழங்கிய நீதிமன்றம், விரும்பிய நேரம் மாநாட்டை நடாத்தலாம் எனவும் தீர்ப்பு வழங்கியது.

இந்நிலையில் மறுநாளான 31ம் திகதி தமிழீழ விடுதலை ஆத ரவாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. பழ. நெடுமாறன் அவர்களின் தலை மையில் நடைபெற்ற இக் கூட் டத்தில்,

பெ. மணியரசன், தியாகு, சுப. வீரபாண்டியன், கி.த. பச் சையப்பன், தமிழப்பன், மு. அந்தாலனார், அரங்குணசேக ரன், பி. வெங்கட்டராமன், ருத்ரன், ஆ. ஜீவானந்தம், வர்லாசா வல்லவன், வியனரசு, சின்னப்பா தமிழன், கு.அர சேந்திரன், நா. சந்திரசேகர், பாப்பா, பன்னீர்செல்வம், கோ. தமிழேந்தி உள்பட 50க்கு மேற் பட்ட அமைப்புகளின் பிரதி நிதிகள் கலந்துகொண்டனர். அத்துடன் பல்வேறு மாவட்டங் களின் அமைப்பாளர்களும் கலந் துகொண்டனர்.

இதன்போது விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கு மிடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதற்காக நோர்வே அரசு மேற்கொண்டுள்ள முயற் சிகளை வரவேற்றதன் மூலமும் புலிகளுடன் பேசாமல் இனப் பிரச்சினை தீராது என சிங்கள அரசுக்கு அறிவுறுத்தியதின் மூலமும், ஈழத் தமிழரின் பிர திநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை இந்திய அரசு ஏற் றுக்கொண்டுள்ளது. இந் நிலை யில் விடுதலைப் புலிகள் இயக் கத்திற்கு இந்திய அரசு விதித் துள்ள தடை நீடிப்பது முரண் பாடானதாகும். எனவே இத் தடையை நீக்குமாறு இந்திய அரசை இக்குழு வற்புறுத்துகிறது. வருகின்ற 16.09.2001 ஞாயிறு அன்று சிதம்பரத்தில் ஈழத் தமி ழர் ஆதரவு எழுச்சி மாநாட்டி னையும் தமிழீழ விடுதலை ஆத ரவாளர் ஒருங்கிணைப்புக் குழு வின் 10வது ஆண்டு நிறைவு விழா வையும் மாநிலந் தழுவிய மாநா டாக நடத்துவது என இக்குழு தீர்மானிக்கிறது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இராஜினாமா முடிவை கூட்டணி வற்புறுத்தலால் வாஜ்பாய் கைவிட்டார்

பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யப் போவ தாக கடந்தவாரம் அறிவித்த பிர தமர் வாஜ்பாய் தேசிய ஜனநா யகக் கூட்டணிக் கட்சிகளின் வற்புறுத்தல் காரணமாக தனது முடிவை கைவிட்டுள்ளார். முன் னதாக பல்வேறு ஊழல் புகார் களில் பிரதமர் அலுவலகத்திற்கு தொடர்பு இருப்பதாக ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள சிவசேன கட்சி பாராளுமன்றத்தில் கடு மையாக விமர்சித்த நிலையில் பிரதமர் வாஜ்பாய் இவ் அறி விப்பை விடுத்தார்.

இதேவேளை, இவ்விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத் தில் பேசிய பிரதமர்,

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் கூட்டத்திலும் நானே பிரதமராக நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். என் மீது முழு நம்பிக்கை இருப் பதாக தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றனர். பிரதமர் பத வியை விட்டு விலகப் போவ தாக நான் அறிவித்ததனால், சபாநாயகருக்கும் இந்த அவைக் கும் ஏற்பட்ட சங்கடங்களுக் காக நான் வருத்தம் தெரிவித் துக் கொள்கிறேன். இந்த அவையை அவமதிக்கும் எண் ணம் எனக்கு கிடையாது.

விருப்பம் தெரிவிப்பது என்பதை ஒரு பிரச்சினையாக ஆக்கி இந்த அவை முன் உடன டியாக கொண்டு வரக்கூடாது. இதை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனத் தெரி வித்தார்.


## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:

0148050214 / 0613342518

0607348051 / 0148385825

# பாரதியார் யானை மிதித்து சாகவில்லை

## - கொள்ளுப்பேரன் கூறுகிறார் -

புரட்சிக் கவிஞர் எனப் புகழ் பெற்ற பாரதியார் யானையால் தாக்கப்பட்டு நோய்வாய்ப்பட்ட நிலையில் மரணமடைந்ததாகவே இதுவரை கூறப்பட்டு வந்தது. இந்நிலையில் பாரதியார் யானை மிதித்ததால் சாகவில்லை என அவரது கொள்ளுப்பேரனான ராஜ்குமார் என்பவர் தெரிவித்துள்ளார். கர்நாடக இசைக் கலைஞரான ராஜ்குமார் மேட்டூரில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு ஒன்றில் இதனைக் கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் இது பற்றி கூறுகையில்,

நான் கடந்த 25 வருடங்களாக கச்சேரி செய்து வருகிறேன். எவ்வளவு என்று கணக்கு வைக்கவில்லை. ஆரம்ப காலங்களில் சினிமாவில் பாடியுள்ளேன். சமீபத்தில் பாடவில்லை. கன்னட மொழியில் அதிக பாடல்கள் சினிமாவில் பாடியுள்ளேன். தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் போன்ற மொழிகளிலும் பாடல்கள் பாடியுள்ளேன். கர்நாடக இசைக்குத்தான் முக்கியத்துவம் த்ந்து பாடி வருகிறேன். தொடர்ந்து அப்படித்தான் செய்வேன். கர்நாடக இசையின் மூலம் எல்லோரையும் திருப்திப் படுத்த வேண்டும் என்பதே எனது எண்ணம். நான் பாரதியின் கொள்ளுப் பேரனாக பிறந்து இருப்பதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். 1921ம் ஆண்டே அவர் இறந்துவிட்டார். அவரை பார்க்க வில்லையே என்ற ஏக்கம் எனக்கு உண்டு. சமீபத்தில் வெளிவந்த 'பாரதி' மிக அருமையாக எடுக்கப்பட்ட படம். இந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் என்னிடமும் எனது அம்மாவிடமும் பாரதி படக் கதையை படித்துக் காட்டினார்கள். மிகவும் நல்ல முறையில் படத்தை எடுத்து வெளியிட்டுள்ளார்கள்.

எனது தாத்தா யானை மிதித்து இறந்துவிட்டதாக பலரும் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இது தவறாகும். அவர் வாழைப்பழம் தினசரி கொடுத்து வந்த யானை திடீரென மதம் பிடித்து அவரை கீழே தள்ளி விடுகிறது. அவர் யானையின் இரண்டு முன் கால்களுக்கிடையில் சிக்கிக் கொள்கிறார். உடனே அவரது நண்பர் கூழை கண்ணன் என்பவர் தாத்தாவை பிடித்து இழுத்து காப்பாற்றினார். பின்னாளில் உடல் நலக் குறைவினால்தான் தாத்தா இறந்து உள்ளார். இதுதான் உண்மை எனக் கூறினார்.

# ஊழல் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் எந்த அரச பதவியும் வகிக்க முடியாது

## - உச்ச நீதிமன்றம் தீர்ப்பு -

ஊழல் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் எந்த பதவியும் வகிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் பரபரப்பான தீர்ப்பு அளித்துள்ளது. ஊழல் வழக்கில் தண்டனை பெற்று தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்த ஜெயலலிதா, தமிழகத்தில் ஆளுநராக இருந்த பாத்திமா பீவியால் முதல்வராக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், தீர்ப்பு நிறுத்தி வைக்கப்படும் வரை ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற பொது ஊழியர் பதவி எதிலும் நீடிக்க கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இது குறித்த விவரம்:

அரசு அலுவலகத்தில் பணியாற்றி வந்த ஊழியர் ஒருவர் மீது ஊழல் வழக்கு தொடரப்பட்டது. இதில் அவர் குற்றவாளி என்று கூறி விசாரணை நீதிமன்றம் தண்டனை விதித்தது. இதையடுத்து அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து அவர் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

தான் குற்றவாளி என்று நிர்ணயித்து கீழ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிறுத்திவைக்க வேண்டும் என்று அவர் மனுவில் கோரி இருந்தார். தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டால்தான் தொடர்ந்து பதவியில் நீடிக்க முடியும் என்று அவர் கூறியிருந்தார். இந்த மனு மீது நீதிபதிகள் கே.டி.தாமஸ், எஸ்.என்.வைரவா ஆகியோர் அடக்கிய டிவிசன் பெஞ்சு விசாரணை நடத்தியது. நீதிபதிகள் நேற்று முக்கிய தீர்ப்பு அளித்தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:

பொது ஊழியர்கள் மீது ஊழல் வழக்கு தொடரப்பட்டு அதில் அவர்கள் குற்றவாளி என்பது நிரூபணம் ஆகிவிட்டால் அந்த குற்ற நிர்ணயத்தை விசாரணை நீதிமன்றமோ, மேல் நீதிமன்றமோ நிறுத்தி வைக்கக் கூடாது. மேல்முறையீட்டு மனு நிலுவையில் இருந்து, தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டபோதும் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்கக்கூடாது. தண்டனை பெற்ற பொது ஊழியருக்கு ஆதரவாக நீதிமன்றங்கள் செயல்படக் கூடாது. ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற பொது ஊழியர்கள் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தால் மேல் நீதிமன்ற நீதிபதிகள் தண்டனையை மட்டும் நிறுத்தி வைக்கலாம். ஆனால் குற்றவாளி என நிர்ணயம் செய்து கீழ் நீதிமன்ற நீதிபதி அளித்த தீர்ப்பை நிறுத்திவைக்க கூடாது.

ஊழல் வழக்கில் ஒருவர் பெற்ற தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் அவர் குற்றவாளி என்று நிர்ணயித்து நீதிபதி அளித்த தீர்ப்பை ரத்து செய்யக் கூடாது என்பது மிக உயர்ந்த கொள்கை ஆகும். தன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களில் இருந்து மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படும்வரை ஒரு பொது ஊழியர் பதவியில் நீடிப்பது கூடாது. ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஒருவர் தொடர்ந்து பணியில் நீடித்தால், அந்த அலுவலகத்தில் பணியாற்றும் மற்ற பொது ஊழியர்களின் மனோ நிலை களங்கப்படுத்தப் படும். நேர்மையாகப் பணியாற்றும்பொது ஊழியர்களின் ஒழுங்கு முறையை சீர்குலைக்கும். பொது அமைப்புகள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை ஏற்கனவே நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஊழல் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் பதவியில் நீடித்தால் மக்களின் நம்பிக்கை மேலும் குறையும். எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்கிறோம். இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

# மதுரை மத்திய சிறையில் 28 இலங்கை மீனவர்கள் உண்ணாவிரதம்

தமிழகம் மதுரை மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 28 இலங்கை மீனவர்கள் தங்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இந்தியக் கடல் எல்லைக்குள் தவறுதலாக நுழைந்தபோது இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மீனவர்களே இவர்களாவர். இவர்களது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து இலங்கையிலுள்ள மனித கௌரவத்திற்கான மன்றம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அதில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 26 திகதி முதல் இந்த வருடம் ஜூன் மாதம் 11-ம் திகதி வரை இந்தியக் கடலோரக் காவல் படையினரால் 71 இலங்கை மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களது 14 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் தூத்துக்குடிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பின்னர் இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அதன் பின் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில், இந்திய மத்திய அரசு 43 மீனவர்களை விடுதலை செய்த போதிலும் அவர்களது படகுகளைத் தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளது. அதேநேரம், மிகுதி 28 மீனவர்களும் தொடர்ந்தும் மதுரைச் சிறைச்சாலையில் வாடுகிறார்கள்.

தங்களின் விடுதலை கோரி அவர்கள் விடுத்த கோரிக்கைகள் எதுவும் பலனளிக்காத நிலையில் கடந்த 30-ம் திகதி முதல் மதுரை மத்திய சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

# சென்னைத் தொடருந்தில் அனாதரவாக ஏ.கே-47

புதுடெல்லியில் இருந்து சென்னை வந்த தொடருந்து ஒன்றில் இருந்து அனாதரவாகக் கிடந்த பயணப்பொதி ஒன்றில் இருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் இரண்டை சென்னைப் பொலிசார் கண்டெடுத்துள்ளனர். இத் துப்பாக்கியுடன் தலா 26 ரவைகளுடன் மூன்று ரவைக் கூடுகளும் காணப்பட்டதுடன் கடிதம் ஒன்றையும் கண்டெடுத்துள்ளனர்.

அக் கடிதத்தில் இருந்து, டெல்லியில் இருந்து மும்பை செல்லும் இந்திய தேசிய லோக தள பாராளுமன்ற உறுப்பினர் அஜய் சிங் செதலாவிற்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவினரின் பயணப்பை என அடையாளம் காணப்பட்டது. எனினும் பயணப்பையை அவர்கள் தவற விட்டனரா அல்லது யாராவது திருடிக்கொண்டு வந்துள்ளனரா என்பது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# உலக தரம் வாய்ந்ததாக இந்தியா 'பியர்' தெரிவு

உலகத் தரம் வாய்ந்த 'பியர்' ஆக இந்தியாவில் தயாராகும் 'கோப்ரா' என்ற 'பியர்' தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இலண்டனில் உள்ள 'பியர்' வகைகளின் தரத்தை நிர்ணயிக்கும் 'மாண்டே' என்ற அமைப்பு இந்த ஆண்டின் சிறந்த உலகத் தரம் வாய்ந்த 'பியராக' கோப்ராவை தெரிவு செய்து தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் மைசூர் பகுதியில் தயாராகும் இவ் 'பியரை' புரூவரிஸ் நிறுவனம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறது. 1997ம் ஆண்டில் இருந்து பிரித்தானியாவிலும் இந் நிறுவனம் கிளை ஒன்றை திறந்து 'கோப்ரா' ரக பியர்களை தயாரித்து வருகிறது. இந்தியாவில் உற்பத்தி ஆகும் 'பியருக்கு' உலக அங்கீகாரம் கிடைத்தது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.


வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

**ATN Jewellery**

37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 020 8521 9767

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub.Lon.

# உலகச் செய்திகள்

## செச்சினியத் தலைநகர் ரஷ்யப்படைகளால் மூடப்பட்டது

(06.08.01)

செச்சினியத் தலைநகர் குரொஸ்னிக்கு செல்லும் சகல வழிகளையும் ரஷ்யப் படையினர் மூடியுள்ளனர். குரொஸ்னி யுத்தத்தின் 5வது நினைவினை ஞாபகப்படுத்தும் வகையில் செச்சினியப் போராளிகளால் தாக்குதல்கள் நடாத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே தாம் நகருக்கான போக்குவரத்துக்களையும் மூடியுள்ளதாக செச்சினியாவின் ரஷ்ய இராணுவத் தளபதி ஜெனரல் சேர்கை கிஸ்யுன் தெரிவித்துள்ளார். ரஷ்ய செய்தி நிறுவனத்திற்கு அவர் கூறுகையில், பாதுகாப்பினை இறுக்குவதன் மூலம் நகரின் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம். தற்போது எந்தவித நிலையையும் சமாளிக்கக் கூடிய வகையில் படையினர் தயார் நிலையில் உள்ளதாயும் அவர் கூறினார். 1994-96 சண்டைகளில் போராளிகளால் ரஷ்ய படைகள் துரத்தியடிக்கப்பட்டனர். ஆனால் 99ல் போராளிகள் மீண்டும் பின்வாங்கிக்கொண்டனர். ஆனால் தினமும் செச்சினியாவின் ஏதோ ஒரு பகுதியில் ரஷ்யத் துருப்பினர்மீது போராளிகள் தாக்குதல் நடாத்துகின்றனர். இம்முறை போராளிகளின் தாக்குதலுக்கு ரஷ்யத் தாங்கிகள் இலக்காகலாம் என நம்பப்படுகின்றது. கடந்த வார இறுதியில் இவ்வகையான பல தாக்குதல்கள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. நேற்று நடந்த ஒரு தாக்குதலில் ஒரு படையினர் கொல்லப்பட்டு, இரண்டு பேர் காயமடைந்தனர்.

அதேவேளை படையினர் பயணம் சென்ற மற்றொரு வாகனத்தின் மேல் தாக்குதல் நடாத்தப்பட்டு இரண்டுபேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய குடியேற்றவாசிகள் இனிமேல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள் — இத்தாலி

(06.08.01)

இத்தாலி இனிமேல் புதிய குடியேற்றவாசிகளை ஏற்றுக்கொள்ளாது என அந்நாட்டின் அமைச்சரும் தீவிர வலதுசாரி வடக்கு முன்னணியின் தலைவருமான உம்பர்டோ பொஸ்சி கூறியுள்ளார். இத்தாலியப் பத்திரிகையொன்றிற்கு அவர் அளித்தபேட்டியில் என்னைப் பொறுத்தவரை அடுத்த சில வருடங்களுக்கு நான் குடியேற்றவாசிகள் யாரையும் அனுமதிக்க மாட்டேன். நாட்டின் எல்லைகள் அவர்களுக்காக மூடப்பட்டிருக்கும். அநேகமான குடியேற்றவாசிகள் வேலைசெய்வதில்லை எனக் கூறினார். இத்தாலியில் வேலை செய்வார்கள் என்ற உறுதியின்படி குடியேற்றவாசிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். சட்டபூர்வமாக இவர்களது ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் நாட்டிற்குள் வந்தது முதல் பலர் எந்தவித வேலையையும் செய்யவில்லை என அவர் குற்றஞ்சாட்டினார். அந்த வகையில் 228,000 குடியேற்றவாசிகள் வேலை தேடுவோர் பட்டியலில் உள்ளனர். 108,000 பேர் சில வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். மீதமானோர் இதுவரை எந்தவொரு வேலையிலும் ஈடுபடவில்லை. குடியுரிமை அனுமதியை பெறுவதற்காக மட்டுமே அவர்கள் கையெழுத்திட்டுள்ளனர் என அவர் குற்றஞ்சாட்டினார். குடியுரிமை சம்பந்தமான முடிவுகளை தொழிலாளர் மற்றும் சமூக நல அமைச்சரான றொபேட்டோ மரோனியினாலேயே எடுக்கமுடியும். இவரும் இதே வடக்கு முன்னணியின் அங்கத்தவராவார். கடந்த-வியாழனன்று இத்தாலிய மந்திரி சபையில் கொண்டுவரப்பட்ட குடியுரிமை சட்டவிவாதங்களில் பொஸ்சி கலந்துகொண்டபோது மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இனிமேல் தொழில் ஒப்பந்தம் உள்ளவர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிதாக அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் சட்டத்தின்படி ஒருவரது தொழில் ஒப்பந்தம் காலாவதியாகும் வரையே அவரது குடியுரிமையும் இருக்கும். அவரது ஒப்பந்தம் காலாவதியாகி 48 மணி நேரத்தில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அல்லாவிடில் அவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவார்கள் என தனது நேர்காணலில் பொஸ்சி கூறினார். வேலை என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவே குடியேற்றவாசிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்கள். அவர்கள் அதைச் செய்யவில்லை என்கின்றபோது அவர்கள் வெளியேற்றப்படுவது சாதாரணமே என மேலும் அவர் கூறினார். இத்தாலிய தொழில் துறையில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து குடியேற்றவாசிகள் வருவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில், இத்தாலியில் குடும்பமாக உள்ளவர்கள் தங்களது உறவினர்களை வரவழைத்துக்கொள்வதில் தொடர்ந்தும் பழைய சட்டங்களே செயற்பாட்டில் இருக்கும் என நம்பப்படுகின்றது. ஐரோப்பாவில் மிகக் குறைந்த அளவிலான வெளிநாட்டினரை அதாவது தனது சனத்தொகையின் 2.5 வீதத்தினை, 1.5 மில்லியன் பேரை மாத்திரமே இத்தாலி கொண்டுள்ளது.

## அரச மாளிகையில் மேகாவதி

(06.08.01)

இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மேகாவதி சுகர்னோபுத்திரி திங்களன்று தனது உத்தியோகபூர்வ ஜனாதிபதி அலுவலகத்தைச் சென்றடைந்தார். அரச மாளிகையில் அமைந்துள்ள இவ் அலுவலகத்தை விட்டு முன்னாள் ஜனாதிபதி வெளியேற மறுத்ததால் ஒருவார காலம் அவர் தற்காலிக அலுவலகத்திலே செயற்பாடுகளை மேற்கொண்டார். இந்தோனேசியாவின் ஸ்தாபக ஜனாதிபதியாக சுகர்னோவின் மகளான இவர் இம்மாளிகையிலேயே வளர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 23ம் திகதி நாட்டின் தேசிய சபை ஜனாதிபதி அப்துர் ரகுமானின் வெளியேற்றத்திற்காக வாக்களித்தது. இதனை அவர் சட்ட விரோதமானது என மறுத்திருந்தார். ஆனால் 3 நாட்களின் பின் அவர் பதவியிலிருந்து வெளியேறினார். இதுவரை காலமும் உதவி ஜனாதிபதியாகவே இருந்துவந்த அவரது பதவி ஹம்சா ஹஸ்சினால் நிரப்பப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியை அமெரிக்க தூதுவர் றொபேட் ஜெல்பார்ட் முதலில் சந்தித்தார். அதனையடுத்து முன்னைய அதிபர் வாகிடினால் தூக்கியெறியப்பட்ட முப்படைத் தளபதி ஜெனரல் விரண்டோ அவரைச் சந்தித்தார்.

## இஸ்ரேலியரின் தேடுதல் பட்டியலை பாலஸ்தீனம் நிராகரித்தது

(06.08.01)

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தேடப்படுபவர்களது பட்டியலை பாலஸ்தீன அதிகாரசபை நிராகரித்தது. இஸ்ரேலினால் மிகக் கடுமையாக தேடப்படுபவர்கள் என ஏழு பேர்களது பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களை கைதுசெய்யுமாறு பாலஸ்தீன அதிகார சபைக்கு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதனை முற்றாக நிராகரித்த பாலஸ்தீன செய்தித்துறை அமைச்சர் யாசர் அபேத் றபோ இஸ்ரேல் முதலில் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஆயுதம் தாங்கியவர்களை கைதுசெய்ய வேண்டும். ஏழு பாலஸ்தீனர்களை கைதுசெய்வதுபற்றி கோரிக்கை விடுவதற்கு முன் அவர்கள் அதனைச் செய்யவேண்டும். ஆயுதம் தாங்கிய குடியேற்றவாசிகள் 50 பேர் இவ்வாறு குழுக்களாகச் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாதமும், கொலைகளும் கண்டுகொள்ளப்படவில்லை. இவர்களை கைதுசெய்யும்வரை நாம் யாரையும் கைது செய்யமாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஞாயிறன்று இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சு பல்வேறு பாலஸ்தீன அமைப்புக்களைச் சேர்ந்த ஏழு பேரது பெயர்களை வெளியிட்டது. இவர்களையும் மேலும் பல இளைஞர்களையும் பாலஸ்தீன அதிகாரசபையினர் கைதுசெய்யவேண்டும் என்ற கோரிக்கையும் அப்போது விடப்பட்டது. இதற்கிடையே திங்களன்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சிற்கு முன்பாக ஆயுதம் தாங்கிய பாலஸ்தீன இளைஞர் ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் படையினர் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர்.

பாலஸ்தீன மேற்குக் கரையில் ஞாயிறன்று இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் சென்றுகொண்டிருந்த வாகனமொன்றின் மீது பாலஸ்தீன இளைஞன் ஒருவன் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் கொல்லப்பட்டு மூவர் காயமடைந்தனர். இதே தினம் இஸ்ரேலிய உலங்குவானூர்தி நடாத்திய ஏவுகணைத் தாக்குதலில் மேற்குக் கரைநகரான துல்கார்மில் ஹமாஸ் அமைப்பின் செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இவரது இறுதி ஊர்வலம் திங்களன்று நடந்தபோது பல்லாயிரம் மக்கள் அதில் கலந்துகொண்டனர்.

கடந்த 10 மாதங்களாக தொடர்ந்து வரும் மோதல்களில் இதுவரை 513 பாலஸ்தீனர்களும், 131 இஸ்ரேலியர்களும், 13 இஸ்ரேலிய அரபுக்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எட்னா எரிமலை அமைதியடைகிறது

(06.08.01)

இத்தாலியின் சிசிலியில் கடந்த இரண்டு வாரங்களாக புகையையும், தீக்குழம்பையும் கக்கிவந்த எட்னா எரிமலை தற்போது அமைதியடையத் தொடங்கியுள்ளது என அதனை அவதானித்துவரும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். சிசிலியின் பிரதான விமான நிலையத்தை திங்கட்கிழமை திறப்பது பற்றியும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர். இவ் விமான நிலையம் கடந்த வியாழனன்று நான்காவது முறையாக மூடப்பட்டது. உறக்க நிலையில் இருந்த எட்னா எரிமலை ஜூலை நடுப்பகுதியில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன் கடுமையான புகை மழையினைக் கக்கியது. இதன்னையடுத்து விமானநிலையம் மூடப்.

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR SARL

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

# வடகொரிய அதிபர் ரஷ்யா விஜயம்

*05.08.01*

வடகொரிய அதிபர் கிம் ஜொங் இல் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்யா சென்றார். தனது பிரத்தியேக ரயிலின் மூலம் அவர் ரஷ்யாவிற்கு சென்றடைந்தார். 1991ம் ஆண்டு சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்ததன் பின் ஓர் உலக அதிபருக்கு வழங்கப்படும் அதி உச்சப்பாதுகாப்பு கடவையான ரான்ஸ் சைபீரியன் வழியினூடாக இவர் மீண்டும் வடகொரியாவை சென்றடையவுள்ளார். இவர் சனியன்று ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டீன் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டார். அத்துடன் இரு அதிபர்களும் பல புதிய கூட்டுறவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். அதேவேளை அமெரிக்காவின்



ஏவுகணை பாதுகாப்பு கவச திட்டத்திற்கு எதிர்ப்பினையும் வெளியிட்டனர்.

கம்யூனிச கொள்கைகளால் தற்போது தலைமைப்படுத்தப் பட்டுள்ள வடகொரியா, தனது உணவுப் பற்றாக்குறையை நீக்கவும் மற்றும் வேறு பல தேவைகளுக்காகவும் வெளியுதவியினை பல வருடங்களாக எதிர்பார்த்துள்ளது.

இவருக்கு வழங்கப்பட்டதென ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

59 வயதான இவர் 1959ம் ஆண்டு தனது தந்தையான கிம் இல் சங்குடன் ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். கடந்த 26ம் திகதி ஆரம்பித்த இவரது பயணம் சுமார் 5500 மைல்களைக் கடந்துள்ளது. உலகின் மிக நீளமான புகையிரத

# மசிடோனிய சமாதான திட்டம் பூர்த்தி நிலையில்

*(06.08.01)*

மசிடோனியாவின் எதிர் எதிரான அமைப்புக்களுக்கிடையே மீண்டுமொரு பேச்சுவார்த்தை திங்களன்று ஆரம்பமாகியுள்ளது. இப்பேச்சுக்களில் கடந்த சில நாட்களாக நடந்துவந்த சந்திப்பில் முடிவாக்கப்பட்ட தீர்வுகளை இறுதிநிலைக்கு கொண்டு வருவது பற்றி ஆராயப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. நாட்டின் பொலிஸ் பிரிவில் இரு தரப்பினரதும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, சமாதானத் திட்டம் எந்த வேளையிலும் பூர்த்தியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

பூர்வீக அல்பேனிய சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் செகிர் பெக்தேஷி கூறுகையில், நாம் இறுதி ஒப்பந்தம் ஒன்றிற்கான நல்ல சந்தர்ப்பத்தை அடைந்துள்ளோம் என்றார். இவரது அமைப்பு நாட்டின் சட்ட உரிமைகளில் பரவலாக்கம் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், அடிப்படை உரிமைகளில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்றும் கூறியது.

பெரும்பான்மை ஸ்லாவிய மசிடோனியர்களுக்கும், சிறுபா-ன்மை அல்பேனியர்களுக்குமிடையே சிறு சிறு விடயங்களிலேயே தற்போது வேறுபாடுகள் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. மேற்கினால் வழிநடாத்தப்படும் அமைதிப் பேச்சுக்களில் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்புத் தலைவரான சாவியர் சொலானா கடந்த ஞாயிறன்று இருதரப்பினரும் முக்கியமான விடயங்களில் உடன்பாடுகளுக்கு வந்துள்ளதாக கூறினார். எந்த விடயங்கள் என்பதை விபரமாக அவர் கூறாதபோதிலும், பொலிஸ் சேவையில் இரு பிரிவு மக்களும் இணைந்து செயற்படுவது மற்றும் அல்பேனிய மொழி ஏற்றுக்கொள்ளப்படுவது போன்றவைகளில் உடன்பாடுகள் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சாவியர் சொலானாவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு சில மணி நேரங்களின் முன் பேசிய தீவிரவாதிகளின் தளபதி ஒருவர், தாம் கலந்து கொள்ளாத அம் மாநாட்டின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனக் கூறினார். மேலும் சர்வதேச மாநாடு ஒன்றே திறமையான முடிவுகளை மேற்கொள்ள சரியான ஒன்று என்றார்.

மசிடோனியாவின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளை அல்பேனியப் போராளிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டுள்ளனர். இப் பகுதியில் கடந்த சில நாட்களாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக அடுத்த இரண்டு வருடங்களில் சுமார் 1000 அல்பேனிய பொலிசாரை சேவையில் ஈடுபடுத்துவதென்று முடிவாகியுள்ளது. மசிடோனியாவின் 6000 பொலிசாரில் இதுவரை 5 வீதமானவரே அல்பேனியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நேட்டோ, சுமார் 3000 படையினரை அல்பேனியப் போராளிகளின் ஆயுதங்களை வுக்காக அனுப்புவதாக கூறியுள்ளது.

# ஈராக்கிய சிப்பந்திகளை அமெரிக்க கடற்படை காப்பாற்றியது

*(06.08.01)*

பாரசீகக் குடாவில் மூழ்கிக் கொண்டிருந்த ஈராக்கிய எண்ணைக்கப்பலொன்றின் சிப்பந்திகளை அமெரிக்கா தலைமையிலான கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர். கடந்த சனியன்று இக் கப்பல் 2083 தொன் ஈராக்கிய எண்ணையுடன் பயணித்துக்கொண்டிருந்த சமயம், கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது. ஹொண்டூராசில் பதிவு செய்யப்பட்ட ஜோர்ஜியோஸ் எனப்படும் அக் கப்பலில் சட்டவிரோதமான எண்ணெய் இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மிகவும் மோசமான நிலையில் இருந்த அக் கப்பல் மிக வேகமாக சென்று கொண்டிருந்தாயும், திடீரென ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் அது மூழ்கத்தொடங்கியதாயும் கூறிய கடற்படை அதிகாரியொருவர், அதில் இருந்த 12 மாலுமிகளையும் தாம் கைப்பற்றி, அவர்களை Uss enterprise எனும் விமானம்தாங்கிக் கப்பலுக்கு கொண்டு சென்று அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன என்றார். குவைத்திலிருந்து கிழக்காக 60 மைல் தொலைவில் அக் கப்பல் ஞாயிறு அதிகாலை கடலில் மூழ்கியது.

இவ் வருட ஆரம்பத்திலிருந்து இப் பகுதியில் 1472 கப்பல்கள் கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டுள்ளன. 748 கப்பல்கள் பூரணமான விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன. 62 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. 90ம் ஆண்டில் குவைத் ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து கடல்வழி கட்டுப்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டன. இக் கடற்படையில் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, இத்தாலி, கனடா உட்பட 12 நாடுகளின் படையினர் செயற்படுத்தப்பட்டுள்ளனர்.

# மதம் மாற்றியதாக குற்றச்சாட்டில் உதவி அமைப்பினர் கைது

*(06.08.01)*

ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள் தங்களால் கைதுசெய்யப்பட்டுள்ள உதவி அமைப்பொன்றின் செயற்பாட்டாளர்கள் முழுமையான விசாரணையின் பின்னரேயே விடுவிக்கப்படுவார்கள் என அறிவித்துள்ளனர். அமெரிக்காவை தளமாகக்கொண்டு இயங்கும் S.N.I எனும் அமைப்பினர் ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ் அமைப்பு கடந்த சில வருடங்களாக ஜேர்மனியரால் நடாத்தப்பட்டு வருகின்றது. மேற்படி அமைப்பினர் ஆப்கான் சிறுவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஞாயிறன்று தலிபான் அரசினால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களது அலுவலகமும் மூடப்பட்டது. ஆப்கானிஸ்தானில் மதம் மாற்றுதல் மரணதண்டனைக்குரிய ஒரு குற்றமாகும். மேற்படி அமைப்பைச் சேர்ந்த இரண்டு அமெரிக்கர்கள், நான்கு ஜேர்மனியர்கள், இரண்டு அவுஸ்திரேலியர்கள் உட்பட 24 செயற்பாட்டாளர்களை தலிபான் அரசு கைதுசெய்தது. இவர்களைப் பார்வையிட வெளியார் யாரையும் அனுமதிக்காத போதிலும் அவர்கள் நலமுடன் இருப்பதாகவும், சிறந்தமுறையில் பராமரிக்கப்படுவதாகவும் அரசு அறிவித்துள்ளது. மேற்படி அமைப்பினர் ஆப்கானிஸ்தானின் கிராமப்பகுதிகளில் மத மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டதாக தம்மிடம் முறைப்பாடுகள் உள்ளன என அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். அவர்களது அலுவலகத்திலிருந்து இரண்டு பைபிள்கள், ஆப்கான் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட கிறிஸ்தவ இலக்கியங்கள் மற்றும் இசைக்கருவிகள் போன்றவைகளை அரச அதிகாரிகள் கைப்பற்றினர்.

1990ம் ஆண்டு மேற்படி அமைப்பினர் பாகிஸ்தானிலுள்ள ஆப்கான் அகதி முகாம்களில் உள்ள சிறுவர்களை மதமாற்றம் செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளாகியிருந்தனர். அடிப்படைவாத இஸ்லாமியர்கள் அவ் அமைப்பின் பிராந்திய தலைவரை கொல்லப்போவதாயும் அச்சுறுத்தல் விடுத்தனர். அத்துடன் அவ் அமைப்பு தனது செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டது.

உதவி அமைப்பின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டதற்கு அப்பால், தலிபான் அரசினால் மேலும் 64 பேர்கள் மதமாற்ற வழிமுறைகளைப் பின்பற்றினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது இஸ்லாமிய மதக் கல்வி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.


NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER

* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42

| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் 3 லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது

உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub



SML
Royal Jewellery
287. High Street North
East Ham. Manor Park, London E12 6SL
Tel - 020 8472 5500 - Fax - 020 8472 5687

Leama GmbH
உங்கள் மொத்த, சில்லறைப் பொருட்கொள்வனவுக்கு...
மக்கள் கடை
Duisburger Str-168/170
46049 Oberhausen
Tel: 02082053650
Marienkirch Platz_5
41460_ Neuss
Tel: 02131546311
Rotebühl Str-139
70197_ Stuttgart

உங்கள் நிறைவான தேர்விற்கு...
V.G
Supermarket
165, Forest Road
Waltham Stow,
London E 17 6He
T.P & Fax - 020 8531 7459

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட
Katpakam cash & Carry
36. Loampit Hill
Lewisham Se 13 7SW
Tel - 020 86 94 88 10
ஞாயிற்றுக்கிழமைகளில் பங்கு ஆட்டிறைச்சி பெற்றுக்கொள்ளலாம்.

Millennium Super Market
⌘ உங்களின் வீடியோ, ஓடியோ, சீடிக்களின் தேர்வுகளிற்கும்
⌘ உங்கள் இல்லத் தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.
21, Plumsted Road
Woolwich
Tel - 020 8316 7105
Mobil - 07958305466

சீலன்ஸ்
இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
Seelans
332 & 334. High Street North
East Ham, London E 12-6Ph
Tp & Fax- 020 8471 5733

Palm Beach
RESTAURANT
10%OFF
ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

புதிய நிர்வாகத்தின் கீழ்
AMIRTHAAM

முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.
OPENING HOURS:
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm
200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tel: 020 8423 9666/ 020 8864 3636

TRAVEL AIR
உங்கள் பிரயாணத் தேர்வுகளை உங்கள் வசதிக்கேற்றவாறு கணினி வலையூடாக தேர்வு செய்யலாம்.
www.travel-air.de
LUISEN STR-46, 42103 WUPPERTAL.
Tel: 0202/4936921/0202/2443104-05
Fax: 0202/2443106
Handy: 0173-2850638

Book a Flight

Siva Travel
Worldwide Travel Service
கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய விசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!
பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்
மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்
Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch
SIVA TRAVEL AND FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN

Senith Computer Institute
Computer துறையில் வேலை செய்ய Swiss அரசாங்கத்தினால் வழங்கப்படும் Swiss Computer Diplome வகுப்புகள்
- Informatik Anwender - Office Supporter
- WebPublisher - WebMaster
அத்துடன் International Diplome வகுப்புகள்
A+ Techniker / Network +
MCP / MCSE (Microsoft Engineer) வகுப்புகளுக்கு
தொடர்புகளுக்கு: Militär str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

IITAG
உங்கள் சொகுசான மலிவான பிரயாணத்திற்கு

| Destination | April | Mai | june | july | Aug. | Sept. |
|---|---|---|---|---|---|---|
| Colombo | ab 1100 | ab1060 | ab1060 | ab1110 | ab1110 | ab 1110 |
| Bombay | ab 666 | ab 666 | ab 890 | ab 890 | ab890 | ab 890 |
| Cochin | ab 1290 | ab 1290 | ab 1290 | ab 1380 | ab 1470 | ab 1470 |
| Madras | ab 1240 | ab 950 | ab 1090 | ab1290 | ab1290 | ab 1360 |
| Delhi | ab 791 | ab 791 | ab 791 | ab 791 | ab 791 | ab 791 |
| Trivandrum | ab 1240 | ab 1050 | ab 1090 | ab 1275 | ab 1275 | ab 1275 |
| Kuala Lumpur | ab 666 | ab 666 | ab 888 | ab 1060 | ab 1060 | ab 1040 |
| Karachi | ab 773 | ab 773 | ab 773 | ab 773 | ab 773 | ab 773 |
| Denpasar | ab 1350 | ab 1340 | ab 1340 | ab 1630 | ab 1350 | ab 1440 |
| Hongkong | ab 649 | ab 649 | ab 649 | ab 649 | ab 649 | ab 649 |
| Singapur | ab 666 | ab 666 | ab 888 | ab 1060 | ab 1060 | ab 1060 |
| Bangkok | ab 666 | ab 666 | ab 817 | ab 856 | ab 856 | ab 856 |
| Dubai | ab 618 | ab 618 | ab 618 | ab 618 | ab 618 | ab 618 |
| Kuwait | ab 666 | ab 666 | ab 780 | ab 780 | ab 780 | ab 780 |
| Sydney | ab 1280 | ab 1319 | ab 1319 | ab 1440 | ab 1440 | ab 1440 |
| New York | ab 444 | ab 444 | ab 550 | ab 750 | ab 750 | ab 575 |
| Chicago | ab 444 | ab 444 | ab 692 | ab 905 | ab 905 | ab 692 |
| Toronto | ab 444 | ab 444 | ab575 | ab750 | ab 750 | ab 750 |
| London | ab 276 | ab 276 | ab 276 | ab 276 | ab 276 | ab 276 |



கட்டணம் 01.04.01 கட்டணமாற்றங்கள் காலத்திற்குக் காலம் விமான நிறுவனங்களின் மாற்றத்திற்கேற்ப மாற்றங்கள் ஏற்படும் என்பதை அறியத்தருகின்றோம். இங்கு குறிக்கப்பட்ட கட்டணங்கள் விமானநிலைய, பாதுகாப்பு மற்றும் வரிகள், அத்தோடு ஆசனப்பதிவுகளை விலக்குவதற்கான காப்புறுதிகள் உள்ளடக்கப்படவில்லை. இங்கு குறிப்பிட்ட கட்டணங்கள் நற்பெயருடைய விமான நிறுவனங்களினுடையவை மட்டுமே தரப்பட்டுள்ளன.

உங்கள் பிரயாணத்திற்குத் தேவையான Visa ஒழுங்குகள் Group வாரியாகவும் தனியாகவும், Hotels யாத்திரிகை பிரயாணங்களும் ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.
* * * * * *
IITAG Travel
Reichsgasse 61, 7002 Chur
Tel: 081 250 59 90.
Fax: 081 250 59 91.
Email: Travel@iitag.Com
http//: www.iitag.com



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# சந்திரிகாவின் செப்படிவித்தை

சர்வஜன வாக்கெடுப்பு எப்படியும் நடாத்தப்பட்டே தீரும் என சூளுரைத்த சந்திரிகா குழாம் தற்பொழுது அந்த வாக்கெடுப்பை நடாத்துவதா இல்லையா என்பது குறித்து இறுதி முடிவெதுவும் எடுக்கமுடியாமல் தத்தளிப்பதாகவும் சிலவேளைகளில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படாமல் போகலாம் எனவும் சிறீலங்காவில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க.வும் ஒன்றிணைந்து நல்லிணக்க [!?] அரசாங்கமொன்றை அமைக்க முன்வரும் பட்சத்தில் இத் தேர்தல் நடாத்தப் படமாட்டாது எனவும் செய்திகள் வெளிக்கிளம்பியுள்ளன.

பிரித்தானியாவின் குடியேற்றவாதத்திலிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் அக் காலகட்டத்தில் இருந்து இன்றுவரை சிறீலங்காவின் அரசியல்வாதிகள் நடாத்திய தகிடு தத்தங்களில் சர்வஜன வாக்கெடுப்பு புதிய காட்சியாக தற்பொழுது காட்சியளித்தாலும் அதிலும் அப்பட்டமான அரசியல் வியாபாரம் வேரூன்றி இருப்பதை வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதிகார துஷ்பிரயோகங்கள், இன ஒடுக்குமுறை, பேரினவாத நகர்வுகள், ஊழல் ஆகிய 'பண்புகளோடு' தற்பொழுது இழுத்திழுத்து நடைபோடும் பொதுஜன முன்னணி அரசு தனது அஸ்தமன காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்ததாலோ என்னவோ தற்பொழுது இலங்கைத் தீவிற்குப் 'புதிய அரசியல் எதிர்காலம்' ஒன்றை தரப்போவதான செப்படிவித்தைக் களத்தில் இறங்கியிருக்கின்றது. பாராளுமன்றக் கூட்டத்தொடர் திடீரென ஒத்திவைக்கப்பட்டமையும் அர்த்தமேதும் இல்லாதவகையில் ஏறக்குறைய 600 மில்லியன் பணத்தினை விழுங்கி சர்வஜன வாக்கெடுப்பொன்று அறிவிக்கப்பட்டிருப்பதும் இந்தச் செப்படிவித்தைக் களத்தின் நோக்கத்தினை நன்றாகவே புலப்படுத்துகின்றன. ஆனால் இந்த வாக்கெடுப்பு நடாத்தப்படுமா? இல்லையா? அந்த விடயம் ஒருபக்கம் இருக்க, இந்த வாக்கெடுப்பின் மூலமாக தமிழினத்தை மீண்டும் ஒருமுறை பதம் பார்த்துவிடவே சிங்கள தேசத்தின் சகல அரசியல் கட்சிகளும் மும்முரப்பட்டுக்கொண்டிருக்கின்றதும் நன்றாகவே புரிகின்றது.

இந்த வாக்கெடுப்பு நடாத்தப்பட்டதும் அரசியல் நிர்ணய ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் அரசியல் வாடை எதுவும் அதில் அடிக்காது எனவும் அரசியல் தீர்வு விடயத்தில் யாரும் தமது ஆலோசனைகளை இந்த ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கலாம்... என 'பொரிமாத் தோண்டியின்' கதையாக சந்திரிகா அளந்துகொண்டே சென்றாலும் சிறீலங்காவின் 'யதார்த்தநிலை' என்னவோ மிகக் கேவலமாகத்தான் இருக்கின்றது. கட்டுநாயக்கா தாக்குதலால் தனது பொருளாதாரத்தில் பெரும் ஆட்டத்தினை அந்தத் தேசம் சந்தித்தாலும் 'கெடுகுடி சொற்கேளாது' என்ற கதையாக இந்தத் தாக்குதலின் மூலமாக என்ன செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது? இவ்வாறான பேரழிவுகளைத் தவிர்ப்பதற்கு என்ன வழியினை நாடவேண்டும்? என்ற விடயங்களை புறந்தள்ளி தனது அழிவுப் பாதையிலேயே செல்லப்போவதாக அடம்பிடிப்பது அதற்கு அவலங்களைத் தவிர வேறு எதனையுமே பிரயோசனமாகத் தந்துவிடப்போவதில்லை.



# பார்வை

## இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய ஊகங்கள்(?)

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக புதிய நிலைப்பாடொன்றை இந்தியா எடுத்து வருவதாக சென்னையின் பிரபல நாளேடான *தினமணி* தனது ஆசிரியர் கருத்துரையில் ஊகம் வெளியிட்டுள்ளது. சென்னை தமிழர் எதிர்ப்பு ஏடான *தி ஹிண்டு*வின் கொழும்புச் செய்தியாளர் நிருபமா சுப்பிரமணியமும் இதே ஊகத்தை வெளியிட்டுள்ளார்.

யாழ். குண்டுவீச்சு (பூநகரி பகுதி மீதான குண்டுவீச்சு) பற்றி இந்தியா வெளியிட்ட கண்டனங்களுக்கு எதிரான சிறீலங்காவின் பதிலடி அறிக்கையை இப்பத்தியில் முன்பு பதிவு செய்திருந்தோம். சமீபத்தில் கட்டுநாயக்க விமானப்படைத் தளம் - விமான நிலையம் என்பன மீதான புலிகளின் தாக்குதல் பற்றி இந்தியா தெரிவித்த கருத்துக்களில் காணப்பட்ட மென்மையான தன்மை சிங்கள ஆய்வாளர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது. அமெரிக்கா போன்று புலிகளை சிறிதளவாவது தாக்கிக் கண்டனங்களை தெரிவிக்காது, வெறுமனே தனது அவதானத்தைத் தெரிவிப்பதுடன் இந்தியா நின்றுவிட்டது. சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரும் பதிலடியாக, அமெரிக்கா போன்று கண்டனங்கள் தெரிவித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு இந்தியாவை கண்டுகொள்ளாது விட்டுவிட்டார்.

இந்த நிலவரங்களை மையமாக வைத்தே *தி ஹிண்டு*வும், *தினமணி*யும் இந்தியாவின் சிறீலங்கா சார்புக் கொள்கை மாறிவிட்டது என்கின்ற ஊகத்தை வெளியிட்டுள்ளன.

*மேலோட்டமான பார்வையில் இந்திய அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மெதுவான மாற்றம் தமிழர்களுக்கு உற்சாகமூட்டவல்லது. ஆயினும், இந்தியா இன்னமும் பிரதானமான பிரச்சினைகளில் தமிழர்களின் நியாயப்பாட்டை பகிரங்கமாகவோ, சமிக்ஞைகள் மூலமோ ஏற்றுக்கொள்ளவில்லை.*

அதில் தனது உள்நாட்டு பரிமாணத்தில் தமிழீழ சிக்கலை அணுகும் மனோபாவம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. அதாவது, காஷ்மீர் சிக்கல் போன்ற சிக்கல்களின் பிடியில் தமிழீழ - சிறீலங்கா போரை இந்தியா அணுகுகின்றது. இது சிறீலங்காவுக்கும், சிறீலங்காவைத் தாங்கி நிற்கும் வல்லரசுகளுக்கும் சாதகமாக அமைந்தது. இதனால் இந்தியா தனது வெளிவிவகார நலன்களுக்கு என்ன தேவை என்பதை சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்து வந்தது. இதனால் சிறீலங்கா நாசூக்காகவும், திட்டமிட்ட முறைகளிலும் இந்தியாவின் தென் எல்லையில் 'உருவாக்கி வரும் அபாயத்தை' கணிக்க டில்லி தவறிவிட்டது.

**தற்போது இந்தியா வெளிக்காட்டும் மாற்றங்கள் அடிப்படையில் சிறீலங்காவின் அண்மைக்கால முரண்டு பிடிக்கும் தன்மையை தட்டிவைக்க எடுக்கும் குறுங்கால முயற்சியா, அல்லது இந்தியா தனது தென் எல்லை அபாயத்தை உணர்ந்து எடுத்த தீர்க்கமான முடிவா என்பது பெரும் கேள்வியாக எழுந்துள்ளது.**

*இவற்றிற்கிடையில் தமிழர்களின் நலன்களுக்காகவே இந்தியா தனது அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக தினமணி கூறுவது உண்மையாயின், இந்தியா தமிழீழத்தை அங்கீகரித்திட வேண்டும்!*

★ ★ ★

## கரும்புலிகள்: மேற்குலகின் குருட்டுப் பார்வை

பிபிசியின் சிறப்பு நிருபர் பெர்கல் கெயினி அவர்கள் பிரித்தானியாவின் *இன்டிப்பென்டன்ட்* ஏட்டில் கரும்புலிகள் பற்றிய தனது அவதானிப்புக்களை எழுதியுள்ளார். *சிறீலங்கா கொழும்பில் வைத்து மறைக்க முயலும் உண்மைகளை புலிகள் கொழும்புக்கே கொண்டு வருகின்றனர் என கரும்புலித் தாக்குதலை விபரிக்கும் இவர், தொன்மையான மேற்குலக இதிகாசங்கள் விபரிக்கும் 'மசாடா' மற்றும் 'தேர்மோபைலி' பகுதிகளில் கரும்புலிகளை ஒத்த வீரர்கள் மண்ணைக்காக்க உயிர்க்கொடை செய்த நிகழ்வுகள் இடம்பெறுவதாக ஒப்பிடுகின்றார்.* எனினும் தற் கொடைத் தாக்குதலை பிழையானதொரு நடவடிக்கை என விமர்சிக்கும் இவர், சிறீலங்கா அரசபடைகள் மக்கள் மீது புரியும் கொடூரங்கள் குறைவானவையல்ல என்கின்றார்.

சிறீலங்கா பற்றிய செய்திகளுக்கு மேற்குலக செய்தி நிறுவனங்களின் முதலாளிகள் ஆர்வம் காட்டாமையைச் சுட்டிக்காட்டியதுடன், கொழும்பில் நின்று போர்க்கள செய்திகளை சேகரித்து அனுப்புவதற்கு பல்லாயிரம் டொலர்களை செலவிட எவரும் தயாரில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

மேற்குலகின் நடுநிலை ஆய்வாளர்கள் கூட, 'தற்கொடை தாக்குதலின் தார்மீக நியாயத்தை' மேற்குலக சிந்தனைகளின் அடிப்படையில் அணுகின்றனர் என்பதை கெயினியின் ஆய்வு தெளிவுபடுத்துகின்றது. தற்கொடைத் தாக்குதலை வெறுமனே மூளைச்சலவை செய்யப்பட்டதொரு நடவடிக்கை என்கின்ற 'குறுகிய விபரிப்பு' இவர்களின் பார்வையில் காணப்படுகின்றது. மாறாக, அடக்குமுறையின் அதியுச்ச பாதிப்புக்களிலிருந்து மக்களைப் பாதுகாத்துக்கொள்ள எடுக்கப்படும் உச்சமான நிகழ்வு என்கின்ற புரிதல் மேற்குலக ஆய்வாளர்களிடம் கிடையாது. (*தி இன்ரிபென்டன்ட்* ஏட்டில் இதனை பெர்கல் கெயினி ஒப்புக்கொள்கின்றார்.) தற்கொடைத் தாக்குதலை விபரிப்பதற்கு அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளான 'தற்கொலைத் தாக்குதல்' மேற்குலக சிந்தனைகளின் மனோவியல் வெளிப்பாடேயாகும். அவர்கள் வாழ்வை வெறுத்து தற்கொலை செய்யும் தனிமனித நிலைப்பாட்டை இங்கே ஒப்பிட விழைகின்றனர்.

எனினும், வரலாறு கரும்புலிகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, கரும்புலிகள் வெளிக்காட்டும் உச்சமான அரசியல் - பண்பாட்டு குறியீடுகளை சரியானமுறையில் கற்றிட தமிழீழ சமூக ஆய்வாளர்களும், மக்களும் உதவிட வேண்டும்.

***தமிழீழ மக்கள் கரும்புலிகளை நாயகர்களாக நினைக்கின்றனர் என்பதையும், அவர்களை விமர்சித்தால், கடல்கடந்து வாழும் தமிழ் மக்களின் கோபமான பதில்கடிதங்களை தான் ஏற்கவேண்டிவரும் எனவும் கெயினி கூறுவதை நாங்கள் நிரூபித்திட வேண்டும்.***

★ ★ ★

## தொடரும் பதிலடி!

சுப்பிரமணிய சுவாமியின் அமெரிக்கப் பயணம் பற்றிய வம்புச் செய்திகள் தொடர்கின்றன. கடந்த வாரம் சுப்பிரமணிய சுவாமியின் அமெரிக்கப் பயணம் பற்றி *தி ஹிண்டு* வெளியிட்ட பொய்ச் செய்தியை இப்பத்தி விபரித்தது. அதன் தொடர்ச்சியை இவ்வாரமும் *தி ஹிண்டு* மேற்கொள்ள, அதற்கு இணையத்தள கட்டுரைகள் ஊடாக அமெரிக்கத் தமிழர்கள் பதிலடி கொடுத்துள்ளனர்.

*தி ஹிண்டு*வின் செய்திகளின் பிரகாரம், 21 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து தமிழீழ மக்களின் காந்தியப் போராட்டத்தை சுப்பிரமணிய சுவாமி வழிநடாத்த உள்ளார். ஆனால் பதிலளித்த அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்கத்தின் இணையத்தளம் ஈழத்தமிழர்களின் பங்குபற்றுதல்களுடன் அவ்வாறான முயற்சிகள் எதுவும் இடம் பெறவில்லை என்கின்றது.

சுப்பிரமணியசுவாமி, 1984ம் ஆண்டு ஈழத்தமிழர்களை ஏமாற்றி 50000 டொலர்களை ஏப்பம் விட்டதை சுட்டிக்காட்டிய இணையம், சுப்பிரமணிய சுவாமியின் நண்பர் ஒருவர், சுவாமி பற்றிக் கூறிய கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்துள்ளது.

- ராஜா

கடந்த 24ம் திகதி அதிகாலை கட்டுநாயக்கா பிரதேசத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலின் அதிர்வலைகள் இன்னமும் சிங்கள தேசத்தை விட்டு நீங்காதபோதிலும் அந்த நாட்டின் அதிகார வர்க்கமோ தனது சர்வஜன வாக்கெடுப்பு தேர்தலில் கொஞ்சம் மும்முரம்காட்டி நிற்கின்றது. ஏறக்குறைய ஒன்பது வருடங்களின் பின்னர் சிறீலங்கா தேசம் எதிர்கொள்ளும் இன்னொரு சர்வஜன வாக்கெடுப்புத் தேர்தல் இதுவாகும். ஆயினும் இத்தேர்தலில் வழமைபோலவே சிங்கள தேசத்தின் மாறாத அம்சமான எதேச்சாதிகாரம் நிச்சயமாக இடம் பெறப்போகின்றது என்பதை அறிகுறிகள் யாவுமே தெளிவாகப் புலப்படுத்திவருகின்றன. 1978ம் ஆண்டு தற்பொழுது சிறீலங்காவில் இருக்கும் அரசியல் யாப்பினை அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.

**சிறீமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதில்லை என்ற சின்னமாக பானையை அடையாளப் படுத்தினார். அத்தேர்தலில் விளக்கு வெற்றி பெற்று பானை தோற்றுக்கொண்டது.**

தில்லை என்பதே அந்த விடயமாகும்.

இம்மாதம் 21ம் திகதி நடாத்தப்படவுள்ள அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலமாக சந்திரிகா மக்களின் தேர்தலை தான் வெற்றியடைவதன் மூலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுக்கப்பட ஏதுவான சூழ்நிலைகள் தோன்றுமெனவும் குறிப்பிட்டு தமிழ் மக்களும், சகல சிறுபான்மை இனங்களும் தனக்கே வாக்களிக்கவேண்டும் எனவும் கோருகிறார்கள். சந்திரிகாவின் இந்தக் கூற்று அவரது அரசியல் சவடால்களின் இன்னொரு பகுதி. ஏற்கனவே வழங்கப்பட்ட சமாதானத்திற்கான சந்தர்ப்பங்களையெல்லாம் தனது பேரினவாத மமதை இராணுவ அடக்குமுறை ஆகியவற்றின் மூலமாக நசுக்கிய சந்திரிகா இன்று இந்தத் தேர்தல் மூலமாக தமிழ் மக்களுக்கு தீர்வினை வழங்கப்போவதாகக் காட்டிக்கொள்வதை அறிவிலிகள் கூட ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகத்திற்குரியதே. இலங்கைத் தீவின் இன்றைய பிரதான பிரச்சினை இனப்பிரச்சினையும்

# பானை காவிகளும் விளக்குப்பிடிப்பவர்களும்

ஜெயவர்த்தனா இவ்வாறான ஒரு தேர்தல் மூலமே அறிமுகப்படுத்தியிருந்தார். அதன்பின்னர் சிறீலங்காவில் ஆட்சி மாற்றங்கள் சில ஏற்பட்டபோதிலும் இன்றும் ஜே.ஆரின் அதேபாணி அரசியல்தான் தொடர்ந்தும் கோலோச்சுகின்றது. அன்று ஜே. ஆர். இவ்வாறான ஒரு தேர்தல் முறைமையினால்தான் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்தியிருந்தார். அந்த ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்து ஏறக்குறைய 23 வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் இன்று அந்த ஆட்சிமுறையை ஒழிக்கப்போவதாக கூறிக்கொண்டு இன்றைய ஜனாதிபதி சந்திரிகா இந்தத் தேர்தலை நடாத்தத்துணிகின்றார். இதில் வேடிக்கையான ஒரு விடயம் என்னவென்றால் 1982ம் ஆண்டு ஜே. ஆர். நடாத்திய இன்னொரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக அன்றைய பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்காக மக்களிடமிருந்து ஆணை கோரப்பட்டது. அந்தத் தேர்தலில் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நீடிக்கப்படுவதற்கான அடையாளமாக அதாவது ஆமென வாக்களிப்பதற்கு விளக்குச் சின்னம் அடையாளப்படுத்தப்பட்டது. அப்போது எதிர்க்கட்சியில் இருந்த சிறீமாவோபண்டாரநாயக்கா பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதில்லை என்ற சின்னமாக பானையை அடையாளப்படுத்தினார். அத்தேர்தலில் விளக்கு வெற்றிபெற்று பானை தோற்றுக்கொண்டது. ஆனால் எதிர்வரும் 21ம் திகதி நடைபெறவுள்ள சர்வஜனவாக்கெடுப்பில் அன்று விளக்கை ஆதரித்தவர்கள் இன்று பானையை ஆதரிக்க அன்று பானையை சொந்தம் கொண்டாடியவர்கள் இன்று விளக்கை ஆதரிக்கின்றார்கள். இது ஒரு வேடிக்கையான நிலைமையாக இருந்தாலும், இதன் மூலமாக சிறீலங்காவின் அரசியல் தார்ப்பரியமொன்றை நாம் உணர்ந்துகொள்ளலாம். அதாவது ஆட்கள் மாறினாலும் அவர்களின் அடிப்படை மனோநிலைகள் மாறுவடம் ஒரு கேள்வியை முன்வைக்கின்றார். அதாவது புதிய அரசியல் அமைப்பு ஒன்று வேண்டுமா? இல்லையா என்பதே அவர் முன்வைக்கும் அக்கேள்வி. இந்தக் கேள்வியின் தளத்தில் சிங்கள தேசத்தில் வழமைபோலவே கட்சிகளின் இழுபறிகள் ஆரம்பித்துவிட்டதுபோல தோன்றினாலும் இது வெறும் அரசியல் இழுபறியோ அல்லது அரசியல் யாப்பு தொடர்பான கேள்வியோ அல்ல. உண்மையில் இது இரு பேரினவாத கட்சிகளுக்கு இடையேயான அதிகார போட்டியாகும். இரண்டு பேரினவாத தரப்புகளிற்கும் தற்பொழுது வெறித்தனமாகப் பிடித்திருக்கும் பதவிமோகமே இத் தேர்தலின் அடிப்படையாகும்.

**அரசியல் யாப்புக்களில் திருத்தங்களையும் மேற்கொள்வதன் மூலமாக இந்தப் பாரிய பிரச்சினைகளுக்கு சந்திரிகா தீர்வினைக் காண முற்படுவதுபோல காட்டிக்கொள்வது அவரது நரித்தன அரசியலின் இன்னொரு விளைவு.**

இதற்கிடையே திட்டமிட்டபடி எதிர்வரும் 21ம் திகதி தேர்தல் நடாத்தப்பட மாட்டாது எனவும், ஐ.தே.கவும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியின் அனுசரணையுடன் தமக்கிடையேயான

## பேரம்

ஒரு உடன்பாட்டினைக் கண்டு அதன் அடிப்படையில் தேர்தலை இடைநிறுத்திவிடுவார்கள் எனவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த செய்திகள் உறுதிப்படுத்துவதுபோல கடந்த ஒரு சில நாட்களாக சிறீலங்காவிலிருந்து வெளிவரும் செய்திகளும் அமைந்துவிடுவதால் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற ஒரு கேள்வியும் எழுந்திருப்பதையும் மறுக்கமுடியாது. சந்திரிகா இத்தேர்தலைப் பற்றி குறிப்பிடும்போது இந்தத் சிங்களதேசத்தின் கொடூரமான யுத்தமும்தான் என்பது வெளிப்படையான விடயங்கள். ஆனால் இந்த பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வினைக்காண விரும்பாது அரசியல் யாப்புக்களில் திருத்தங்களையும் மேற்கொள்வதன் மூலமாக இந்தப் பாரிய பிரச்சினைகளுக்கு சந்திரிகா தீர்வினைக் காண முற்படுவதுபோல காட்டிக்கொள்வது அவரது நரித்தன அரசியலின் இன்னொரு விளைவு. மறுபுறத்தே இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக தன்னை தமிழ் மக்களின் காவலனாக காட்டிக்கொள்ள முனையும் ஐக்கிய தேசியக்கட்சி பச்சை பேரினவாதத்தையும் தமிழ் மக்கள் அறியாதவர்களல்ல. விடுதலைப் புலிகளோடு பேசவேண்டும் என ஐ.தே.கவின் தலைவர் ரணில் கூறிக்கொண்டாலும் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அவர் கைகளில் எதுவுமே இல்லை. அவரிடம் இருப்பதெல்லாம் இராணுவ ரீதியான ஒடுக்குமுறை தீர்வுதான். இன்று இந்தத் தேர்தலுக்காக அது தமிழ் மக்களைப் பார்த்து புன்முறுவல் பூப்பது போலக் காட்டிக்கொண்டாலும் அந்தச் சிரிப்பின் பின்னே புதைந்து கிடப்பதெல்லாம் அப்பட்டமான விஷம்தான். எது எப்படியோ தமிழர் தாயகத்திற்கு சிங்கள பேரினவாதம் இழைத்த கொடுமைகளுக்காக மனம் வருந்தி அதற்குப் பரிகாரம் காணுவதற்கு சிங்கள தேசம் முற்படாத வகையில் இந்தத் தேர்தல் மட்டுமல்ல, இனி எந்தத் தேர்தல் வந்தாலும் அத் தேசத்திற்கு விமோசனம் ஏற்படப்போவதில்லை.

# இந்திய அரசு தனது முந்தைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்திய அரசு தனது முந்தைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதாக தமிழகத்தில் இருந்து வெளியாகும் தினமணி நாளிதழ் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந் நாளிதழ் எழுதியுள்ள ஆய்வில் தெரிவித்திருப்பதாவது, இலங்கைத் தமிழர் பிரச்சினையை தனக்கு சம்பந்தமில்லாத வேற்று நாட்டு விவகாரம் என்பதுபோல இந்தியா கருதும் என்ற சிறீலங்காவின் எதிர்பார்ப்பு பொய்யாக ஆரம்பித்திருக்கிறது. இப்பிரச்சினைகளில் சர்வ கட்சிகளின் ஒத்துழைப்புடன் இந்திய அரசு ஓராண்டுக்கு முன் வகுத்த தேசியக் கொள்கையில் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை.

1. இலங்கையின் சிறுபான்மையினருக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு முழுப் பாதுகாப்பு
2. இனப்பிரச்சினைக்கு அமைதியான முறையிலேயே தீர்வு

என்ற இரண்டு உறுதியான நிலைப்பாடுகள்.

ஈழத் தமிழரின் பிரச்சனையின் அடிப்படை என்ன? மொழியுரிமை, முழு அளவிலான குடியுரிமை, சுயமரியாதையுடன் கூடிய வாழ்வுரிமை ஆகியவற்றுடன் முகவிலாசமாகிய தமிழ்ப் பண்பாட்டு வடிவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே

**திடீரென்று யாழ்ப்பாணப் பகுதியில் விமானத் தாக்குதலை சந்திரிகா அரசு உக்கிரப்படுத்தியதால் விபரீத விளைவு ஏற்பட்டது. கொழும்பிலுள்ள விமான நிலையத்தின் மீது புலிகள் பயங்கரத் தாக்குதல் நடத்தி பேரழிவை உண்டாக்கினார்கள்.**

ஈழத் தமிழர்கள் போராடி வருகின்றார்கள். தங்களுடைய சொந்த மண்ணில் இரண்டாம் தரக்குடிமக்களாக அவல வாழ்வு நடத்த அவர்கள் தயாராக இல்லை. மிதவாத அரசியல் தலைவர்கள் பலகாலம் எழுப்பி வந்த இந்த நியாயமான கோரிக்கையை கடந்த காலத்தில் பல்வேறு சிறீலங்கா அரசுகளும் அலட்சியத்துடன் ஒதுக்கித்தள்ளி வந்ததாலேயே, இப்பிரச்சினை உள்நாட்டுப் போராக விபரீத வடிவம் எடுத்தது. அதன் பிறகு இதுவரை எத்தனையோ தடவை பேச்சவார்த்தை நாடகங்கள் நடைபெற்றதுண்டு. ஆனால், ஒரு பலனும் ஏற்படவில்லை. இதற்கு முக்கிய காரணம், ஆளும் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் (இரண்டுமே பெரிய இனமாகிய சிங்களவர்களின் ஆதரவில் வேரூன்றி நிற்பவை) இப்பிரச்சனையில் ஒத்த கருத்துடன், தாராள மனப்பான்மையோடு, நீதியுணர்வுடன் நடந்துகொள்ளத் தவறி வந்திருப்பதே. அண்மையில் நோர்வேத் தூதர் எரிக் சோல்ஹெய்மின் சமரச முயற்சி தோல்வியடையக் காரணம் என்ன? ஈழத் தமிழருக்கு நீதி வழங்க அவர் கூறிய சில யோசனைகள் சந்திரிகா அரசுக்கு பிடிக்காமல் போனதுதான்!

இச் சூழலில் திடீரென்று யாழ்ப்பாணப் பகுதியில் விமானத் தாக்குதலை சந்திரிகா அரசு உக்கிரப்படுத்தியதால் விபரீத விளைவு ஏற்பட்டது. கொழும்பிலுள்ள விமான நிலையத்தின் மீது புலிகள் பயங்கரத் தாக்குதல் நடத்தி பேரழிவை உண்டாக்கினார்கள். இச் சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த புது தில்லி, யாழ்ப்பாணத்தில் தீவிர தாக்குதலில் சிறீலங்கா அரசு இறங்காமல் இருந்திருந்தால், இச்சம்பவம் நிகழ்ந்திருக்காது என்பது போன்ற தொனியில் கருத்து தெரிவித்தது. இதனால் சந்திரிகா அரசு திகைப்படைந்திருக்கிறது. சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வந்த சமரச முயற்சிகளைக் குலைத்துவிட்டு, அமைதிக்காக ஈழத்தில் போர் என்ற செப்படி வித்தையை இனி இந்தியா ஏற்றுக்கொள்வது சிரமமே. இதை உணர்ந்து கொண்டதாலேயே கொழும்பு அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்க வேண்டும். கலாச்சார அடிப்படையில் இந்தியாவுடன் இரத்த சம்பந்தமுடைய ஈழத் தமிழர்களின் தாயகம் சிதைவதை, உயிர்ப்பலிகள் தொடர்வதை இனியும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது என்பதை பாரதம் இப்பொழுது தெளிவுபடுத்தியிருக்கிறது. இது தில்லியின் பார்வையில் நல்ல மாற்றமே. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத் தாக்குதலுக்கான அறிகுறியை ஏற்படுத்தியுள்ள கட்டுநாயக்கா

சிறீலங்காவின் எந்தப் பகுதியும் அவர்களுக்கு பாதுகாப்பு அற்றது என்பதை, சிங்கள ஆட்சியாளர்களுக்கு உணர்த்திய கட்டுநாயக்கா தாக்குதலில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் அணிகள், கடல் வழியாக விமானத் தளத்திற்கு அண்மித்த பகுதியில் வந்து இறங்கின என்றும், ஏற்கனவே கொழும்பில் தங்கியிருந்த அணிகளுடன் இவர்கள் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு இறுதித் தாக்குதலுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. கட்டுநாயக்கா படைத் தளத்தினுள்ளும் விமான நிலையத்திலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவாயினும், அதனை மேற்கொண்ட அணிகள் எவ்வழியாக உள்ளே நுழைந்தன என்பதில் இன்னமும் குழப்பமே தொடர்கின்றது. சிங்களத்தின் பல ஏடுகள் பலவிதமான ஊகங்களை தெரிவித்துள்ள போதிலும், தாக்குதல் அணிகள் குராண ராஜ் பெர்னாண்டோ விளையாட்டு அரங்கத்திற்கும் விமானப்படைத் தளத்திற்கும் இடையே உள்ள குறுகிய, தடுக்கப்பட்ட இரகசிய வழி ஒன்றினை கண்டுபிடித்து, அதன் வழியாகவே உள்ளே புகுந்துள்ளன என்பது உறுதியாகத் தெரிகிறது. இப் பகுதியில் மைதானத்தின் எல்லையில் அடர்ந்த பற்றைப்பகுதிக்குள் பல பாதணிச் சோடிகளையும், தொலைத் தொடர்பு கருவி ஒன்றினையும் பாதுகாப்புப் படையினர் கண்டு பிடித்துள்ளனர். அத்துடன் அவ் விளையாட்டு அரங்கில் இரவு வரை இளைஞர் குழுவினர் தங்கியிருந்தது பற்றியும் அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர். உள்ளே செல்லும் தாக்குதல் அணிகளிடம் விமானப்படையினர் யாராவது அகப்பட்டால் அவர்களை சத்தமில்லாது அழித்துவிட்டு நகர்வதே பிரதான திட்டமாக இருந்துள்ள போதிலும், இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சில சம்பவங்களால் அசட்டையாக இருந்த படையினர் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பிரதான தாக்குதல்கள் நடக்கும் வரை விமானப்படையினருக்கு எவ்வித இழப்புக்களும் ஏற்படவில்லை. உள்ளே நுழைந்த தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாக மற்றொரு அணியும் சென்றுள்ளது. படைத்தளப் பகுதியில் உள்ள வெற்றுக் கட்டடம் ஒன்றினை அவ் அணி அடைந்ததும் அங்கு சில மணி நேரங்களை அது செலவிட்டுள்ளது. அதன் பின் சிறு பல குழுக்களாக பிரிந்து அடுத்து நடத்தப்படவுள்ள தாக்குதலுக்கான இறுதிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தாக்குதலில் ஈடுபடவென எவ்வளவு பேர்கொண்ட அணி உள்ளே நுழைந்தது என்பது இன்னமும் சரியாகத் தெரியாத போதிலும், எதனையும் சமாளிக்கக் கூடிய பலமான அணியொன்று வெளியே பாதுகாப்பான இடத்தில் நிலைகொண்டிருந்தது என்றும் அவ் அணியே வெளியே இருந்து தாக்குதலை ஆரம்பித்து வைத்து ஒருங்கிணைத்தது என்றும் ஓர் செய்தி கூறுகின்றது. அதிகாலை 3.30 மணியளவில் கேட்ட ஒற்றைத் துப்பாக்கி வேட்டைத் தொடர்ந்தே தாக்குதல்கள் ஆரம்பமாகின என இச் செய்திக்கு ஆதாரம் காட்டுகிறார் ஓர் படைத்தளபதி.

தாக்குதலுக்காக தயாராகிய அணிகள் தம்முடன் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், ஆர்.பி.ஜி.கள் அதிசக்தி வாய்ந்த வெடி மருந்து. இலகு இயந்திரத் துப்பாக்கிகள் என ஏராளமானவற்றை கொண்டு சென்றுள்ளார்கள். தென் சிறீலங்காவில் தமிழர்களின் நடமாட்டம் உச்சக் கண்காணிப்பில் இருக்கையில் சந்தேகமானவர்களை அடுத்த வீட்டுக்காரரே காட்டிக் கொடுக்கும் நிலை இருக்கையில் ஒரு சிறு ஆயுதக் களஞ்சியத்தையே தம்முடன் கொண்டு சென்றுள்ளார்கள். கொழும்பின் வீதிகளில் எல்லாம் காவல் நிலைகள் இருக்க பிரதான நெடுஞ்சாலைகளில் ஆயுதமேந்திய காவலர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்க விமானநிலையத்திற்கு செல்லும் வழியில் மிகவும் பலமான இராணுவ, விமானப்படை அணிகள் நிலைகொண்டிருக்க எப்படி எந்த வித சோதனைகளையும் சந்திக்காமல் இவ் இளைஞர்கள் படைத்தளப் பகுதியை அடைந்தார்கள் என சிறீலங்காவில் மட்டுமல்ல உலகெங்கும் உள்ள படைத்துறை அதிகாரிகள் வியந்துபோயுள்ளார்கள். விமான நிலையத்திற்கு வெளிநாட்டின் பாதுகாப்பு முகவர்கள் பாதுகாப்பு வழங்கவேண்டும் என இப்போது கேட்கப்படும் அளவிற்கு கேவலமாக அங்கு அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்தன. 1000ற்கும் மேற்பட்ட படையினரைக் கொண்ட விமானப் படைத் தளம் சிறு அணியான போராளிகளின் தாக்குதல்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையைக் கொண்டிருந்தது எனக்கூறும் ஓர் பாதுகாப்பு ஆய்வாளர், விடுதலைப் புலிகள் எதிரிகளின் பலப்பிராந்தியத்திற்குள் நுழைந்து மிகக்கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டதன் மூலம் எவ்வேளையும் எவ்விடத்திலும் செயற்படக் கூடிய தமது திறமையை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார்கள் எனக் கூறியுள்ளார். விமானத் தளத்தினுள் மோதல்கள் ஆரம்பமாகிய நிலையில் அப்பகுதியில் உள்ள சோதனை நிலைகளில் இருந்த விமானப்படையினர் தமது உதவிக்கு வருவார்கள் என முகாம் பகுதியில் இருந்தவர்கள் எதிர்பார்த்த போதிலும் அதிகாலை முதல் காலை வரை விமானப்படையினரின் எதிர்த் தாக்குதல்கள் நடத்தப்படவில்லையாம். கொழும்பின் இராணுவத் தளத்தில் இருந்து வந்த இராணுவத்தினரே படைத் தளத்தில் நின்றிருந்த விடுதலைப் புலிகளின் அணிகளுடன் தாக்குதல்களை மேற்கொண்டன. சிறீலங்காவின் விமானப்படை அண்மைக்காலமாக கடுமையான பயிற்சிகளுடனும் கொள்வனவுகளுடனும் பலப்படுத்தப்பட்டு வந்தது.




இருந்து அண்மையில் பயிற்சி முடிந்து படையினர் வெளியேறியதோர் நிகழ்வில் உலகின் போரிடும் இராணுவங்களை கொண்ட நாடுகளின் வரிசையில் சிறீலங்காவின் விமானப்படையின் வளர்ச்சி குறித்து பெரிதும் ஆரவாரப்படுத்தப்பட்டது. ஆனால் படைத்தளத்தினுள் தாக்குதல்கள் நடந்தவேளை திருப்பித் தாக்க அங்கே விமானப் படையினருக்கு உறுதியிருக்கவில்லை. அநேகமான படையினர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒளித்து ஓடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அண்மையில் நவீனமயப்படுத்தப்பட்ட சிறீலங்காவின் விமானப்படை தனது கால்ப்பங்கினை இழந்து விட்டது என்றும் ஓர் பிரதான செயற்பாட்டின்போது 60வீத பங்களிப்பினை விமானப்படையிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது என்றும் மற்றுமோர் அதிகாரி கூறியுள்ளார். கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதல்களின் போது இருளில் விடுதலைப் புலிகள் மேல் தாக்குதல் நடத்துகிறோம் எனக் கூறிக் கொண்டு படையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகங்களில் ஆறுக்கு மேற்பட்ட வான் கலங்கள் சேதமாகின என்றும் தமக்கிடையே நடந்த துப்பாக்கி பிரயோகத்தில் பல படையினர் காயமடைந்தனர் என்றும் தற்போது கூறப்படுகிறது. இது தவிர தாக்குதலின் பின் அடுத்து வந்த நாட்கள் விமானப்படையினருக்கு மிகமோசமான நாட்கள் எனக் கூறப்படுகிறது. தமது சகாக்கள் மீதே தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் பயத்தின் காரணமாக பொதுமக்கள் மீது தாக்குதலை நடாத்தியும் தங்களது பீதியை வெளிக்காட்டிக் கொண்டார்கள்.

> உள்ளே செல்லும் தாக்குதல் அணிகளிடம் விமானப்படையினர் யாராவது அகப்பட்டால் அவர்களை சத்தமில்லாது அழித்துவிட்டு நகர்வதே பிரதான திட்டமாக இருந்துள்ள போதிலும், இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சில சம்பவங்களால் அசட்டையாக இருந்த படையினர் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை

விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா படைத்தளம் மீது நடாத்திய தாக்குதலை விமர்சித்த ஓர் வெளிநாட்டு செய்தியேடு, தனது ஆசிரிய தலையங்கத்தில் அத் தாக்குதலை வியட்நாமின் வியட்கொங் கெரிலாக்களின் தாக்குதல்களுடன் ஒப்பிட்டுள்ளது. 1968ல் அவர்களால் தலைநகர் சைகோனுக்கு அருகே நடத்திய தாக்குதல் ஒன்று வியட்நாம் யுத்தத்தின் திருப்புமுனைக்கு காரணமாகியது. அதே போல் கொழும்பிற்கு அருகே விடுதலைப் புலிகள் நடாத்தியுள்ள தாக்குதலானது அவர்களது இனப்போரில் திருப்புமுனைக்கு காரணமாக அமையலாம். இத் தாக்குதலின் மூலம் அவர்கள் தம்மால் எந்தவித பாதுகாப்பு வலையத்திற்குள்ளும் எவ்வேளையிலும் செயற்பட முடியும் என்பதை நிரூபித்துள்ளார்கள். அத்துடன் சிறீலங்காவின் வான்படையின் பலம் இல்லாது போயுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்காவின் பலம்மிக்க இராணுவத்தினரது சுதந்திர நகர்வுகள் கட்டுப்படுத்தப்படும். ஏற்கனவே அவர்களது மனோநிலை மிகவும் குறைந்துள்ளது. இந்நிலையில் தாக்குதல் ஒன்று நடாத்தப்படுமானால் மற்றுமொரு தியன் பியான் பூவை சரித்திரம் காணலாம். அங்குள்ள இராணுவத்தினர் சரணடைவினையோ அல்லது அழிவினையோ காணக்கூடும். இதனைத் தவிர்க்க சிறீலங்கா ஜனாதிபதி உடனடியான சமாதானச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். யுத்தம் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு தங்களது பலவீனத்தை மூடிக்கொள்வதை தவிர்த்துக்கொண்டு சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

உங்கள் கைத்தொலைபேசி சேவைகளுக்கு

SUN TEL
Téléphone Portable




நீங்கள் உரையாடுவதற்கு எவ்வித கட்டணமும்* இல்லை
Millenium

கைத்தொலைபேசிகளை எல்லா நாடுகளிலும் பாவிக்கக்கூடிய வகையில் செய்துதருவதுடன், அவை திருத்தியும் கொடுக்கப்படும்



Bouygues Telecom
La plus belle façon de s'entendre.

178, Rue du Fgb. Saint Denis, 75010 Paris - Tel: 01 40 34 11 28 - Fax: 01 40 34 11 81
E-mail: goldringeurope@aol.com

# சிறீலங்கா விமானப்படைத்தளம் மீதா


## விமானப்படை இழப்பீடு - இஸ்ரேல், உக்கிரேன் மதிப்பீடு

விமானப்படைத் தளம் மீதான தாக்குதலில் அழிக்கப்பட்ட கிபீர் மற்றும் மிக் விமானங்களின் இழப்பீடுகளை இஸ்ரேலிய, உக்கிரேனிய நாட்டு விமானப்படை அதிகாரிகள் மதிப்பீடு செய்யவுள்ளனர். இவ்வார இறுதிக்குள் கொழும்பு வரும் இஸ்ரேலிய அதிகாரிகள் கிபீர் விமானங்கள் மூலம் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்றும் அதேவேளை, உக்கிரேனிய அதிகாரிகள் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னரே கொழும்பில் தங்கியிருந்தனர் எனவும் எனவே அவர்கள் இவ்வாரத்தில் தமது மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிப்பர் எனவும் கூறப்படுகிறது.

சிறீலங்கா வான்படையினர் பயன்படுத்தி வரும் கிபிர் விமானங்கள் இஸ்ரேலிலிருந்தும் மிக் விமானங்கள் மற்றும் எம்.ஐ-17, எம்.ஐ-24 தாக்குதல் உலங்குவானூர்திகள் உக்கிரேனிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கட்டுநாயக்கா தாக்குதலில் நான்கு கிபீர் விமானங்கள் அழிக்கப்பட்டு மேலும் நான்கு பலத்த சேதமாக்கப்பட்டதுடன், இரண்டு மிக்-27 ரக விமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டதும் தெரிந்ததே.

## மோப்ப நாய்களுடன் 'மினிபஸ்'சை தேடியலையும் பொலிசார்

கட்டுநாயக்காவிற்கு வந்த தாக்குதல் அணியினர் தனியார் சொகுசு பேருந்து ஒன்றில் வந்திறங்கியதாக அயலவர்கள் கொடுத்த தகவலையடுத்து, அதனைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் பொலிசார் கடந்த இரு வாரங்களாக தீவிரமாக முயற்சித்து வருவது தெரிந்ததே. தற்போது பொலிசாரினால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 14 பேருந்துகளையும் கடந்த புதன்கிழமை மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனையிட்டதாகவும் எனினும் எந்தவித தடயமும் இதன்போது கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து, வாகனங்கள் விற்பனை செய்யும் நிலையங்களிலும், திருத்த நிலையங்களில் திருத்த வேலைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தனியார் பேருந்துகளையும் தேடும் பணியில் தற்போது பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.




## விமான நிலைய பாதுகாப்பிற்கு சக்திமிக்க தேசியக்குழு நியமனம்

விமான நிலையத்தின் பாதுகாப்பிற்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக சக்திமிக்க தேசியக்குழு ஒன்றை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா கடந்த புதனன்று நியமித்துள்ளார். கட்டுநாயக்கா தாக்குதல் தொடர்பாக புதனன்று இரவு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் குழுவை சந்திரிகா நியமித்துள்ளார். இக்குழுவின் தலைவராக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இக்குழுவில் பொலிஸ்மா அதிபர், முப்படைத் தளபதிகள், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், உல்லாசப் பயணத்துறை அமைச்சின் செயலாளர் மற்றும் விமான நிலைய உயரதிகாரிகளும் அடங்கியுள்ளனர்.

## தாக்குதலை சந்திரிகாவின் தனிப்பட்ட விசாரணைக்குழு விசாரிக்குமாம்!

கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீதான தாக்குதலின் போது கடமையிலிருந்து தவறிய அதிகாரிகள் மற்றும் படையினருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உத்தரவிட்டுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவம் பற்றி மேலும் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மூன்று பேரைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் நியமித்துள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.ஜயவிக்ரம தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு பாதுகாப்பு
### மேற்குநாடுகள் வலியுறுத்தல்

சர்வதேச பாதுகாப்பு தரத்துடன் கூடிய வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பாதுகாப்பு பொறுப்பை ஒப்படைப்பதன் மூலம் விமான நிலையப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமென சில மேற்கு நாடுகள் சிறீலங்காவிற்கு ஆலோசனை கூறியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்கு நாட்டுத் தூதுவர்களை சிறீலங்கா உல்லாசப் பயணத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் சந்தித்தபோது, அவர்களிடம் இந்த யோசனை தூதுவர்களால் முன்வைக்கப்பட்டதாகவும், அத்துடன் விமான நிலையப் பயணங்கள் சுமுகமாக இடம்பெறவும் சர்வதேச மட்டத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதுடன், சர்வதேச தரம் வாய்ந்த நிறுவனமொன்றுக்கு விமான நிலைய முகாமைத்துவப் பொறுப்பை ஒப்படைப்பது என்ற இரு விடயங்களை சிறீலங்கா மேற்கொள்ள வேண்டுமென தூதுவர்கள் தெரிவித்ததாக தெரியவருகிறது.

## 37 சேவைகள் 25 ஆகின

சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் சர்வதேச ரீதியில் 37 இடங்களுக்கு இதுவரை தனது விமான சேவையை நடத்தி வந்தது. ஆனால் கட்டுநாயக்கா மீதான தாக்குதலையடுத்து தனது அரைவாசி விமானங்களை இழந்துள்ள நிலையில் [12 இல் 6 அழிக்கப்பட்டன] தனது சேவையை 25 இடங்களுக்கு குறைத்துள்ளது. இந்த வரிசையில் தற்போது இந்தியா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, ஸ்ரொக்ஹோம், பேர்லின், மிலான், பாரிஸ் ஆகிய இடங்களுக்கான விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக சிறீலங்கன் எயார் லைன்ஸ் 1ம் திகதி அறிவித்துள்ளது.

## ஆயுதங்களை திருடிய 15 விமானப்படையினர் கைது

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவை தழுவிய போராளிகள் வசமிருந்த ஆயுதங்களில் ஒரு பகுதியை திருடிச் சென்றதாக விமானப்படை அதிகாரியொருவர் உட்பட 15 விமானப் படையினர் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். தாக்குதல் சம்பவத்தின் போது, போராளிகள் பயன்படுத்திய ஆயுதங்களில் குறைந்தது நான்கு துப்பாக்கிகளும் குறிப்பிட்டளவு வெடிபொருட்களும் சில படையினரால் களவாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இது தொடர்பாக விமானப் படையின் உயரதிகாரியொருவர் உட்பட 15 படையினரும் விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருவதாக தெரியவருகிறது. விமானத் தளம் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் படையினரே இது தொடர்பாகவும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்த ஆயுதங்களைத் திருடியவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் விமானப்படைத் தலைமைப்பீடம் பணிக்கப்பட்டுள்ளது.

## 80 வீதமான முற்பதிவுகள் இரத்து

கட்டுநாயக்கா மீதான தாக்குதலையடுத்து வெளிநாட்டு பயணிகளின் வருகை பெருமளவிற்கு முற்றாகவே வீழ்ச்சியடைந்த நிலை காணப்படுவதாக தெரியவருகிறது. அத்துடன் கொழும்பு வருவதற்கு முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் தங்கள் விமானச் சீட்டுக்களை உடனடியாக இரத்துச் செய்துள்ளதுடன், சிறீலங்காவில் முற்பதிவு செய்திருந்த விடுதிகளின் முன்பதிவுகளையும் இரத்துச் செய்துள்ளனர். இதேவேளை, தாக்குதலையடுத்து ஏராளமான உல்லாசப் பயணிகள் நாட்டைவிட்டு வெளியேறியதாலும், புதிதாக உல்லாசப் பயணிகள் வருகையில்லாமையினாலும் விடுதிகள், உணவகங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உல்லாசப் பயணிகளின் வருகை குறைவடையுமானால் சிறீலங்காவின் வெளிநாட்டு செலாவணியின் வருமானமும் குறைவடையும் எனவும், இதனால் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் எனவும் உல்லாசப் பிரயாணச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். சிறீலங்காவிற்கு பயணம் செய்வதைப் பெருமளவில் தவிர்க்குமாறு அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கனடா உட்பட பல நாடுகள் தங்கள் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ான தாக்குதலும் அதற்குப் பின்னரும்




திரும்பிச் செல்லும் பயணிகள்

## கட்டுநாயக்காவை விட்டால் விமானப்படைக்கு வேறு வழியில்லை

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதன் பின்னர் விமானப்படைத் தளத்தை இடம் மாற்றுமாறு பல்வேறு மட்டங்களிலும் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. எனினும் விமானப் படைத்தளத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய நிலையில் இன்று சிறீலங்கா விமானப்படை இல்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப்படையினர் வசமுள்ள கிபீர் மற்றும் மிக் விமானங்களை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மட்டுமே தரையிறக்க கூடிய வசதிகள், பாதுகாப்புகள் உள்ளன என்பதால் அங்கேயே தரையிறக்கப்பட்டு வந்தன. ஆனால் இதற்கு கடும் எதிர்ப்புக்கள் உருவான நிலையில், கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்திலிருந்து தாக்குதல் விமானங்களை வேறிடத்திற்கு இடம் மாற்றுவதற்காக நடவடிக்கைகளை சிறீலங்கா விமானப்படை அதிகாரிகள் மேற்கொண்டனர்.

இதன் ஒரு கட்டமாக, இந்த விமானங்களை வவுனியாவுக்கு மாற்றி அங்கிருந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும் இவற்றின் செயற்பாட்டை அநுராதபுரத்துக்கு மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன எனினும், அவை புலிகளின் தாக்குதல் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளாக இருந்தமையால் கைவிடப்பட்டுள்ளன. பின்னர் ஹிங்குராகொட மற்றும், திருமலை சீனன்குடாவிலுள்ள விமானப் படைத்தளங்களில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவையும் புலிகள் வசமிருக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளின் அச்சுறுத்தலால் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் தான் அநுராதபுரம் அருகில் சிகிரியாவில் உள்ள விமானத்தளம் விஸ்தரிக்கப்பட்டு அங்குள்ள ஓடுபாதையும் பெருப்பிக்கப்பட்டது. ஆனால் விமானப் படைக்கு அங்கும் பிரச்சினை எழுந்தது.

கலாச்சாரச் சின்னங்கள் பல சிகிரியாவில் இருப்பதால், அப்பகுதியில் சுப்பசொனிக் போன்ற அதிவேக விமானங்கள் இறங்கி ஏறும்போது ஏற்படும் ஒலியின் பேரதிர்வினால் கலாச்சாரச் சின்னங்கள் பெரிதும் பாதிக்கப்படுமென தொல்பொருள் திணைக்களம், இந்தச் சின்னங்களைப் பாதுகாக்க பெருமளவு நிதியுதவி வழங்கும் 'யுனெஸ்கோ' நிறுவனத்திடம் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால், இங்கு விமானத்தள விஸ்தரிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துடன் விமானப்படைத் தளத்தை வைத்திருப்பதைவிட வேறு வழிகள் சிறீலங்கா விமானப்படைக்கு இல்லை என தெரியவருகிறது.

## 24 மணிநேர விசேட அணி

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோ அணிகளும், விமானிகளினது பாதுகாப்பிற்கு விசேட படை அணியொன்றும் 24 மணிநேர பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த அணியில் போர் விமானங்களினதும், உலங்குவானூர்திகளினதும் பாதுகாப்பிற்காக தனித்தனியாக கமாண்டோப் படையணிகள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இரத்மலானை விமானப்படைத்தள பகுதியைச் சுற்றி காவலரண்கள், சோதனை நிலையங்கள், கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் சில வீதிகளில் போக்குவரத்திற்கு தடை விதித்துள்ளதுடன், அவ் விமான நிலையச் சுற்றாடலில் வசிப்பவர்களிடம் புதியவர்கள், சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டங்கள் குறித்து உடனடியாக படையினருக்கு அறிவிக்குமாறும் கூறியுள்ளனர்.

அத்துடன் இவ்வாறான தகவல்கள் படையினருக்கு அறிவித்தால் அவை உரிய இடத்திற்கு தெரிவிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், அதேநேரம், கடமைகளில் இருக்கும் படையினர் அதனைச் சரிவரச் செய்யவில்லையென்பது அவதானிக்கப்படும் பட்சத்தில், அது குறித்தும் அதிகாரிகள் மட்டத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். கட்டுநாயக்கா தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் பொதுமக்கள் கொடுத்த தகவல்களின் போது படையினர் அசட்டையாக இருந்ததையடுத்தே, பொதுமக்களுக்கு மேற்படி பணிக்கப்பட்டுள்ளது.

## விமானங்களின் பெறுமதி

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் 12 தாக்குதல் விமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டமை தெரிந்ததே. இதன் ஒவ்வொன்றினதும் பெறுமதியை முன்னாள் விமானப் படைத்தளபதி எயார் வைஸ் மார்சல் ஹரிகுணதிலக தெரிவித்துள்ளார்.

**கிபீர் - 3.8 மில்லியன் டொலர்கள்**
**மிக்-27 - 2.8 மில்லியன் டொலர்கள்**
**எம்.ஐ-24 - 2.4 மில்லியன் டொலர்கள்**
**எம்.ஐ-17 - 2.2 மில்லியன் டொலர்கள்**
**கே-8 ஜெற் பயிற்சி விமானம் 1 மில்லியன் டொலர்கள்**

இதேவேளை, இத் தாக்குதலினால் விமானப்படையினர் தங்களின் 20 வீதத் தாக்குதல் பலத்தை இழந்துள்ளனர் எனவும் ஹரிகுணதிலக தெரிவித்தார். ஆனால் விமானப்படை இத் தாக்குதலினால் தனது 45 வீத பலத்தை இழந்துள்ளதாக ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள்ளனர்.

## விமானக் கட்டணங்கள் 10 வீதம் அதிகரிப்பு

சிறீலங்காவிற்கான விமானக் கட்டணங்களை சகல விமான நிறுவனங்களும் 10 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக விமான நிறுவனங்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன. இம் மாதம் 1ம் திகதி முதல் இப் புதிய கட்டண அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளது. சிறீலங்காவிற்கு பயணத்தை மேற்கொள்ளும் வெளிநாட்டு விமானங்கள் தமது காப்புறுதிக் கட்டணங்களை அதிகரித்துள்ளமையை அடுத்தே இக் கட்டண உயர்வு இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இப்புதிய கட்டண உயர்வின்படி கிழக்கு நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு சிறீலங்காவில் இருந்து செல்வதற்கான அனைத்து விமானங்களுக்குமான கட்டணம் 10 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது சிறீலங்காவிற்கான விமானப் பயணத்திற்கான காப்புறுதியை உயர்த்தியுள்ள சில நிறுவனங்கள்:- தாய் எயார்வேய்ஸ் நிறுவனம் தனது காப்புறுதித் தொகையை 120,000 அமெரிக்க டொலர்களால் உயர்த்தியுள்ளது. சிங்கப்பூர் எயார் லைன்ஸ் 114 000 டொலர்களாலும், எமிரேட்ஸ் 100,000 டொலர்களாலும் காப்புறுதித் தொகையை அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. இக் காப்புறுதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானம் ஒரு தடவை தரையிறங்க மட்டுமே என தெரியவருகின்றது.

## 75ற்கு மேற்பட்ட வெளிநாட்டு விமானிகள் உட்பட 1000ற்கு மேற்பட்டோர் வேலையிழப்பு

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீதான தாக்குதலில் தனது 6 விமானங்களை இழந்துள்ள சிறீலங்கன் எயார் லைன்ஸ், இதனால் தனது பணியாளர்களையும் வேலையில் இருந்து நீக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. தற்போது சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற விண்ணப்பித்தவர்களில் 700 பேர் உடனடியாக சேவையிலிருந்து விலக்கப்படவுள்ளனர்.

அத்துடன் 78 வெளிநாட்டு விமானிகள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்களை வேலையிலிருந்து விலக்கவுள்ளதாக சிறீலங்கன் எயார் லைன்ஸ் விமான நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போது சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தில் சுமார் 5000ற்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்த விமான நிறுவனத்தில் கடமையாற்றும் 195 விமானிகளில் 78 பேர் வெளிநாட்டவர்கள். இதில் பிரிட்டன், பல்கேரியா, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் அடங்கியுள்ளனர்.

வேலையில் இருந்து விலக்கப்பட்டுள்ள இவர்களுக்கு நட்ட ஈட்டுத்தொகையும் வழங்கப்பட உள்ளது. ஏற்கனவே நட்டத்தில் இயங்கி வந்த சிறீலங்கன் எயார் லைன்ஸ், தற்போது இடம்பெற்ற தாக்குதலையடுத்து மேலும் பெரும் நட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பாண் விநியோகித்தவர் கைது

*கட்டுநாயக்கா விமானப்படைத்தள முகாமிற்கு தினமும் பாண் விநியோகித்து வந்த ஒரு தமிழரும், விமான நிலையத்திற்கு அருகில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வந்த இன்னொரு தமிழர் உட்பட, மூவரை சிறீலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர். தாக்குதலை மேற்கொள்ள விடுதலைப் புலிகளுக்கு இவர்கள் உதவி செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டே இவர்களை பொலிசார் கைது செய்ததாக செய்திகள் கூறுகின்றன.*

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி நிரோஜா கருணாநிதி, செல்வன் தி.சஞ்ஜீவ், செல்வி கஸ்தூரி சத்தியராயன், செல்வி கௌஜிதா கனகராஜா, செல்வன் சத்தியபாலன் சங்கீத் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்

### நவரத்தினராஜா ரிஷி



**இடம்:** 87100 Limoges, France.
**வயது:** 09 (03.12.1992)
**பொழுதுபோக்கு:** வானொலிகேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், படம் வரைதல்
**உறுப்பினர் எண்:** F-137






### விபூஷா நவரத்தினராஜா



**இடம்:** 87100 Limoges, France.
**வயது:** 07 (10.01.1994)
**பொழுதுபோக்கு:** தொலைக்காட்சி, படம் வரைதல், வானொலி கேட்டல்
**உறுப்பினர் எண்:** F-136




## தகவல் முற்றம்

★ 'பாடும் பறவை' பின்பக்கமாக பறக்கும் சக்தி கொண்டது.

★ பச்சோந்தி தன் ஒரு கண்ணால் ஒரு இடத்தையும் அதே சமயம் மற்றொரு கண்ணால் வேறு ஓர் இடத்தையும் பார்க்கக்கூடிய இயல்புடையது.

★ தனக்குப் பின்னால் உள்ள பொருள்களையும் தன் கழுத்தை திருப்பாமலேயே பார்க்கும் ஆற்றல் உள்ள ஒரே மிருகம் ஒட்டகச் சிவிங்கி.

★ அமெரிக்காவில் வாழும் கங்காரு எலிகள் தண்ணீர் குடிப்பதே இல்லை.




## கதை முற்றம்

### குற்றம் கொடுத்த பதவி

அயர்லாந்தில் 1848 ஆம் ஆண்டில் வாலிபர்கள் ஒரு கிளர்ச்சி நடத்தினார்கள். சார்லஸ்டப்பி, மாரிஸ்லயன், பாட்ரிக் டொனாகு, தாமஸ் மிக்கீ ஜான் மிட்சல், தாமஸ் மீகர், ரிச்சாட் கார்மன், டெரன்ஸ் மிக்மனஸ், மைக்கேல் அயர்லாண்ட் என்னும் ஒன்பது பேர்கள் மீது அரசத் துரோகக் குற்றம் சுமத்தி, வழக்கு விசாரணை நடைபெற்றது.

தலைமை நீதிபதி, அக்குற்றவாளிகளை நோக்கி, 'நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?' என்று கேட்டார்.

அதைக்கேட்ட தாமஸ் மீகர், 'இதுவே எங்கள் முதல் குற்றம். அடுத்த தடவை நாங்கள் குற்றம் இல்லாத வகையில் நடந்துகொள்வோம். உறுதியாகச் சொல்லுகின்றேன். அடுத்த தடவை நாங்கள் இவ்வாறு முட்டாள்தனமாகப் பிடிபடாது தப்பித்துக்கொள்ளுகின்றோம்' என்று கூறினார்.

அதைக் கேட்ட நீதிபதி ஆத்திரம் கொண்டார்; அவர்கள் எல்லோருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். ஆனால் உலகம் முழுவதும் அத்தண்டனையை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பியது.

விக்டோரியா மகாராணி அவர்களுடைய மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றினார். அவர்கள் ஒன்பது பேர்களையும் அப்போது காட்டுமிராண்டிகளின் தீவாக இருந்த ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பினார்கள்.

அவ்வொன்பது பேர்களுள் சார்லஸ்டிப்பி என்பவர், 1871 ஆம் ஆண்டில் விக்டோரியா இராச்சியத்தின் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார்.

முன்பு ஆயுள் தண்டனை அடைந்த சார்லஸ்டப்பி பிரதமரானதை அறிந்து விக்டோரியா இராணி பேராச்சரியம் அடைந்தார்; மற்ற எட்டுப் பேர்களுடைய விபரங்களையும் அறிந்தார்.

மற்ற எட்டுப் பேர்களில் தாமஸ்மீகர் என்பவர் மாண்டனா கவர்னரானார்; தமாஸ் மீக்கீ, பாட்ரிக் டொனாகு ஆகிய இருவரும் அமெரிக்கப் பிரங்கிப் படைத்தளபதிகளானார்கள்; மாரிஸ்லயன் என்பவர் ஆஸ்திரேலியா அட்டர்னி ஜெனரலானார்; அதே பதவியில் அவருக்குப் பிறகு மைக்கேல் அயர்லாண்ட் அமர்ந்தார்; ஜான் மிட்சல் என்பவர் நியூயார்க் நகரில் பிரபல அரசியல்வாதியானார்; டெரன்ஸ் மிக்மனஸ் என்பவர் டொமினியன் கவுன்சில் தலைவரானார்.

## கண்டுபிடியுங்கள்

### கடந்த வார விடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா | ன் | ம | ல | ர் | |
| வா | ன் | ம | தி | | |
| வ | ன | த் | த | ம் | மா |
| வ | ள | ர் | சி | ந் | து |
| வ | ள | ர் | ம | தி | |
| வ | ள் | ளி | நா | ய | கி |
| வ | டி | வ | ர | சி | |

பின்வரும் சதுரங்களில் உள்ள எழுத்துக்களின் துணைகொண்டு தூய தமிழ்ப் பெயர்களைக் கண்டு பிடியுங்கள். முடியாது விட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ | | | ம | | ள் |
| யா | | | ழி | | |
| யா | | னி | | | |
| யா | | சை | | | |
| மை | | லி | | | |
| மை | | ழி | | | |
| மு | | | | கி | |

## அறிந்துகொள்ளுங்கள்

### உயரமான கட்டடம்

தற்போது உலகத்திலேயே மிக உயரமான கட்டடம், மலேசியா நாட்டில் கோலாலம்பூர் நகரில் அமைந்துள்ளது இக்கட்டடத்தின் உயரம் என்ன தெரியுமா? 73.5 மீற்றர்கள் [241 அடி]. இது பெட்ரோனாஸ் என அழைக்கப்படுகின்றது. ஆனால் 2001ம் ஆண்டு முடிவிற்குள் உலகத்தின் மிக உயரமான கட்டடம் இது என்ற பெருமையை இது இழந்துவிடும். சீனாவின் சங்காய் நகரில் எழுந்துள்ள கட்டடமே உலகின் உயரமான கட்டடம் என்ற பெருமையை பெற்றுக்கொள்ளப் போகிறது.

அதன் உயரம் என்ன தெரியுமா? 454 மீற்றர்கள் [1490 அடி]

## வினா-விடை முற்றம்

### கடந்தவார விடைகள்:

1. 25 நாட்களுக்கு ஒரு முறை.
2. ஆபிரகாம் லிங்கன்.
3. வலப்புறத்திலிருந்து இடப்புறமாக மேலிருந்து கீழாக.
4. முற்காலத்தில் இங்கிலாந்து உட்பட பல்வேறு நாடுகளிலும் ஒவ்வொருவரும் தமது உயிருக்காக போராட வேண்டியிருந்தது. ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டபோது தான் பகைவனல்லன். கையில் எவ்வித ஆயுதமுமில்லை. என்று காட்டுவதற்கு இருவருமே கை விரித்துக் குலுக்கினர். இதுவே கைகுலுக்கும் வழக்கமானது.
5. சீனா, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, இந்தியா.
6. 3.5 வீதம்.

### இவ்வார வினாக்கள்

1. முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் மிருகம் எது?
2. அல்பாக்கா, லாமா என்ற மிருகங்கள் எங்கே காணப்படுகின்றன?
3. கனடாவில் மிக அதிகமாக வளரும் தானியம் எது?
4. இத்தாலி வெனிஸ் நகர மக்களின் பயணம் எப்படியானது?
5. உலகத்தில் வைரத்திற்குப் புகழ்பெற்ற நாடு?
6. நயாகரா நீர்வீழ்ச்சி எங்கே உள்ளது? அதன் உயரம் என்ன?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

சிறு கதை

# விழிப்பு

இரவு ஒரு மணிக்குப் பின் வீட்டுக்குள் நுழைந்த சங்கரைப் பார்த்து, 'நீங்கள் செய்யிறது உங்களுக்கே நல்லா இருக்கோ' இந்து குமுறினாள்.

'இதுதான் இதுக்குத்தான். எனக்கு வீட்டுக்கு வரவே பிடிக்கிறேல்லை. பெண்டாட்டி எண்டால் வீட்டுக்கு வாற கணவனை அன்பா சிரிச்ச முகத்தோடை வரவேற்கோணும்'. சினந்தான் சங்கர்.

அவன் ஸ்ரெபியுடன் சுற்றி விட்டுத்தான் இவ்வளவு தாமதமாக வருகிறான் என்பது அவளுக்கு நன்கு தெரிந்ததால் 'அந்த ஆட்டக்காரியோடை தானே இவ்வளவு நேரமும் சுத்திப் போட்டு வாறிங்கள். எனக்குத் தெரியும்' என்றாள். எரிச்சலும் கோபமுமாக.

'சும்மா காகம் கத்திறது போலை எப்பவும் கத்திக் கொண்டிராதை... குடும்பம் எண்டால் இப்பிடிக் கனக்க இருக்கும். பொம்பியைள்தான் இதையெல்லாம் அனுசரிச்சுப் போகோணும். ஏன் உனக்கு கொம்மா இதொண்டும் சொல்லித் தரேல்லையே..? என்ன வளர்ப்பு வளர்த்திருக்கிறாவோ..? ஒரு நல்ல பழக்கங்கள் கூடப் பழக்காமல்..! உன்னைப் போய் கலியாணம் கட்டினனே..!' சங்கர் வழக்கம் போலவே வக்கிரத்தனமாகக் கதைத்தான்.

இந்துவால் அவனது அலட்சியம் கலந்த வக்கிரப் பேச்சை அணுவள வேனும் இரசிக்க முடியவில்லை. செய்வதையும் செய்து விட்டு அதற்கு வேறு நியாயம் தேடும் அவனது நியாயமற்ற பேச்சு, அவளை கோபத்தில் கொதிக்க வைத்தது. ஏற்கனவே மனதை வதைத்துக் கொண்டிருந்த வேதனைக்கும் ஏமாற்றத்துக்கும் கோபம் தூபம் போட, 'நானும் இப்பிடி வேறொருத்தனோடை சுத்திப் போட்டு வந்தால் நீங்கள் பொறுத்துக் கொள்ளுவிங்களோ..? அல்லது உங்களாலை சகிக்கத்தான் முடியுமோ?' சீற்றத்துடன் கேட்டாள்.

சங்கருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. 'என்னடி கதைக்கிறாய். ஆம்பிளையள் எண்டால் அப்பிடி இப்பிடித்தான் இருப்பினம். அது சகசம். அதுக்காவேண்டி பொம்பிளையளும் அப்பிடிச் செய்யிறதோ?' கத்தினான்.

'ஏன் செய்யக் கூடாது.' கோபம் அழுகையாக வெடிக்க கேவலுடன் வார்த்தைகளை வீசினாள் இந்து.

'பெண் எண்டால் தாய். தாய் தெய்வத்துக்குச் சமமானவள். அந்த தெய்வத்துக்குச் சமமான தாய் பிள்ளையளைப் பெத்து பாலூட்டி சீராட்டி வளர்த்து ஆளாக்க வேண்டியவள். அவள் அப்பிடிச் செய்யக் கூடாது.' கோபம் கொப்பளிக்க சங்கர் இன்னும் சத்தமாகக் கத்தினான்.

இந்துவும் விடவில்லை.

'பெண்ணெண்டால் தெய்வம் என்பது உங்களுக்குத் தெரியுது. நீங்கள் செய்யிறது ஒரு செய்யத் தகாத வேலை என்பதும் உங்களுக்குத் தெரியுது. இருந்தும் அப்பிடியொரு வேலையைச் செய்து பெண்ணென்ற தெய்வத்துக்குத் துரோகம் செய்யி....!' இந்து சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கவில்லை.

அதற்கிடையில் இடைமறித்த சங்கர், 'இப்ப கதையை நிப்பாட்டு. விட்டால் கதைச்சுக் கொண்டே போவாய். புருசன் வந்திருக்கிறன்?. சாப்பிட்டியோ, குடிச்சியோ எண்டு கூடக் கேட்காமல்..., உன்னை இங்கை கூப்பிட்டன் பார். அது என்ரை பிழை. ஊரிலையெண்டால் இப்பிடிக் கதைப்பியே..? வாய் வெத்திலை போட்டிருக்கும்..! நீ திரும்பி ஊருக்கே போயிடு.' என்றான். அவன் வார்த்தைகளில் நையாண்டியும் அதிகாரமும் தொக்கி நின்றன. இந்து கொதித்துப் போனாள்.

'இப்பிடியே போனால் நான் தற்கொலை செய்து செத்துப் போடுவன். அதுக்குப் பிறகுதான் உங்களுக்கு என்ரை அருமை தெரியும்.' என்றாள்.

இப்போது சங்கர் பெரிய நையாண்டிச் சிரிப்பொன்றைச் சிரித்தான். இந்துவுக்கு அவனைப் பாாக்கவே அருவருப்பாக இருந்தது. சிரித்தது போதாதென்று, 'நீ எங்கை சாகப்போறாய்? நீ செத்தாய் எண்டால் அதையிட்டுச் சந்தோசப் படப்போற முதலாள் நானாத்தான் இருக்கும்.' என்றான்.

இந்துவை அவன் வார்த்தைகள் தீயாகச் சுட்டன. சங்கர் தொடர்ந்து. 'போன முறையும் இப்பிடித்தான் சாகப் போறன் எண்டு சொல்லி மருந்துகுடிச்சியே! அப்ப நான் உன்னைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போய் கொஸ்பிட்டலிலை போட்டனே! அதுதான் நான் செய்த பெரிய தப்பு' என்றான்.

* * *

மகன் கோகுலை கிண்டர் கார்டனில் (குழந்தைகள் பாடசாலை) விட்டுவிட்டு பகுதி நேர வேலைக்குப் போய்க் கொண்டிருந்த இந்துவின் மனதில், நேற்று சங்கருடன் நடந்த சண்டையும் சங்கரின் கர்ணகடூரமான ஈவிரக்கமற்ற வார்த்தைகளுமே சுழன்று கொண்டிருந்தன. கோபத்தில் உடம்பு கொதிப்பதுபோல் இருந்தது.

போனவருடம் இப்படித்தான். சண்டையில் வாக்குவாதம் உச்சக் கட்டத்துக்கு வர இந்து தற்கொலை செய்யப் போவதாகச் சொன்னாள். உடனே சங்கர் 'நல்லாச் செய். அப்பாடா ஒரு சனியன் துலைஞ்சுது எண்டு நான் நிம்மதியா இருப்பன்'. என்றான்.

கோபம் தலைக்கேற இந்து ஓடிப்போய் மலசலகூடம் கழுவும் மருந்தை எடுத்துக் குடித்து விட்டாள். மருந்து உள்ளே போகும் போதுதான் தான் எத்தகையதொரு மடைத்தனமான வேலைசெய்து விட்டேன் என்பதை உணர்ந்தாள். உணர்ந்து என்ன பயன்? உடலுக்குள் தீப்பற்றி எரிவது போன்ற வேதனையில் துடித்து விழுந்தாள். சங்கர் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பயந்து போய் விட்டான். வேதனையில் புரளும் இந்துவைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் காரில் ஏற்றினான். இந்து அப்படியே மயங்கி விட்டாள்.

அவள் மீண்டும் கண் விழித்தபோது மருத்துவமனையில் கட்டிலில் படுத்திருந்தாள். உடம்பெல்லாம் புண்ணாய் வலித்தது. எழும்ப முயற்சித்தாள். அவளால் அசையக் கூட முடியவில்லை. நடந்த விடயங்களை மெல்ல அசை போட்டுப் பார்த்தாள். மனசை சோகம் நிறைக்க கண்கள் கலங்கின. அழக்கூட அவளால் முடியவில்லை. அசதியில் மீண்டும் தூங்கி விட்டாள்.

மீண்டும் அவள் கண் விழித்தபோது, சங்கர் கோகுலுடன் வந்திருந்தான். கோகுல் சோகமாய் இருந்தான். இந்துவின் கைகளைப் பிடித்தபடி அழுதான். 'எப்ப அம்மா வீட்டை வருவீங்கள்...' என்று ஏக்கத்துடன் கேட்டான். இந்துவால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. நா உலர்ந்திருந்தது. அவனை அணைத்துக் கொள்ள எண்ணி இந்து கைகளை நீட்ட எத்தனித்தாள். அவளால் கைகளை அசைக்கவே முடியவில்லை. சங்கரைப் பார்த்தாள். கொஞ்சம் கலைந்து போய் இருந்தான்.

'தவறுதலா மருந்தைக் குடிச்சிட்டன் எண்டுதான் டொக்டரிட்டைச் சொல்லு. பிறகு ஏதாவது ஏடாகூடாமாச் சொல்லி என்னை மாட்டிப்போடாதை.' என்றான்.

இந்து அவனுடன் எதுவுமே பேசவில்லை. அவளுக்கு கோகுலைப் பார்க்க மிகவும் பாவமாக இருந்தது. சங்கர் போனபின் நேர்ஸ்சைக் கேட்டு வேறொரு நகரில் இருக்கும் அண்ணன் மாதவனுடன் ரெலிபோனில் தொடர்பு கொண்டு நடந்தவைகளைச் சொன்னாள். அவன் அடுத்த சில மணிகளிலேயே பதறியடித்துக்கொண்டு ஓடி வந்தான். 'நான் சங்கரை என்னென்று கேட்கிறேன். நீ கவலைப்படாதே என்றான்' இந்துவின் பக்கத்தில் இருந்து ஆறுதலாகக் கதைத்தான். ஆனால் கடைசியில் போகும் போது 'இந்து இனி இப்பிடியான வேலையளைச் செய்து போடாதை, என்னெண்டாலும் பொம்பிளையள்தான் அனுசரிச்சுப் போகோணும்'. என்று சொல்லி விட்டுப் போனான்.

பின்னர் இந்து நோர்வேயில் இருக்கும் அண்ணனுடன் தொடர்பு கொண்டபோது அவனும் மாதவனைப் போலவே பதறினான். சங்கர் மேல் கோபம் கொண்டு



திட்டினான். ஆனால் கடைசியில் 'இந்து! ஆம்பிளையள் எண்டால் அப்பிடி இப்பிடித்தான் இருப்பினம். பொம்பிளையள்தான் கெட்டித்தனமா அதுகளை உணர்ந்து நடக்கோணும்..! உனக்குக் கெட்டித்தனம் போதாது' என்று சலித்தான். ரேலிபோனை வைக்கும்போது, 'இந்து இனி இப்பிடி புத்தி கெட்ட முடிவுகளை மட்டும் எடுத்துப் போடாதை. சங்கரைத் திருத்தப்பார்' என்றான்.

இந்துவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'எல்லாரும் என்னிலைதானே பழியைப் போடுகினம். சங்கரின்ரை தவறு ஒருத்தருக்கும் தவறாத் தெரியேல்லையே...! சங்கராவது என்ரை நடவடிக்கையாலை திருந்தினானோ எண்டு பார்த்தால் அவன் கூடத் திருந்தினதாத் தெரியேல்லையை' இந்து மனசுக்குள் பெரிதும் குழம்பினாள். சங்கர் இந்துவைப் பார்க்க இடைக்கிடை 'கொஸ்பிட்டலுக்கு' வந்து போனான். மாதவன் வந்து இந்துவைப் பார்த்துப் போன மறுநாளே கோகுலை மாதவன் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டான் பொறுப்பான அப்பாவாக வீட்டில் நின்று கோகுலைப் பார்க்கவில்லை. எல்லாவற்றையும் மருத்துவமனையின் தனிமையில் இருந்து யோசித்துப் பார்த்த இந்துவுக்கு கோகுலை நினைக்க நினைக்க அழுகையாக வந்தது. சங்கருக்காக கோகுலைத் தண்டிச்சுப் போட்டனோ என்ற நினைவு அவளைப் பாடாய்ப் படுத்தியது.

இப்படியே சில வாரங்கள் ஓடி இந்துவும் ஓரளவு குணமாகினாள்.

'மிஸஸ் சங்கர், உங்கடை குடல் மிகவும் பலவீனமாப் போயிட்டுது. இந்த முறை ஏதோ அதிர்ஸ்ட வசமாத் தப்பீட்டிங்கள். இன்னொருக்கால் இப்பிடி நீங்கள் மருந்தைக் குடிச்சால் எங்களாலை உங்களைக் காப்பாற்றேலாமல் போயிடும். இது உங்கடை உடம்பு நீங்கள்தான் உங்கடை உடம்பிலை கவனமாயிருக் கோணும்....! என்ற அன்பான கண்டிப்பான பல நிபந்தனைகளோடு அவளை வீட்டுக்கு அனுப்பி வைத்தார் டொக்டர்.

இந்து வீட்டுக்கு வந்தபின் சங்கரிடம் தென்பட்ட சில மாற்றங்களை வைத்து சங்கர் திருந்தி விட்டான் என்றே நினைத்தாள். அவளின் அந்த நம்பிக்கையெல்லாம் சில நாட்களுக்குத்தான்.

*(மிகுதி அடுத்தவாரம்)*

**சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி)**

# சுவிஸ் தமிழர் விளையாட்டு விழா

காட்சியும் பதிவும்



1ம் இடம் கனடா - 18 வயதுக்கு மேற்பட்ட பிரிவு



2ம் – 3ம் இடத்தை பெற்றுக்கொண்ட டென்மார்க் – சுவிஸ் அணிகள்

# GALAXY Production

## Calling card

பல்லாயிரக்கணக்கான பிரான்ஸ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற **Galaxy** Calling Card அனைத்து தமிழர் வர்த்தக ஸ்தாபனங்களிலும் விற்பனையில் பெரு எழுச்சியை எட்டிக்கொண்டிருக்கிறது.

**CARTES TELEPHONIQUES PREPAYEES**

**Galaxy** Calling Card மூலம் அதிகரிக்கப்பட்ட நிமிடங்களாக,




இலங்கைக்கு உரையாடுவதற்கு




தமிழ்நாடு (சென்னை)
N° Vert 43 (min)
Cabine 50 (min)

வீடுகளிலிருந்து... 80 நிமிடங்கள்

பொதுத் தொலைபேசி மூலமாக... 65 நிமிடங்கள்

நீங்கள் தொடர்புகொள்ளும் நிமிடங்கள் மட்டும் கட்டணம் அறவிடப்படும்.
மேலதிக லோக்கல் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

Galaxy Calling Card விநியோகஸ்தர்களுக்கு சிறப்பு விற்பனைத் தள்ளுபடி உண்டு.

Quick Telecom

| DESTINATION | Numéro Local(min) | N° Vert Cabine (min) |
|---|---|---|
| ALGÉRIE | 90 | 70 |
| ALLEMAGNE | 600 | 183 |
| BANGLADESH(chittagong) | 92 | 68 |
| BANGLADESH (Dhaka) | 76 | 76 |
| BELGIQUE (Bruxelles) | 699 | 188 |
| BÉNIN | 45 | 39 |
| CAMEROUN(douala) | 107 | 76 |
| CANADA | 625 | 176 |
| CENTRE AFIQUE REP. | 46 | 46 |
| CHILE | 200 | 120 |
| CHINE(beijing) | 150 | 112 |
| COLOMBIE (bogota) | 100 | 80 |
| COMORES | 50 | 45 |
| CONGO | 55 | 46 |
| COTE D'IVOIRE (abidjan) | 45 | 45 |
| DENMARK | 600 | 184 |
| DOMINCAN REP. | 130 | 89 |
| EGYPT | 36 | 15 |
| ÉQUATEUR (cuenca) | 65 | 52 |
| ÉTATS-UNIS | 517 | 171 |
| FRANCE (paris) | 700 | 189 |
| FRANCE(gsm) | 65 | 50 |
| FRANCE | 600 | 177 |
| GABON | 70 | 55 |
| GAMBIE | 50 | 38 |
| GHANA (Accra) | 59 | 48 |
| DESTINATION | | N° Vert Cabine (min) |
| GUADELOUPE | 75 | 62 |
| GUINÉE(bissau) | 50 | 36 |
| INDE (mumbai) | 46 | 39 |
| INDE(chennai) | 43 | 32 |
| INDE (New Delhi) | 40 | 34 |
| IRAN | 28 | 22 |
| ISRAËL | 140 | 91 |
| ITALIE(Milan) | 578 | 178 |
| LIBAN | 72 | 56 |
| MADAGASCAR | 40 | 36 |
| MALI REP. | 44 | 40 |
| MAURITANIE | 50 | 48 |
| NIGERIA(Akure) | 42 | 32 |
| PAKISTAN(lahore) | 35 | 28 |
| PHILIPPINES | 90 | 72 |
| POLOGNE | 129 | 86 |
| ROUMANIE (Bucharest) | 151 | 95 |
| SÉNÉGAL(Dakar) | 45 | 40 |
| SRI LANKA | 77 | 60 |
| SUISSE(Zurich) | 589 | 179 |
| THAILANDE(Bangkok) | 100 | 92 |
| TUNISIE | 60 | 60 |
| TURQUIE (Istanbul) | 120 | 85 |
| UK(Local) | 1000 | 221 |
| VIETNAM | 24 | 24 |
| ZAÏRE | 40 | 40 |

பிரான்ஸ் அலுவலக தொடர்புகளுக்கு:

QUICK TELECOM G.R.E.
137, Boulevard Voltaire, 75011 Paris.
Tel: 01 43 72 77 77

வர்த்தகத் தொடர்புகளுக்கு:

Sun Tel
178. rue du Fbg St denis,
75010 Paris
Tel: 01 40 34 11 28

# தமிழீழ வரலாறு கண்ட வீரப் பரம்பரை

**05**

வரலாற்றுக் கற்பனை நாடகமாகத் 'தணியாத தாகம்' என்ற பெயரில் கைலாய வன்னியனின் வீரவரலாறு 1968 ஆம் ஆண்டில் வெளியானது. மூன்றாம் பதிப்பாக 1976 இல் இந்நூல் வெளியானதிலிருந்து [ஈழத்தமிழகத்தில் நாடக நூலாய் இல்லாமலே வெளியானது ஒரு சாதனையே] இது மக்கள் உள்ளத்தினை எந்த அளவிற்குக் கவர்ந்திருக்கும் என்று நாம் எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். 'தணியாத தாகம்' நாடக நூலிலே இக்காலத்திற்கு ஏற்ற பல அரிய கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றிற் சில பின்வருவன:

'தாக்காமலே தாக்கும் தந்திரத்தில் கைதேர்ந்தவர்கள் டச்சுக்காரர். தமது நாட்டை அவர்கள் முற்றுகையிட்டாலும் தாம் ஆச்சரியப்படக் கூடாது. அப்படி நேரிடும் பொழுது மற்றைய அயலவர்களுடன் உள்ள தொடர்பு, உணவு விநியோகம் யாவும் துண்டிக்கப்படும். எமது உணவு, உடை யாவும் இங்கேயே உற்பத்தியாக வேண்டும். எந்த ஒரு உதவிக்கும் அயல் நாட்டை நம்பியிருக்கக்கூடாது' [21]

'செண்பகவல்லி! சற்றுச் சிந்தித்துப்பார் படைகள் மட்டும் பகைவரை விரட்டிவிட முடியாது. நாட்டின் எல்லையை ஊடுருவும் நயவஞ்சகப் பகைவருடைய ஒற்றர்களை எதிர்த்துப் போராட வேண்டியவர்கள் ஊர்ப்பொதுமக்களாகிய நாமல்லவா? [22]

'நீர்த்துளி, என்று கடலுடன் கலந்து விடுகிறதோ அன்றே அதற்கு நித்திய வாழ்வுண்டு. அதே போலத்தான் நாம் தனித்துளிகள் தமிழ்ச் சமூகம் என்னும் தண்டமிழ்க் கடலில் கலந்துகொண்டால்தான் நமக்கு நித்திய வாழ்வுண்டு.' [23] '...இருப்பதும் ஒரே உயிர்தான். அந்த உயிர் நம்மை விட்டுப்பிரிவதும் ஒருமுறைதான். அந்த உயிரைப் பிறந்த நாட்டுக்காக இறந்துவிட்டு விடுவதாகத் தீர்மானித்து விட்டோம்' [24]

கைலாயவன்னியனின் பரம்பரையில் வந்த நல்லம்பாண வன்னியன் மனைவியான நல்லநாச்சனிலும் வன்னியரது துணிவும் மன உறுதியும் நிலவின என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது.

'1790 ஆம் ஆண்டளவில் பனங்காமத்து நல்லம்பாண வன்னியன், சிங்கள வன்னியன் ஒருவனின் மறைமுகமான குற்றச்சாட்டுக் காரணமாகக் கைதியாகி கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு 12,000 றிக்ஸ் டொலர் [Rix Dollars] அபராதம் விதிக்கப்பட்டான். அவனுடைய நிலம் முழுவதும் பறிக்கப்பட்டு வண்ணார்பண்ணை வாசகரான தாமோதரம் பிள்ளை என்பவருக்குக் குத்தகையாக அளிக்கப்பட்டது. அபராதப்பணம் செலுத்தும்வரை நல்லம்பாண வன்னியன் சிறையிருக்கநேர்ந்தது. தாமோதரம்பிள்ளை தமது குத்தகை நிலத்திலிருந்து மூன்று ஆண்டுகளில் அமோகமான வருவாயைப் பெற்றார். நல்லநாச்சன் [நல்லம்பாணன் மனைவி] யாழ்ப்பாணம் வந்து வண்ணார்பண்ணையில் வசித்தாள்; தன் கணவன் சிறையிலிருந்து மீளும்வரை குளிப்பதில்லை என்றும் ஒரு நேர உணவே உண்பதென்றும் கடும் விரதத்தினை அநுட்டித்தாள். வன்னியனின் குடும்ப நண்பரும் ஒல்லாந்த அரசில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தவருமான வைத்தியலிங்கச் செட்டியார் கொழும்பு சென்று அவனுக்கு விதிக்கப்பட்டிருந்த அபராதத்தை இறுத்து, நல்லம்பாணவன்னியனை மீட்டு வந்தார்' [25]

*பண்டாரவன்னியன்*

*நெற்றியில் நிலைத்த நீறும்*
*நீள்கரம் பிடித்த வாளும்*
*வெற்றியைக் குறித்த நோக்கும்*
*வீரத்தை விளைத்த நெஞ்சும்*
*உற்றவெம் பகையை வென்று*
*உயர்கொடியுடன் அடங்காப்*
*பற்றினை ஆண்ட வீரப்*
*பண்டார வன்னித்தோற்றம் (26)*

என்று வருணிக்கப்படும் பண்டாரவன்னியன்.

*காற்றிலா விடினும் வாழ்வோம்*
*கனவிலும் அடிமைத் தாழ்வை*
*ஏற்றிடோம் எனப்போர் செய்த*
*ஏந்தல் [27]*

ஆவான். இவனுடைய முழுப்பெயர் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன். இவனை 'நுவரகளாவியைச் சேர்ந்தவன் எனச் சிலரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவன் எனச் சிலரும் கருதுகின்றனர். இவ் வன்னியனது யுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அடங்காப் பற்றுப் பிரதேசத்திலேயே நடைபெற்றிருக்கின்றன.'[28]

மகாவன்னி என அழைக்கப்பட்ட நுவரகளாவிய சிங்களப் பிரதேசமாயினும் இங்கு தமிழர் வாழ்ந்தமைக்கான சான்று பின்வருவது:

'இரண்டாம் இராச சிங்கனின் கைதியாகி 18 ஆண்டுகள் கண்டியில் வாழ்ந்த றொபேட் நொக்ஸ் தப்பியோடியபோது, அநுராதபுரத்தில் வாழ்ந்த மக்களுடன் சிங்கள மொழியில் உரையாடிய பொழுது அதை அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லையென்றும் அவர்களின் தாய்மொழி தமிழாக இருந்ததென்றும் குறிப்பிடுகின்றார்.' [அநுராதபுரம் மகாவன்னியுள் அடங்கியிருந்தது என்பதும் இதனால் பெறப்படுகின்றது. குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன் என்ற பெயர்கொண்டு இம்மாவீரன் தமிழன் என்பதும் நிரூபணமாகின்றது] ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலும் வாழ்ந்த பண்டாரவன்னியன், ஒல்லாந்தர்சாயவேர் [Dye Roots] திறையாகக் கேட்ட பொழுது கொடுக்க மறுத்துவிட்டான். ஈழத்தின் கரையோரப்பகுதியை ஆக்கிரமித்ததோடு, படைபலமும் மிகுந்தவர்களாய் விளங்கிய ஒல்லாந்தரின் பணிப்பினை மறுத்த இவனது துணிவு பெரிதும் பாராட்டவேண்டியதே.



## 'சங்கிலி' முதல் 'பிரபாகரன்' வரை



ஈழக் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றமுடிந்த ஒல்லாந்தரால் மத்திய மலைநாட்டுப் பிரதேசமான கண்டியைக் கைப்பற்றுவது அரிதாகவே இருந்தது. 1815ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயராலும் இது முடியாமல் இருந்ததற்குக் கண்டி அரசனதும் மக்களதும் சுதந்திர உணர்வும் வீரமுமே காரணமாய் இருந்தன. 'இனம் இனத்தையே சாரும்' என்ற பழமொழிக்கேற்ப வீரனான பண்டார வன்னியனும் அவனைச் சார்ந்த வன்னியரும் கண்டியரின் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களுக்குப் பக்கத்துணை ஆயினர். இதனால் பண்டாரவன்னியன் ஒல்லாந்தரதும் ஆங்கிலேயரதும் சீற்றத்துக்கு உள்ளானான். எனினும் அவன் இவர்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. '1803 ஒகஸ்ட் 25 ஆந்திகதி முல்லைத்தீவிலிருந்த அரசாங்க இல்லத்தைத்தாக்கி அங்கு கப்டன் வொன்டிறிபேக்கின் தலைமையிலிருந்த படையைப் பின்வாங்கச் செய்தான். கப்டன் டிறிபேக் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வள்ளங்களின் உதவியுடன், தனது படைகளுடன் தப்பி ஓடினான்' [29]

இத்தோல்வியால் நாணமும், பழிவாங்கும் உணர்வும் பெற்ற ஆங்கிலேயர் பண்டாரவன்னியனைத் தோற்கடிக்கச் சூழ்ச்சியில் இறங்கினர். கரிக்கட்டுமூலைத் தலைவனான காக்கைவன்னியனை ஆசைகாட்டி மயக்கி அவனைத் தம் பக்கமாக்கி அவன் உதவியோடு மீண்டும் பண்டாரவன்னியனை வெல்ல முற்பட்டனர். இம்முயற்சி மும்முனைத் தாக்குதலாக உருக்கொண்டது. 'ஜோன் ஜெவல் என்பவரின் தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படையும், கப்டன் எட்வேட் மெச் என்பவரின் தலைமையில் திருக்கோணமலையிலிருந்து ஒருபடையும், கப்டன் வொன்றிபேக் தலைமையில் மன்னாரிலிருந்து இன்னோர் பெரும்படையும் தரைமார்க்கமாக வன்னி நாட்டை நோக்கிச் சென்றன' [30]

*அடிக்குறிப்புக்கள்:*

*21. ஷெ பக்.29 22. ஷெ பக்.49, 23. ஷெ பக்.49 24. ஷெ பக் 80*

*25. வன்னிமண்ணின் முதல் விடுதலை வீரன் பண்டாரவன்னியன்– பண்டாரவன்னியன் விழாமலர் (Vanni and Vanniyas நூலிலிருந்து அடிக்குறிப்பு மேற்கோளாய்த் தரப்பட்டுள்ள ஆங்கிலப் பகுதியின் மொழிபெயர்ப்பு) பக். 65 கே.எஸ். மெட்றாஸ்மயில்*

*26. பண்டாரவன்னித் தோற்றம்-ஷெ மலர் பக்.*

*27. ஷெ பக்.37*

*30. விடுதலை முரசொலிக்கும் வீர வரலாறு படைத்தவன் க. தர்மலிங்கம் மேற்படி மலர் 67,68 ஆம் பக்கங்கள்.*

- க. சொக்கலிங்கம் (சொக்கன்)

[தொடரும்]

# உலக ஆசிரியர் மாநாட்டில் நோர்வேயின் மத்தியஸ்தம் வலியுறுத்தல்

*மூன்றாவது வருடாந்த உலக ஆசிரியர் மாநாடு தாய்லாந்து நாட்டில் ஜொம்ரில் நகரில் கடந்த மாதம் 25ம் திகதி தொடக்கம் யூலை 30ம் திகதி வரை நடந்தது. இந்த மாநாட்டை ஒழுங்கு செய்து நடத்தியது 'எடியுகேஷன் இன்ரநஷனல்' என்ற சர்வதேச அமைப்பாகும். இந்த அமைப்பில் பல நாடுகளில் உள்ள ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. 150 நாடுகளில் உள்ள 310 ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இவ் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இதில் அங்கம் வகிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை இரண்டு கோடியாகும். எனினும் கடந்த யூலை மாதம் கடைசி வாரத்தில் நடந்த உலக ஆசிரியர் மாநாட்டில் பங்குபற்றிய ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரம் வரையாகும். இலங்கையிலிருந்து ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சார்பில் ஒன்பது பிரதிநிதிகள் தாய்லாந்து மாநாட்டில் பங்குபற்றினார்கள். அவர்களில் ஒருவர் மட்டுமே தமிழர். அவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த.மகாசிவம் ஆவார். இதேவேளை, இந்தியாவிலிருந்து பங்குபற்றிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிலும் திரு.எஸ்.ஈஸ்வரன் என்ற ஒரேயொரு தமிழர் மட்டுமே கலந்துகொண்டார். திரு ஈஸ்வரன் இந்தியாவில் உள்ள ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுச்செயலாளராகப் பணிபுரிந்து வருகின்றார்.*

*கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் ஆகியன விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட மறுநாள் தான் தாய்லாந்து நாட்டில் உலக ஆசிரியர் மாநாடு ஆரம்பமானது. மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் அமெரிக்க ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவரான ஒரு பெண். மாநாட்டில் பங்குபற்றிய இலங்கைப் பிரதிநிதிகள் மத்தியில் கட்டுநாயக்கா தாக்குதல் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியது.*

*உலகில் ஆசிரியர்களுக்கு இருக்கும் பல பிரச்சினைகள் குறித்து இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. இலங்கையில் தற்போது இடம்பெறும் யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஆசிரியர்கள் மற்றும் தமிழ் மாணவர்கள் அடையும் இன்னல்கள் பற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், உலகில் உள்ள ஆசிரியர்கள் சங்கங்களின் கவனத்திற்கு பல வழிகளில் கொண்டு வந்துள்ளது. 'எடியுகேஷன் இன்ரநஷனல்' அமைப்பு ஆண்டுதோறும் உலக ஆசிரியர் மாநாட்டை நடத்தி வருகின்றது. இலங்கையில் இடம்பெறும் யுத்தம் மற்றும் அதனால் பாதிக்கப்படும் தமிழ் மக்கள் பற்றி உலக ஆசிரியர்கள் மாநாடுகளில் தீர்மானங்களை நிறைவேற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த காலங்களில் முயற்சி எடுத்து வந்தும், அது பலனளிக்கவில்லை. அப்போது இலங்கையிலிருந்து சென்ற ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளின் ஏகோபித்த ஆதரவு அம்முயற்சிக்குக் கிடைக்கவில்லை என்பதே அதற்குக் காரணமாகும்.*

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இவ்வாண்டும் அம்முயற்சியை மேற்கொண்டது. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு பிரேரணையை இம்மாநாட்டில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முயற்சி எடுத்தது. ஆனால் சிங்கள ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள், கட்டுநாயக்க விமானத்தாக்குதலுக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரமுயற்சித்தனர். அவ்வாறு பிரேரணை ஒன்று கொண்டுவரும் பட்சத்தில் இலங்கை யுத்தத்தில் பாதிக்கப்படும் மக்கள் தொடர்பாக இன்னொரு பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஏனைய நாடுகளில் உள்ள ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளின் ஆதரவை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் நாடியிருந்தது.*

*இதனால் ஆதரவுகள் பெருகத் தொடங்கியது. இந் நிலையில் சிங்கள ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நிலைமையை புரிந்து கொள்ள ஆரம்பித்தனர். ஏதோ ஒரு வித இணக்கத்திற்கு வருவதற்கு சிங்களப்பிரதிநிதிகள் சம்மதித்தனர். கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குல் சம்பவம் தொடர்பாக மாநாட்டில் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கவும், அதே நேரத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்றும், இராணுவத் தீர்வு காணப்படக்கூடாது என்றும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்ற சிங்களப் பிரதிநிதிகள் சம்மதிக்க வேண்டியதாயிற்று. இறுதியில் பின்வரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு சிங்களப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.*

*சர்வதேச சமூகத்தின், குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளின் ஆதரவைப்பெற்றுள்ள நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியை சிறீலங்கா அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும் என்று உலக ஆசிரியர் மாநாடு சிறீலங்கா ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும், இராணுவத் தீர்வு அல்ல இவ்வாறு கூறும் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு சிங்களப்பிரதிநிதிகள் சம்மதித்தார்கள் என்பது மட்டுமல்ல, இப்பிரேரணையை முன்மொழிவதற்கும் அவர்கள் உடன்பட்டார்கள்.*

## திருமலையில் இருந்து நாதன்

*அதற்கிணங்க அரசாங்க ஆதரவு தொழிற்சங்கமான சிறீலங்கா சுதந்திர ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஸ்தாபக தலைவர் திரு எம்.பி.மெண்டிஸ் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஸ்தாபக தலைவர் திரு. ஸ்ரான்லி பெரெரா ஆகியவர்கள் பிரேரணையை கூட்டாக முன்மொழிந்தார்கள். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த.மகாசிவம் பிரேரணையை வழிமொழிந்தார். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிக்கு உலக ஆசிரியர் அமைப்புக்களின் ஆதரவை இவ்வாண்டு பெற்றுக் கொண்டது முக்கியமல்ல, இலங்கையில் இருந்து சென்ற அனைத்து ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகளும் சிங்களப்பிரதிநிதிகளும் உட்பட ஏகோபித்த முறையில் அந்தப் பிரேரணைக்கு ஆதரவு கொடுத்ததுதான் மிக முக்கியமானது என்று ஆசிரியர் வட்டாரங்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.*

# உலகில் இவ்வாரம்

## ஒகஸ்ட் 05 முதல் 11 வரை

**5**

1529: பிரான்ஸ் நாட்டின் முதலாம் பிரான்சிசும், புனித ரோமின் ஐந்தாம் சார்லசும் காம்பராய் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் பிறகு இத்தாலி மீதான உரிமையை பிரான்சிசும், பர்கண்டி மீதான உரிமையை சார்லசும் கைவிட்டனர்.

1716: சவாயின் இளவரசர் யுஜின், தன் வசமிருந்த 40,000 படை வீரர்களுடன் தர்ணாட் அலி பாஷாவின் தலைமையின்கீழ் இருந்த 1,50,000 வீரர்களை படுதோல்வியடையச் செய்தார். இதில் 30,000 துருக்கிய வீரர்கள் மரணமடைந்தனர்.

1858: அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்குமிடையேயான தந்தி வசதி, அட்லாண்டிக் கடலுக்கடியே போடப்பட்ட கேபிள் துணையுடன் துவங்கியது. இதன் மூலம் பாய்ந்த மின்சாரம் மிகவும் பலவீனமாக இருந்ததால் இந்த வசதி செப்டம்பர் மாதம் 1ம் திகதியுடன் நிறுத்தப்பட்டது.

1895: கம்யூனிச தத்துவத்தை கார்ல் மார்க்சுடன் இணை-ந்து உருவாக்கிய ப்ரீட்ரிச் எங்கல்ஸ், லண்டனில் காலமானார்.

1914: முதலாம் உலகப் போரில், ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி மீது மாண்டே நீக்ரோ படையெடுத்தது. இந்தப் போரில் ஈடுபடாமல் கியூபா, உருகுவே, மெக்சிகோ மற்றும் அர்ஜென்டினா நடுநிலை வகித்தன.

1914: போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் முதல், மின்சார சிக்னல், அமெரிக்காவின் ஒஹையோ மாவட்டத்தின், கிளீவ்லேண்ட் நகரில் நிறுவப்பட்டது.

1930: சந்திரனில் காலடி பதித்து, உலகப்புகழ்பெற்ற விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் பிறந்தார்.

1949: ஈக்வடாரின், அம்பாட்டோ மற்றும் 4 நகரங்களை பாதித்த பெரும் பூகம்பத்தில் 6,000 பேர் கொல்லப்பட்டனர். 1,00,000 நபர்கள் வீடிழந்தனர்.

1962: உலகப் புகழ்பெற்ற நடிகை மர்லின் மன்றோ, தனது 36வது வயதில், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மரணமடைந்தார்.

**7**

1858: கனடா நாட்டின் தலைநகராக, ஒட்டாவா நகரை ராணி விக்டோரியா தேர்ந்தெடுத்தார்.

1904: ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளராக 1954 முதல் 1967 வரை பணியாற்றிய ரால்ஃப் பஞ்சே பிறந்தார். அராபியர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்குமிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிய முயற்சிக்காக, இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1959: அமெரிக்க விண்கலம், எக்ஸ்போளரர் 6, கேப் கானவரல், ஏவுகணை தளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டு, பூமியின் புகைப்படங்களை உலகிற்கு அனுப்பிய முதல் கலம் என்ற பெயர் பெற்றது.

1960: பிரான்ஸ் நாட்டிலிருந்து ஐவரி கோஸ்ட் நாடு சுதந்திரம் அடைந்தது.

1990: வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கான முதல் படியான, பேச்சுவார்த்தைகள் துவங்க அடித்தளம் அமைக்க ஒப்பந்தம் இடப்பட்டது. இதற்கு காரணமான நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசிய காங்கிரசின் 29 வருட கொரில்லாப் போர் நிறுத்தம் அமைந்தது.

**8**

1570: புனித ஜெர்மைன்–என்–லே ஒப்பந்தத்துடன் சமாதானம் ஏற்பட்டு, பிரான்ஸ் நாட்டில் மூன்றாவது உள்நாட்டுப்போர் முடிவிற்கு வந்தது. இதன் மூலம் ஹீகேனாட் மக்களுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு லா ரோஷேல் மற்றும் கோனியாக் பகுதியில் அவர்கள் அடைக்கலம் புகுந்தனர்.

1883: நிலத்துடன், விடுதலை என்ற கோசத்துடன், மெக்சிகோ நாட்டின் சர்வாதிகாரி பிரான்சிஸ்கோ மாதேரோவை வீழ்த்திய புரட்சி வீரர் எமிலியானோ ஜபாடா பிறந்தார்.

1918: முதலாம் உலக யுத்தத்தில், ஏமியன்ஸ் போர் துவங்கியது. 20 ஜெர்மானியப் போர்ப் படைப் பிரிவுகளை எதிர்த்து சண்டையிட்டு நேச நாட்டுப்படைகள் வெற்றிவாகை சூடின. இரண்டு மணி நேரமே நடந்த போரில் 16,000 வீரர்கள் யுத்தக் கைதிகளாகப் பிடிபட்டனர்.

1919: இந்தியாவிற்கும், ஆப்கானிஸ்தானிற்குமிடையே நடந்த சமாதான மாநாட்டின் முடிவில், ராவல் பிண்டி ஒப்பந்தம் கையெழுத்தானது.

1942: இரண்டாம் உலகப் போரின்போது, நாசவேலை புரிந்த குற்றத்திற்காக, அமெரிக்காவில் முதல் முறையாக 6 ஜெர்மானியர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

1963: பிரிட்டனில் நடைபெற்று, பின்னர் அதே பெயரில் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்ட 'தி கிரேட் ட்ரெயின் ராபரி' சம்பவம் நிகழ்ந்தது. கிளாஸ்கோ நகரிலிருந்து, லண்டன் செல்லும் மெயில் ரயிலில், 26 லட்சம் பவுண்டுகள் கொள்ளையடிக்கப்பட்டது.

1974: வாட்டர்கேட் ஊழலில், தனக்கிருந்த தொடர்பையடுத்து, ராஜினாமா செய்வதாக அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்ஸன், தொலைக்காட்சி பேட்டியின்போது அறிவித்தார்.

1990: குவைத் மீது படையெடுத்து அதனை ஆக்ரமித்து, தனது 19வது மாகாணமாக ஈராக் அறிவித்ததையடுத்து, அதனை மீட்க, அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், அமெரிக்கப் படைகளை, சவூதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்தார்.

1994: 46 ஆண்டுக்கால பகையை முடிவுக்கு கொண்டு வரும் நிகழ்ச்சியாக ஜோர்டானும், இஸ்ரேலும், எல்லைகளைத் திறந்துவிட்டுக்கொண்டன.

**9**

1792: பதினாறாம் லூயி மன்னனை நீக்குவது குறித்த மசோதா மீதான விவாதம் நடத்தப்படாமல், புரட்சிக்கான குரல் கிளம்பியதுடன், பிரெஞ்சு பாராளுமன்றம் முடிவுக்கு வந்தது.

1842: அமெரிக்காவிற்கும், கனடாவிற்குமிடையே எல்லையை நிர்ணயம் செய்த, அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்குமான வெப்ஸ்டர் ஆஷ்பர்டன் ஒப்பந்தம் கையெழுத்தானது.

1945: ஜப்பானிய நகரான நாகசாகி மீது அமெரிக்கா தனது இரண்டாவது குண்டைப்போட்டது. இதன் பாதிப்பினால், நகரின் பெரும்பகுதி தரைமட்டமானதுடன் 70,000 பேர் மாண்டனர்.

1965: காமன்வெல்த் கூட்டமைப்பிற்குள்ளேயே, மலேசியாவிலிருந்து, சிங்கப்பூர் பிரிந்து தனி குடியரசாக ஆனது.

**10**

1557: ஸ்பெயினிற்கும், பிரான்சிற்குமிடையே நடந்த போரில் எக்மான்ட் பிரபுவின்கீழ் போரிட்ட ஸ்பானியப் படைகளின் ஊடுருவலை தடுக்க முயன்ற பிரெஞ்சுப் படைகள் 14,000 வீரர்களை பலிகொடுத்தது. இதில் ஸ்பெயின் வீரர்கள் 50 பேர் கொல்லப்பட்டனர்.

1792: பிரெஞ்சுப் புரட்சியின்போது, வெறிகொண்ட அணி ஒன்று பாரிஸ் நகரிலிருந்த 'டுய்லெரீஸ்' அரண்மனையின் மீது படையெடுத்து, அங்கு காவலுக்கு இருந்த சுவிட்சர்லாந்துப் படையை படுகொலை செய்து, மன்னர் பதினாறாம் லூயியை சிறைப்பிடித்தது. இந்தப் போராட்டத்தில் சுமார் 1000 பேர் கொல்லப்பட்டனர்.

1885: உலகில் மின்சக்தியால் இயங்கும் முதல் டிராம் வண்டி, பால்டிமோர் நகரில் இயக்கப்பட்டது.

1913: பால்கன் நேச நாடுகள் என்று அழைக்கப்பட்ட கிரீஸ், செர்பியா, மான்டேநீக்ரோ, ரோமானியாவிற்கும், பல்கேரியாவிற்கும் இடையேயான இரண்டாம் பால்கன் போர், புகாரெஸ்ட் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானதுடன் முடிவிற்கு வந்தது.

1966: அமெரிக்காவின் கென்னடி முனையிலிருந்து, ஏவப்பட்ட ஆர்பிட்டர்–1 கலம், சந்திரனில் தரையிறங்க வசதியான இடங்களின் படங்களை பூமிக்கு அனு-ப்பி வைத்தது. ஒக்டோபர் 29ம் திகதியன்று இந்த விண்கலம் சந்திரனின் பக்கவாட்டில் மோதி சிதறியது.

1994: வங்கதேச எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன், தனது எழுத்துக்களுக்காக முஸ்லிம் தீவிரவாதிகளால் மிரட்டப்பட்டு ஸ்வீடன் நாட்டில் தஞ்சம் புகுந்தார்.

**11**

1712: சுவிட்சர்லாந்தில் ஆர்காவ் ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் சுவிட்சர்லாந்து போர் ஓய்ந்தது. அதோடு கத்தோலிக்கர்களை விட பிராட்டஸ்டண்டு கிறிஸ்தவ மதம் மேலானது என்று அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டு இருந்தது.

1858: டச்சு மருத்துவ நிபுணர் கிறிஸ்டியன் எய்ஜிகிமன் பிறந்த நாள். வைட்டமின் 'பி'யை கண்டுபிடித்த இவருக்கு 1929ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1863: கம்போடியா பிரான்சின் பாதுகாப்பு பராமரிப்பு நாடு ஆகியது.


1877: அமெரிக்க வானியல் ஆராய்ச்சியாளர் அசாப் ஹால், செவ்வாய் கிரகத்தின் துணை கிரகமான டெய்மோசை கண்டுபிடித்தார்.

1952: ஜோர்டானில் புதிய மன்னராக ஹுசைன் பதவி ஏற்றார். மன நோய் காரணமாக அவரது தந்தை தலால் பதவி இழக்க நேர்ந்தது.

1966: மலேசியாவுக்கும், இந்தோனேஷியாவுக்கும் இடையில் 3 ஆண்டுகளாக இருந்த பகைமையை போக்க ஜகார்த்தாவில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

# நாய்க்கு வந்த வாழ்வு

பெருநாட்டை சேர்ந்த டொமிங்கோ மியாயென்சி என்பவருக்கு பொழுதுபோக்கு நீர் சறுக்கு விளையாட்டுத்தான். பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றிருக்கிறார். தன் சாதனைக்கு துணையாக இப்போது ஒரு நாயையும் பயிற்சி கொடுத்து நீர்ச் சறுக்கலில் ஈடுபடுத்தியுள்ளார்.



இதில் வேடிக்கை என்னவென்றால், இவர் பயிற்சி கொடுத்து போட்டிகளில் பங்குபற்ற விட்டுள்ள இவரது நாய் ஒரு காலத்தில் கவனிப்பாரற்று வீதிகளில் குட்டியாக அலைந்து திரிந்தது. அதனைப்பிடித்து வந்து தனது செல்லப் பிராணியாக வளர்த்துள்ளார். தற்போது அந் நாய் நீரில் சறுக்கி வருவதைப் பார்ப்பதற்கு ஏராளமானவர்கள் கூடுகின்றனராம். நாய்க்கும் நல்ல மரியாதையாம்!

# பலதும் பத்தும்

## சாதனை வெற்றியை எட்டினார்



கடந்த இரு வாரங்களின் முன் இதே பகுதியில் '2000 தேள்களுடன் ஒரு மாத வாழ்க்கை' என்ற தகவலைப் படித்திருப்பீர்கள். மலேசிய நாட்டைச் சேர்ந்தவரான நுர்மலேனா ஹசன் (24) 2000 விடத் தேள்களுடன் இரவு பகலாக ஒன்றாக வாழ்ந்து தனது சாதனையை நிகழ்த்தியுள்ளார். கடந்த யூலை மாதம் 1ம் திகதியில் இருந்து 31ம் திகதி நள்ளிரவு வரை 130 சதுர அடி அறையில் தேள்களுடன் வாழ்ந்துள்ளார்.


அவரைப் பலமுறை தேள்கள் கொட்டியபோது மருத்துவ உதவி பெற்று தனது சாதனையை அவர் நிறைவேற்றியுள்ளார்.

# 23 ஆண்டுகளின் பின் வழங்கப்பட்ட தண்டனை

உயர் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் பொலிசாரிடம் இருந்து தப்பி காணாமல் போய் 23 ஆண்டுகளின் பின் பிடிபட்டு தனது தண்டனையை அனுபவித்து வருகின்றார். இச் சம்பவம் நடைபெற்றுள்ளது இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில்தான்.

1973ம் ஆண்டு சாலை விபத்தொன்றில் சிறுவன் ஒருவன் உயிரிழக்க காரணமாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட கிஷண்சிங் எண்பவர் மீதான குற்றம் 1976ம் ஆண்டு நிரூபிக்கப்பட்டு ஆறு மாதகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் பிணையில் வெளியே வந்த இவர் அதன் பின்னர் தலைமறைவாகி விட்டார். பொலிசார் அவரைத்தேடும் பணியை மேற்கொண்ட போதிலும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் கடந்த யூலை 30ம் திகதி பொலிசாரால் இவர் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது, நீதிமன்றம் பழைய தண்டனையை அனுபவிக்குமாறு தீர்ப்பு வழங்கியது. தற்போது ஆறுமாதகால தண்டனையை 23 வருடங்களின் பின் அனுபவித்து வருகிறார்.

# மரண அறிவித்தல்



தோற்றம்:
1926

மறைவு:
29.07.2001

# திருமதி நாகம்மா ஆறுமுகம்

புங்குடுதீவினைப் பிறப்பிடமாகவும், கரம்பனை வதிவிடமாகவும், சென்னையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஆறுமுகம் நாகம்மா அவர்கள் 29.07.2001 அன்று அதிகாலையில் சென்னையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அன்னலஷ்மி, விஜயலஷ்மி [இந்தியா], புஸ்பராணி [இந்தியா], இந்திரகுமார் [பிரான்ஸ்], நாகலஷ்மி [இந்தியா], சிவசுப்பிரமணியம் [பிரான்ஸ்], இராஜகுமார் [சுவிஸ்] இராஜேஸ்வரி [பிரான்ஸ்], விஜயகுமார் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற மகாலிங்கம், சிறீரங்கநாதன் [ஜேர்மனி], மாலினி, சரஸ்வதி, குணசேகரம் [பிரான்ஸ்], வளர்மதி, கீதாஞ்சலி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமியும்,

சதீஸ்குமார், சுரேஸ்குமார் [பிரான்ஸ்], சர்மினி, தினேஸ்குமார், நிவேதா, [இந்தியா], சாருஜா, சுஜீதா, சஞ்சிகா, சஞ்சனா, சயந்தன், சதுர்ஜா, சுகிர்தா, நிரூஜா, நிருஜன், நிருபன் [பிரான்ஸ்] விதுர்ஜன், விதுர்ஜிகா [சுவிஸ்] ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 06.08.2001 அன்று திங்கட்கிழமை சென்னையில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறார்கள்.

தொடர்புகளுக்கு: 0041419881483
0033014936 9148
0041817239725, 0149598720

தகவல்:
ம.சுரேஸ்குமார்

# புத்திசிகாமணி பதில்கள்

★ புத்திசிகாமணியாரே! குர்திஸ் பத்திரிகையொன்று அமெரிக்கத் துறைமுகம் மீதான [பேர்ள் காபர்] ஜப்பானின் தாக்குதலையும், அண்மையில் விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது நடத்திய தாக்குதலையும் ஒப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளதே. இது சரிதானா?

*க. இராஜமலர்– லியோன், பிரான்ஸ்.*

குறைந்த நேரத்தில் கூடிய இழப்புக்களை ஏற்படுத்திய தாக்குதல்கள் என்ற வகையில் இரண்டு தாக்குதல்களும் அவர்களின் ஒப்பிடுகைக்குரியவையாக இருக்கலாம். ஆனால் தாக்குதல் நடாத்தப்பட்ட விதம் வித்தியாசமானது. இத்தகையானதொரு தாக்குதல் உலகில் வேறெங்குமே நடைபெற்றதில்லை.

★ தாய்லாந்திலிருந்து வெளிவரும் 'ஏசியா ரைம்ஸ்' என்னும் ஆங்கில சஞ்சிகை கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதலின் பின் எழுதியுள்ள தனது ஆசிரியத் தலையங்கத்தில் அடுத்து யாழ்ப்பாணம் வீழ்வது தவிர்க்க முடியாதது என்று எழுதியுள்ளதே. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

*க. கணேசன்– ஒஸ்லோ, நோர்வே.*

சர்வதேசத்தின் பார்வை ஈழப்போராட்டத்தின்பால் மிகவும் கூர்மையாகத் திருப்பப்பட்டிருப்பதனையே அந்த ஆசிரியத் தலையங்கம் வெளிப்படுத்தி நிற்கிறதெனலாம். வியட்னாம் போராட்டத்தின் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்த 'தியான் பியான்பூ' வாக யாழ்ப்பாணமும் விரைவில் மாறும் என அவர்கள் எதிர்வு கூறுகின்றனர். அதேவேளை புலிகளின் தலைவர் பிரபாகரனின் உள் மனத்திட்டத்தை வெளிக்கொணர தம்மால் முடியாதென்பதையும் அவர்களே ஒப்புக்கொள்கின்றனர்.

★ புலம் பெயர் தமிழ் சூழலில் எம்மவர்களின் மரணங்கள் அதிகரித்து வருகிறதே, என்ன காரணம்?

*க. றங்கன் – ஒபகௌசன், ஜேர்மனி.*

தற்கொலை, இருதயநோய், விபத்துக்கள் மூன்றுமே மரணத்துக்கு முக்கிய காரணமாகவுள்ளது. தற்கொலை – ஏற்றுக்கொள்ள முடியாதது. வாழ்தலின் மகத்துவம் பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இருதய நோய்– கொழுப்புணவுகளை முடிந்தளவுக்குத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென வைத்திய ஆலோசனை கூறுகிறது. விபத்துக்கள்– அவதானமும் முன்னெச்சரிக்கையும் தேவை. அத்துடன் கொலைகளும் நடைபெறுகின்றது. இம் மரணங்கள் பற்றியதான சமூக அக்கறையுடன் கூடிய ஆய்வுகளும் தீர்வுகளும் அவசியமாகின்றது. எல்லாவற்றையும் விட புலம்பெயர் வழி மரணங்கள் மிகவும் கொடூரமும் அவலமும் நிறைந்தது. எமது ஆழ்கவனத்திற்குமுரியது.

## புலம் பெயர் தமிழ் சூழலில் எம்மவர்களின் மரணங்கள் அதிகரித்து வருகிறதே, என்ன காரணம்?

★ இந்தியப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பூலான் தேவி அண்மையில் டெல்லியில் வைத்துக்கொல்லப் பட்டுள்ளாரே, இதுபற்றி உமது கருத்தென்ன?

*க. கஜந்தன்– ஈஸ்ராம், லண்டன்.*

தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக வந்த பூலான் தேவியின் மரணத்திற்கு பழைய பகைமையே காரணம் எனச் சொல்லப்பட்டாலும், அவரின் வளர்ச்சியை சகித்துக்கொள்ளாத அதிகாரம் படைத்த மேலாண்மை சக்திகளே அவரின் கொலைக்குக் காரணமாக இருக்க முடியும் எனப் பரவலாக நம்பப்படுகிறது.

★ கடைசிவரைக்கும் ஈழத்தமிழர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட கூறாமல் கண்மூடி விட்ட சிவாஜியை நாங்கள் போற்றி மதிக்கத்தான் வேண்டுமா?

*இ.திலீபன்– பாரிஸ், பிரான்ஸ்.*

ஈழத்தமிழர்களைப் பற்றி அவர் எதுவும் கூறவில்லை என்பதற்காக அவரின் நடிப்பின் ஆற்றலை நாம் மதிக்காமல் விட முடியாதல்லவா. இந்த பிரான்ஸ் நாடுகூட அவரின் கலைத்துவத்திறமைக்காகத்தானே செவாலியர் விருது வழங்கிக் கௌரவித்தது.

★ யாழ்ப்பாணத்தில் தீவிர விமானத்தாக்குதலை சிறீலங்கா அரசு நடத்தாதிருந்திருந்தால் புலிகள் விமானப்படைத் தளத்தின் மீது தாக்குதலை நடத்தியிருக்கமாட்டார்கள் என இந்தியா தெரிவித்திருப்பதனை கதிர்காமர் கண்டித்துள்ளாரே?

*ச. றஜனி– டொட்முண்ட், ஜேர்மனி.*

விமானத்தளத் தாக்குதலை விழுந்தடித்து இந்தியா கடுமையாக கண்டிக்கவில்லையே என்ற ஆதங்கம் கதிர்காமருக்கு; மறுபுறத்தே தனக்கு அண்மையில் உலகமே வியக்கும் ஒரு மிகப்பெரும் இராணுவ சக்தியாக விடுதலைப்புலிகள் வளர்ந்துவிட்டதையும் இனி அவர்களுடனான உறவை மிக அவதானத்துடன் நகர்த்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தை இந்தியா உணர்ந்துள்ளதையுமே இவை யாவும் வெளிக்காட்டுகின்றது.

★ ஜே.வி.பியின் நிலை தற்போது எப்படியிருக்கிறது?

*த.தம்பிராஜா– பலெர்மோ, இத்தாலி.*

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற நிலையில் சிறீலங்காவின் இரு பெரும் கட்சிகளுக்கும் ஜாலம் காட்டிக்கொண்டிருக்கிறது ஜே.வி.பி! தற்போது சிறீலங்கா அரசியலில் மூன்றாவது பெரும் சக்தியாகவும் தமிழர் உரிமைப்போராட்டத்திற்கு எதிரான சிவப்புச் சகதியாயும் நெஞ்சு நிமிர்த்துகிறது.

★ என்றுமில்லாதவாறு கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதலைத் தொடர்ந்து அதிகாரிகள் உட்பட 15 இற்கும் மேற்பட்ட விமானப்படையினர் கைது செய்யப்பட்டு, இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுமுள்ளார்களாமே?

*ப. பகீரதன்– சூரிச், சுவிஸ்.*

சிறீலங்கா படைத்துறையின் பலவீனமும் விடுதலைப் புலிகளின் உளவறிவாற்றலின், மேன்மையுமே இதன் மூலம் புலப்படுகின்றது.

**உங்கள் கேள்விகளை,**
**புத்திசிகாமணி பதில்கள்**
**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**
**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**


# ஐரோப்பா வாழ் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஏடு

**கறுப்பு**

| அளவு | பெறுமதி Euro | Franc |
|---|---|---|
| 27 x 18.4 | 762.31 | 5000 |
| 27 x 9 | 457.39 | 3000 |
| 18.4 x 13.4 | 457.39 | 3000 |
| 18.4 x 8.6 | 304.92 | 2000 |
| 13.4 x 9 | 243.94 | 1600 |
| 9 x 8.7 | 152.46 | 1000 |
| 9 x 6.6 | 121.97 | 800 |
| 18.4 x 3.1 | 121.97 | 800 |
| 6.5 x 4.4 | 76.23 | 500 |
| 9 x 3.1 | 76.23 | 500 |
| 4.4 x 3.1 | 53.36 | 350 |

ஐரோப்பிய தமிழர் தகவல்
**களஞ்சியம**

ஐரோப்பா வாழ் தமிழர்களுக்கு பயன்தரக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய வழிகாட்டி நூல்

**இது ஓர் ஈழமுரசு வெளியீடு**

2002ல் வெளிவர இருக்கும் இத் தகவல் களஞ்சியமானது ஐரோப்பா வாழ் தமிழ் மக்களை நாடு ரீதியாக, அவர்களின் விபரங்கள், மற்றும் முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவரவுள்ளது. தங்களின் விபரங்களை விளம்பரமாகவோ அல்லது தகவல்களாகவோ வெளியிட விரும்பின் 15.09.2001 இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் உறையின் மேல் இடதுபக்க மூலையில் 'தகவல் களஞ்சியம்' என்று குறிப்பிட்டு ஈழமுரசின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**வர்ணம்**

| அளவு | பெறுமதி Euro | Franc |
|---|---|---|
| 27 x 18.4 | 1524.62 | 10000 |
| 27 x 9 | 914.78 | 6000 |
| 18.4 x 13.4 | 914.78 | 6000 |
| 18.4 x 8.6 | 609.84 | 4000 |
| 13.4 x 9 | 487.88 | 3200 |
| 9 x 8.7 | 304.92 | 2000 |
| 9 x 6.6 | 243.94 | 1600 |
| 18.4 x 3.1 | 243.94 | 1600 |
| 6.5 x 4.4 | 152.46 | 1000 |
| 9 x 3.1 | 152.46 | 1000 |
| 4.4 x 3.1 | 106.72 | 700 |

விளம்பரம் தொடர்பான ஏனைய விபரங்களுக்கும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளவும்:

**EELAMURASU**
**22, Rue Perdonnet, 75010 Paris, FRANCE.**
**Tél: 00 33 (1) 40 37 63 63**
**Fax: 00 33 (1) 40 37 64 64**
**E.Mail-kalangiam@worldonline.fr**

களஞ்சியம

தாங்கள் தெரிவு செய்யும் விளம்பர அளவு மற்றும் விபரங்களை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

பெயர்: ..............................

முகவரி: ..............................

தாங்கள் தெரிவு செய்யும் அளவு

தங்கள் தெரிவின் விபரம்

கறுப்பு/மஞ்சள்

வர்ணம்

தொலைபேசி: ..............................

தொலை நகல்: ..............................

கைத்தொலைபேசி: ..............................

மின்னஞ்சல் (E.mail): ..............................

# கம்பேர்க் தமிழாலய பத்தாவது ஆண்டு நிறைவு விழா

ஜேர்மன் உலகத் தமிழர் இயக்க கல்விப்பணியின் கீழ் இயங்கும் கம்பேர்க் தமிழாலயம் தமது பத்தாவது ஆண்டுவிழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் திரு. இரா. நாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இவ்விழா ஜூன் மாதம் 16ம் திகதி மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் நடைபெற்றது.

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து திரு.இரா நாகலிங்கம், நடன ஆசிரியை திருமதி. அற்புதராணி கிருபராஜ், மாணவன் செல்வன். குகராஜ் அருள்ராஜ் ஆகியோர் மங்கல விளக்கேற்றினர். தமிழாலயகீதம் மாணவர்களினால் பாடப்பட்டதையடுத்து செல்வி. பிரிதா குணசேகரம் வரவேற்புரை வழங்கினார்.

கம்பேர்க் தமிழாலயத்தின் பத்தாண்டு சேவை குறித்து, அதன் நிர்வாகி திரு. வை. இரத்தினம் தலைமை உரை நிகழ்த்தினார். இதனையடுத்து பேச்சு, கவிதை, நடனம், அபிநயப்பாடல், காவடி, நாடகம், இசையுடன் பாட்டு என தொடர்ச்சியாக மாணவர்களின் ஆக்கங்கள் இடம்பெற்றன.

நடன ஆசிரியை திருமதி. அற்புதராணி கிருபராஜ் தயாரித்து வழங்கிய தமிழாலய மாணவிகளின் மூன்று நடனங்களும் சிறப்பாக அமைந்திருந்தன. தமிழாலய ஆசிரியைகளான திருமதிகள் யோ. சுபத்திரா, சு.சுஜாத்தா, ர. புஷ்பலதா, சு. பிறேமாவதி, சி. காந்தரூபி ஆகியோரின் நெறியாக்கத்தில் காவடி, அபிநயப் பாடல்கள், உரையாடல், நாடகம் ஆகியவை இடம்பெற்றன.

'உயர்திணை', '100 பூக்கள் மலரட்டும்', 'செல்விருந்தோம்பி வருவிருந்து', 'சூழ்ச்சி' ஆகிய நாடகங்களுடன் 'புதுயுகவெற்றி' என்ற தாளலயம் ஆகிய மாணவர்களின் திறமையை எடுத்துக் காட்டியது. பத்தாண்டு சாதனை நிரம்பிய 'பத்தாண்டு மலர்' வெளியிடப்பட்டது. இதனை திரு. இரா. நாகலிங்கம் வெளியிட முதல் இதழை ஆசிரியை திருமதி. யோ. சுபத்திரா பெற்றுக்கொண்டார்.

மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டதுடன் பத்தாண்டுகளாகத் தொடர்ந்து படிக்கும் ஐந்து மாணவர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கப்பட்டன. கம்பேர்க் தமிழாலயத்திற்கு ஜேர்மன் ரீதியில் பரிசு பெற்றுத்தந்த மாணவர்களும் விசேட பரிசுகளைப் பெற்றனர்.

தமிழாலய ஆசிரியர்கள் பரிசளித்து கௌரவிக்கப்பட்டனர். பத்து ஆண்டுகளாக கற்பித்த ஆசிரியர் திருமதி. யோ. சுபத்திரா மாணவர் பெற்றோராலும் கௌரவிக்கப்பட்டார். அதேவேளையில் பத்து ஆண்டுகளாக நிர்வாகியாக இருந்து திரு.வை. இரத்தினம் அனைவராலும் கௌரவிக்கப்பட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு.இரா. நாகலிங்கத்தை பெற்றோர் சார்பில் திரு.விஜயகுமார் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் மாணவர் சார்பில் பரிசும் வழங்கப்பட்டது. பிரதமவிருந்தினர் சிறப்புரையாற்றினார். நன்றியுரையை செல்வி தனுஷா கணேசலிங்கம் வழங்கினார். அதனையடுத்து விழா இனிது நிறைவேறியது.

- வீ. ஆர். வரதராஜா










புதிய முகவரியில்
**கீபோட் வகுப்புகளின் ஆரம்பம்**
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
22, Rue Chouveroux, 93000 Aubervilliers.
M°: Aubervilliers Quatre Chemins
Tel: 01 48 34 60 15 / 06 20 31 24 90

## புகலிட நிகழ்வுகள்

### நெதர்லாந்து 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகளில் இருந்து சில காட்சிகள்....








டென்மார்க்கில் 8வது ஆண்டாக
கரும்புலிகள் ஞாபகார்த்த...
**ஐரோப்பா கிண்ணம் - 2001**
7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி
தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளை கரும்புலிகள் ஞாபகார்த்தமாக நடாத்தும் மாபெரும் 7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி Bording நகரில் எதிர்வரும் 25.08.2001 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் 04.08.2001 ற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
LTTE
Post box - 47, 7400 Herning
மேலதிகத் தொடர்புகளுக்கு:
சங்கர்: 75310662
அலுவலகம்: 97217649
நுழைவுக்கட்டணம்: 350 டெனிஸ் குரோனர் போட்டிகள் ஆரம்பிக்க முன்னர் நுழைவுக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
வெளிநாடுகளிலிருந்து பங்குபற்றும் கழகங்களுக்கு உணவு, தங்குமிட வசதி இலவசம்.
இப் போட்டியானது TBU (Tamilsk Boldspil Union)வின் 7 நபர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான விசேட விதிகளுக்கமைய இடம்பெறும்.

# டென்மார்க் மாலதி தமிழ்க் கலைக்கூட மெய்வல்லுநர் போட்டிகள் 2001


மாலதி தமிழ் கலைக்கூடமானது தனது வளர்ச்சிப்பாதையில் இந்த ஆண்டும் மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியை மாநில அளவில் மிகவும் சிறப்பாக நடாத்தி இருந்தன. பியுன்





(Fyn) மாநில மாலதி தமிழ்க் கலைக்கூடங்கள் இணைந்துகொண்டு நியூபோ (Nyborg) நகரில் மிகவும் சிறப்பாக 16.06.2001 சனிக்கிழமை அன்று நடாத்தி இருந்தன. யூலண்ட் (Jyland) மாநில கலைக்கூடங்கள் இணைந்துகொண்டு கேணிங் (Herning) நகரத்தில் 23.06.2001 அன்று விளையாட்டு போட்டிகளை நடாத்தி சிறப்பித்துக்கொண்டார்கள்.

பியுன் (Fyn) மாநிலத்தில் நடந்துகொண்ட மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியின்





ஆரம்ப நிகழ்வாகிய தேசிய கொடியேற்றும் நிகழ்வை ஓயாத அலைகள் மூன்றின் மூன்றாம் கட்ட நடவடிக்கையின்போது வீரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரர் இன்பநிலா என்றழைக்கப்படும் கன்னிகாராணி மயில்வாகனத்தின் சகோதரி ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர்களுக்கும், மரணித்துக்கொண்ட மக்களுக்குமாக அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு அணிநடை மரியாதையுடன் மைதானம் தன்னை முழுமையாக விளையாட்டு போட்டிக்கு தயார்ப்படுத்தி கொண்டது. நான்கு வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவ மாணவியர்கள் விளையாட்டில் பங்காற்றி சிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். வயதுக்கேற்ப விளையாட்டுக்கள் வேறு





பட்டே இருந்தன. சிறார்களுக்கு சிறப்பாக தமிழீழ வரைபடத்தை ஒழுங்குபடுத்தும் போட்டி, தமிழ் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தும் போட்டி என போட்டிகள் தொடர்ந்தன. பந்தெறிதல், பழம் பொறுக்கல், இதனைத்தொடர்ந்து வயதின் அடிப்படையில் மேலே செல்ல செல்ல ஓட்டங்கள், நீளம்பாய்தல், குண்டெறிதல், கயிறடித்தல், சமநிலை ஓட்டம், என பல போட்டி நிகழ்வுகள் பார்ப்போரின் உற்சாக மிகுதியுடன் மிகவும் சுறுசுறுப்பாக மைதானத்தில் நடந்துகொண்டிருந்தது.

போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவச் செல்வங்களையும் ஊக்குவிக்கும் நோக்கோடு அனைவருக்கும் கருத்துமடல்கள் வழங்கப்பட்டன தொடர்ந்து போட்டிகளில் முதல் மூன்று நிலைகளை பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், மடல்களும் வழங்கப்பட்டதோடு சிறந்த வெற்றி வீரன் வீராங்கனைகளுக்கு வெற்றி கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவற்றினை திரு. இராசதுரை உதயகுமாரன் அவர்கள் வழங்கி கொண்டார். இப்போட்டி நிகழ்வில் பார்வையாளர் போட்டிகளும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இறுதியாக தேசியக் கொடி இறக்கத்துடன் நிகழ்வுகள் யாவும் முடிவுக்கு வந்தன.

★★★

யூலண்ட் (Jyland) மாநிலத்தில் நடந்தேறிய விளையாட்டு போட்டியின் ஆரம்ப நிகழ்வான தேசிய கொடியேற்றலை தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க்கிளை பணியக பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீர்களுக்கும், மரணித்துகொண்ட மக்களுக்குமான அமைதி வணக்கம் செலுத்திக்கொண்டு அணிநடைமரியாதையுடன் விளையாட்டு போட்டி மைதானத்தை முழுமைபடுத்த தொடங்கியது. மாணவச் செல்வங்கள் மிகவும் உற்சாகத்துடன் விளையாட்டுக்களில் பங்குபற்றி சிறப்பித்து கொண்டார்கள். நான்கு வயது தொடக்கம் பதினாறு வயதுவரையான மாணவர்கள் அவர்களுடைய வயதுக்கு ஏற்ப போட்டிகளும் வேறுபட்டு இருந்தன. ஓட்டங்கள், நீளம்பாய்தல், குண்டு எறிதல், தடை ஓட்டம் என போட்டிகள் சிறப்புற விறுவிறுப்பாக நடந்ததுடன், சிறார்களுக்கான போட்டிகளும் இடம் பெற்றன.

இந்த போட்டி நிகழ்வுகளில் 300 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி கொண்டதோடு பல நூற்றுக்கணக்கான மக்கள் பார்வையாளர்களாக கலந்து சிறப்பித்துக்கொண்டனர். பார்வையாளர்களுக்கான போட்டிகளும் உற்சாகமாக நடந்துகொண்டது இதற்கான போட்டிகளாக கயிறு இழுத்தல், சாக்கோட்டம், அஞ்சல் ஓட்டம் என இருந்தது.

இவற்றோடு வினோத காட்சி நிகழ்வும் மைதானத்தை வலம் வந்தது. இதில் எம் தேசத்தின் தற்போதைய நிகழ்வுகளையும் தேசம்சார் நிகழ்வுகளையும் விளக்கும்படியாக மாணவ மாணவிகள் வினோதம் காட்டி நின்றார்கள்.

இவ் விளையாட்டு போட்டியின் ஆரம்ப நிகழ்வாகிய கொடியேற்றலுக்கு முன்னதாக தொடக்க உரை ஆற்றிய மாலதி தமிழ்க் கலைக்கூட நிர்வாகி திரு.தி. அருளானந்தராசா அவர்கள், எமது அடையாளமாக விளங்கும் இந்த தேசியக்கொடியின் மகத்துவம்பற்றியும் இதற்காக தமிழினம் செய்த தியாகம் பற்றியும் விளக்கிக்கொண்ட எமது தனித்துவமான மொழி கலை கலாச்சாரங்களையும் பேணிக்கொள்ள வேண்டியதன் அவசியம்பற்றியும் உணர்த்தி நின்றார்.

போட்டி நிகழ்வுகள் யாவும் நிறைவுற்ற நிலையில் பரிசில் வழங்கும் வைபவத்துள் மைதானம் உற்சாகமாக புகுந்துகொண்டது.

இப் பரிசில்களை வழங்குவதற்காக கேணிங் (Herning) நகரசபையின் வெளிநாட்டார் பிரிவின் தலைவி ரோவ இங்கடேல் அழைக்கப்பட்டிருந்தார்.

இவர் தனது உரையில், தன்னை அழைத்து கொண்டமைக்கு நன்றி கூறிக்கொண்டதோடு மகிழ்ச்சியான சிறார்களையும் இளைஞர்களையும் பார்க்கும்போது மகிழ்ச்சியாய் உள்ளதாயும் இந்நாள் ஒரு நல்ல நாள் என்றும் கூறிக்கொண்டார்.

இறுதியாக தேசிய கொடி இயக்கும் நிகழ்வுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுக்கு வந்தன.

- செ. ஆனந்தன்

# ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய தேர்த் திருவிழா

நோர்வே ஒஸ்லோ ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், 11.07.2001 புதன்கிழமை கொடியேற்ற வைபவத்தோடு ஆரம்பமாகி; 22.07.2001 ஞாயிற்றுக்கிழமை வரை பன்னிரெண்டு தினங்கள் வெகுவிமர்சையான விழாவாக நடைபெற்றது.




திரள்முகில் திரைவிலக்கி, கதிரவன் காட்சி காண... பாற்பசும் மரப்பூக்கள் சுகந்தம் வீச, பக்தர்கூட்டம் திரண்டுநிற்க.. எம் பெருமான் திருத்தலம் தேர்த்திருவிழாவால் பொலிவு பெற்றது.

பேரலங்காரத்தோடு தேரேற, பிள்ளையார் அம்மன் வள்ளி தேவயானை சமேதராய் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தோன்றினார்.

தாரை முழக்கமும்-துப்பட்டை ஓசையும்- மேளநாதசுர இன்னிசையும் மெய்மறக்க வைத்தது!

சேகண்டி சங்கோடு தேவார முழக்கமும், முருகநாம பசன்னயும் தொடர்ந்துவர மகாமூர்த்திகள் தேரில் ஆரோகணித்தனர்.

கற்பூர நெய்வாசம் காற்றேற.. பூக்குவியல் மழை சொரிய.. காவடியும்-பொய்க்கால் குதிரை ஆட்டமும் பொலிவையூட்ட, ஓர் பக்க வடத்தை ஆண்களும், மறுபக்க வடத்தை பெண்களும் பிடித்திழுக்க திருத்தேர் உலா சிறப்பாக நடைபெற்றது!



மயிலாடும் மாகதிர்காமமும், சேவடி தொழுதாடும் செல்வச் சன்னிதியும், தேனும் தினைமாவும் விளக்காக நெய்ஒளி எரியும் திருக்கோவிலும்... மற்றும் தாயகத்து திருத்தலங்கள் . யாவும் நினைவினிலே நிழலாட, ஒஸ்லோ ஸ்ரீ சிவசுப்பிரமணியரின் திருவுலாவைத் தரிசித்தோம்.

- ந.கிருஷ்ணா

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செலாலியே சுகிர்தராஜ் –

[டிகோல் தொடர் - 56]

## தாயக விடுதலை நெருங்குகிறது

அன்று 01.01.1944

இந்த ஆண்டில் பிரான்சின் விடுதலை ஆரம்பம் ஆகும் என்று டிகோல் எதிர்பார்த்தார்– ஆனால் அது பற்றிய விவரங்கள் அவருக்குத் தெரியாது. வழக்கம் போல, ஆங்கிலேயரும்– அமெரிக்கரும் மிகவும் இரகசியமாக, பல இராணுவத் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டு இருந்தது அவருக்குத் தெரியும். அவ்வளவு தான்.

இவ்வளவுக்கும், ஐரோப்பாவுக்கான அமெரிக்க இராணுவத்தினரின் தலைமை ஜெனரல் ஐசன்ஹோ வருடன் அவருக்கு நல்ல தொடர்பு இருந்தது. பிரான்சை விடுவிக்க, ஐசன்ஹோவர் இங்கிலாந்தில் முகாமிட்டிருந்தார். இங்கிலாந்துக்குப் புறப்படும் முன், அவர், அல்ஜியர்சில், டிகோலைச் சந்தித்து, அவரிடம் விடை பெற்றார்– அப்போது, இருவரும் பல்வற்றைப் பற்றியும் பேசினர்:



– ஜெனரல், பாரிசை மீட்கும் பணியில், பிரஞ்சு இராணுவத்தினரையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்.. ஆகவே, இங்கிலாந்தில், ஒரு பிரஞ்சு படைப்பிரிவாவது [Division] நிற்க வேண்டியது அவசியம். [லெக்லெர்க் இப்பிரிவை வழி நடத்த வேண்டும் என்பது ஜெனரல் டிகோலின் முடிவு.]

– நான் உங்கள் படையினருடன் தான் பாரிசுக்குள் நுழைவேன். ஜெனரல், உங்களைப் பற்றி ஒரு கருத்து கொண்டிருந்தேன். நீங்கள் எங்களுடன் முழு அளவில் ஒத்துழைக்க மாட்டீர்கள் என்று நினைத்தேன். அது தவறு என்பதை உணர்ந்தேன். நீங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்தீர்கள்.

டிகோல் உணர்ச்சி வயப்பட்டார். அமெரிக்கக் குடியரசுத் தலைவரும், வெளித்துறை அமைச்சரும், தூதர்களும் வெகு காலமாக, தவறு செய்து வருகின்றனர். அவர்கள் தங்களது தவறுகளை இதுவரையும் உணரவில்லை. இந்த ஜெனரல் தவறு செய்துவிட்டதை ஒப்புக்கொள்கிறார். என்ன பெருந்தன்மை!

– நீங்கள் கூறியது என் மனதைத் தொடுகிறது. நீங்கள் ஒரு மனிதர் (You are a man] .

உங்களுக்கு உதவ எங்களால் ஆன அனைத்தையுஞ் செய்வோம். ஏதேனும் பிரச்சினைகள் தோன்றினால், நேராக என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். [அதற்கு முன்பாகவே, பீர்– அக்கெய்ம் வெற்றி வீரர் ஜெனரல் கெனிக்கை பிரான்சில் தரை இறங்கப் போகும் முயற்சிகளுக்கு உதவ, இங்கிலாந்துக்கு டிகோல் அனுப்பிவிட்டார்.]

– பிரான்சின் விடுதலைக்கான போர் நிகழும் போது, உங்களது உதவியும், உங்களது அதிகாரிகள், அரசு ஊழியர்கள் உதவியும், பிரஞ்சு மக்களின் ஒத்துழைப்பும் எனக்குத் தேவைப்படும்.

எனது அரசு உங்களுடன் எத்தகைய உறவை வைத்துக்கொள்ள எனக்கு ஆணையிடும் என்பது தெரியாது. ஆனால், ஒன்று நிச்சயம். பிரான்சில், நான் உங்களது அதிகாரத்தைத்தான் மதிப்பேன்.

இவ்வுரையாடலின் முடிவில்,

ஜெனரல் டிகோல், எழுந்து நின்று, நீண்ட நேரம் கைகுலுக்கி, ஜெனரல் ஐசன் ஹோவருக்கு விடை அளித்தார்.

மேலைநாட்டு இராணுவங்களில், அன்றும், இன்றும், ஒரு பழக்கம் உண்டு. இராணுவத் தலைவர்கள் யோக்கியர்கள்– ஒரு நாட்டு ஜெனரல், இன்னொரு நாட்டு ஜெனரலுடன் ஒத்துப்போவார்.

மாறாக, பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் அரசியல்வாதிகள்தான்.

அமெரிக்கத் தலைவர்கள், பிரான்சை விடுவித்த பின், பிரான்சில், தற்காலிகமாக ஒரு அமெரிக்க அரசை ஆட்சியில் அமர்த்த விரும்பினர். இந்த தற்காலிக அரசுக்கு ஒரு பெயரையும் வைத்தனர். அம்காட் (Allied Military Government in Occupied Territories) இந்த அரசுக்கென்று அவர்கள் புதிய நாணயங்களையும் அடிக்கத் தயாராய் இருந்தனர்.

இந்த முயற்சிகள் எல்லாம் டிகோலுக்கு எரிச்சலை ஊட்டின. 'அம்காட்டுக்கு, பிரான்சில் வேலை இல்லை' என்று அல்ஜியர்சில் கடமை ஆற்றிய ஆங்கிலத் தூதர் Duff Cooper இடமும், அமெரிக்கத் தூதர் எட்வின் வில்சனிடமும், நேராகவே அவர் தெரிவித்தார்.

37 நாடுகள் அங்கீகரித்த பிரான்சின் தற்காலிக அரசை அமெரிக்கரும்–ஆங்கிலேயரும் தொடர்ந்து அலட்சியப்படுத்தினர். மாஸ்கோவிலும், கெய்ரோவிலும், டெகரானிலும் சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் ஸ்டாலினுடனும், ஏன் சீனாவின் 'ட்சாங் கே ஷேக்' குடனும் நடத்திய மாநாடுகளுக்கு டிகோல் அழைக்கப்படவில்லை. எதிர்கால உலகம் பற்றி இந்த இரு 'புண்ணாக்கு' களும் மட்டுமே முடிவெடுத்தன.

இதனால் எல்லாம் டிகோல் சோர்ந்து விடவில்லை. பிரஞ்சு இராணுவத்தைப் போர்க்களங்களில் ஈடுபடுத்துவதில் குறியாய் இருந்தார். இட்டாலியை, முசோலினியின் ஆதரவாளர்களிடமிருந்தும், ஜெர்மானியரிடம் இருந்தும் விடுவிக்கும் போரில் பிரஞ்சுப் படைகள் பங்கேற்றன. இந்தப் படையில், அல்ஜீரியர்களும், மொரோக்கோ வீரர்களும், செனகல் நாட்டினரும் பிரான்சுக்காகப் போராடினர், குருதி சிந்தினர், உயிரை ஈந்தனர்–இந்தப் படையை, ஜெனரல் டிகோலுடன் 'சேன்–சீர்' பள்ளியில் பயின்ற ஜெனரல் Juin வழி நடத்தினார்.

[1944 வசந்த காலத்தில், ஜெனரல் டிகோல் இட்டாலியில் போர் புரிந்த பிரஞ்சுப் படைகளை நேரில் சென்று பார்த்து, பாராட்டுவார். அப்போது, போரில் வீரச் செயல் புரிந்த பிரஞ்சுப் படையினருக்கு, டிகோல் பதக்கங்கள் அளிப்பார்–அப்படி தான், 1944 இல், பிரஞ்சுப்படையில் Adjudent-chef பொறுப்பில் இருந்த அகமது பென்பெல்லா என்ற அல்ஜீரியருக்கு, வீரப் பதக்கத்தை, அவரது மார்பில் குத்தி, அவரது கன்னங்களில், பிரஞ்சு முறைப்படி ஜெனரல் டிகோல் முத்தமிடுவார். இந்த அகமது பென்பெல்லா, 10 ஆண்டுகள் கழித்து, அல்ஜீரியாவில் விடுதலைக்கான புரட்சிப்போரை, வேறு 5 தலைவர்களுடன் ஆரம்பித்து வைப்பார்– 1957 இல், இவர் பிரஞ்சுக்காரர்களால் சிறை வைக்கப்படுவார். 1962 ஜூலையில், அல்ஜீரியப் பிரதமர் ஆகவும், 1963 செப்டம்பரில் அல்ஜீரியக் குடியரசுத் தலைவர் ஆகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்– 1964 இல், பாரிஸ் பகுதியில், பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் டிகோலும், அல்ஜீரியக் குடியரசுத் தலைவர் அகமது பென் பெல்லாவும் சந்தித்துப்பேசுவர். 'பென் பெல்லா பிரான்சுக்குத் தீமை செய்யமாட்டார்' என்று டிகோல் அதன் பின் கூறுவார்– 1965இல், பென்பெல்லா கர்னல் பவுமிடியனால் கவிழ்க்கப்பட்டு, சிறை வைக்கப்பட்டபோது, டிகோல் பென்பெல்லாவை நல்ல முறையில் நடத்தச் சொல்லி, தூதுவர் மூலம், பவுமிடியனுக்குச் சேதி அனுப்புவார்.]

பிரான்சில், எதிர்ப்பாளர்கள் தென் கிழக்கில், Savoie போன்ற ஆல்ப்ஸ் மலைப் பகுதிகளில், Gliéres பீட பூமி போன்ற பகுதிகளை விடுவித்தனர். ஜெர்மானியர்கள் இப் பகுதிகளை மீண்டும் மீட்க, இராணுவத்தையும், விமானப் படையையும் பயன்படுத்தினர்– நாட்டுக்காக, மேலும்–மேலும், உயிர்த் தியாகஞ் செய்த தேச பக்தர்களை, மனதில், ஜெனரல் டிகோல் வாழ்த்தினார், வணங்கினார். அவரது சொந்தக் குடும்பமும் தியாகம் செய்தது.

அவரது மூத்த சகோதரி கைது செய்யப்பட்டார்.

அவரது மைத்துனர், சகோதரியின் கணவர், ஜெர்மனிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அவரது மூத்த சகோதரருக்கும் அதே கதி நேர்ந்தது.

அவரது மற்ற இரு சகோதரர்களும், சுவிசில் தஞ்சம் அடைந்தனர். அவரது அண்ணன் மகள் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டார். அவரது குடும்பம் முழுதும், அவரது துணைவியாரின் குடும்பம் முழுதும் போராடும் பிரான்சில் பங்கேற்றனர்.

[தொடரும்]

# நோயற்ற வாழ்வே...




- Dr. N. S. மூர்த்தி

## புளிச்சல் ஏப்பம் (Desophageal Reflux)

வயிற்றின் இரைப்பைப் பகுதியினுள் இருக்கும் அமிலம் (Acid) மேலே வந்து உணவுக் குழாயினுள் நுழைவதனாலேயே இந்நோய் ஏற்படுகின்றது. இதன் முக்கிய குறிகுணமாக காணப்படுவது நெஞ்செரிவு ஆகும்.

வயது வந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மாதத்தில் ஒரு தடவையாவது இந்நோயால் பாதிக்கப்படுகின்றார்கள். சிலர் வாரத்துக்கொருதடவை வருந்தினாலும் மற்றும் சிலரை இது தினமும் வாட்டி வருகின்றது. கர்ப்பிணிகள் பெரும்பாலும் இதனால் பாதிக்கப்பட்டாலும், குழந்தை பிறந்த பின்னர் இந் நெஞ்செரிவு மறைந்து விடுகின்றது. சிலவேளை கைக்குழந்தைகளைக் கூட இது விட்டுவைப்பதில்லை. ஆனால் வளர வளர காலப்போக்கில் இது மறைந்துவிடும். நமது வாழ்க்கை முறையில் சில மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலம் நெஞ்செரிவிலிருந்தும் புளிச்சல் ஏப்பத்திலிருந்தும் விடுபடலாம்.




### குறி குணங்கள்

★ நெஞ்செரிவு

★ புளிச்சல் ஏப்பம்

★ நெஞ்சு வலி

★ இருமலும், மூச்சுக்கடினமும்

இவற்றுள் நெஞ்செரிவு மட்டும் உணவுண்ட பின்னர் ஏற்படும்.

இந்நோய் அதிகரித்தால் பின்வரும் நிலைகள் ஏற்படும்.

★ வயிற்றினுள்ளிருந்து உணவும், அமிலச் சுரப்புகளும் கலந்த திரவம் ஆகியன குனியும்போது வாயினுள் வரும்.

★ சிலவேளை உணவுக் குழாயின் அடிப்பகுதியில் உணவு ஒட்டிக்கொள்ளும்..

★ சூடான பாணங்களை அருந்தும்போது தொண்டை எரிவது போன்ற நிலை காணப்படும்.

மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களில் கடுமையான நெஞ்சுவலி ஏற்படுவதுண்டு. சிலர் இதை இருதயநோய் காரணமாக உண்டாகும் வலியெனத் தவறாக எண்ணி பயப்படுவதுமுண்டு.

(தொடரும்)

**வாசகர்களே!**

*உங்கள் மருத்துவ கேள்விகளுக்கு பதிலளிக்க Dr. என். எஸ். மூர்த்தி அவர்கள் ஆதரவு தந்துள்ளார். உங்கள் சந்தேகங்களை ஈழமுரசிற்கு எழுதி அனுப்புங்கள். பெயர் விபரங்கள் அவசியமில்லை.* [ஆ.ர்]

# உலகம் இயந்திர கதியில் இயங்குகிறது 16ம் நூற்றாண்டில் கூறிய டேக்கார்ட்டே

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

*உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெச் ஹாட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.*



(சென்றவாரத் தொடர்ச்சி)

டேக்கார்ட்டேயின் இந்த முறை, இரட்டை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. முதலாவதாக, இவர் அடிப்படையான அறிவாதார வினாவை தமது தத்துவ அமைப்பு முறையின் நடுநாயக பீடத்தில் அமர்த்தி வைக்கிறார். 'மனித அறிவு எங்கிருந்து தோன்றியது?' உலகின் இயல்பை விவரித்துக்கூற முந்தைய தத்துவஞானிகள் முயன்றுள்ளனர். 'நான் அவ்வாறு அறிந்து கொள்கிறேன்?' என்ற வினாவுடன் இணைவாக அல்லாமல், இத்தகையதொரு வினாவுக்கு மனநிறைவளிக்கும் வகையில் மறுமொழி கூற இயலாது என டேக்கார்ட்டே நமக்குக் கற்றுத் தந்தார்.

இரண்டாவதாக, 'எதையும் 'நம்பிக்கை'யுடன் தொடங்கலாகாது, மாறாக, ஐயுறவுடன் தொடங்கவேண்டும்' என்று டேக்கார்ட்டே உணர்த்துகிறார். இதன் பிறகு, டேக்கார்ட்டே ஏற்றுக்கொள்ளப்பட்ட இறைமையியல் முடிவுகளுக்கே வருகிறார் என்பதும் உண்மைதான். எனினும், இவர்

> **'எதையும் 'நம்பிக்கை'யுடன் தொடங்கலாகாது, மாறாக, ஐயுறவுடன் தொடங்க வேண்டும்' என்று டேக்கார்ட்டே உணர்த்துகிறார்.**

செய்த முடிவுகளைவிட, இவர் கூறிய முறையில்தான் வாசகர்கள் மிகுதியாக கவனம் செலுத்துகிறார்கள்.

டேக்கார்ட்டே தமது கோட்பாட்டில், உள்ளத்திற்கும், உலகாயுதப் பொருள்களுக்குமிடையிலான வேறுபாட்டினை வலியுறுத்துகிறார். இந்த வகையில், இவர் விடாப்பிடியான ஓர் இரட்டைக் கொள்கையைப் பரிந்துரைக்கிறார். இந்த வேறுபாடு முன்னதாகவே கூறப்பட்டதுதான். எனினும், இதுபற்றிய ஒரு கோட்பாட்டு வாத-த்தை டேக்கார்ட்டேயின் எழுத்துகள் தூண்டி விட்டன. அது முதற்கொண்டு இவர் எழுப்பிய வினாக்களைத் தத்துவ அறிஞர்கள் ஆர்வத்துடன் விவாதித்து வருகிறார்கள். இந்த விவாதம் இன்னும் முடிவுறவில்லை.

இயற்பியல் உலகம் பற்றிய டேக்கார்ட்டேயின் கோட்பாடும், பெருஞ் செல்வாக்குப் பெற்றது. இறைவனும் மனித ஆன்மாவும், நீங்கலாக, உலகம் முழுவதும் எந்திர கதியில் இயங்கி வருகின்றது என்றும், ஆகவே இயற்கை நெகிழ்வுகள் அனைத்தையும் எந்திர நுட்பக் காரணங்களால் விளக்கிக் கூற முடியும் என்றும் இவர் நம்பினார். இதே காரணத்திற்காக, சோதிடம், மந்திரம் போன்ற மூட நம்பிக்கைகளை இவர் எதிர்த்தார். அதே போன்று, 'இயற்கை நிகழ்ச்சிகளின் காரண காரியத் தொடர்புகள் தற்செயல் நேர்வுகளல்ல. இறுதி விளைவு நோக்கிய ஒரே மூலத் திட்ட அமைப்பின் கூறுகளே' என்று கூறும் இயல்திட்டவாத [Teleological] விளக்கங்களையும் இவர் தீவிரமாக எதிர்த்தார். டேக்கார்ட்டேயின் கண்ணோட்டத்தில், விலங்குகள் அடிப்படையில் சிக்கலான எந்திரங்களைப்போல் அமைந்துள்ளன. மனித உடலும், வழக்கமான எந்திரவியல் விதிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இக்கொள்கைகள் யாவும் பின்னர் மெய்ப்பிக்கப்பட்டு நவீன உடலியலின் அடிப்படைக் கொள்கைகளாக அமைந்தன.

அறிவியல் ஆராய்ச்சியை டேக்கார்ட்டே ஆதரித்தார். அதன் நடைமுறைப் பயன்பாடுகள் சமுதாயத்திற்கு நன்மை விளைவிக்கும் என நம்பினார். துல்லியமற்ற கோட்பாடுகளை விஞ்ஞானிகள் தவிர்க்க வேண்டும் என்றும், உலகைக் கணிதச் சமன்பாடுகளால் விவரித்துக் கூறுவதற்கு முயலவேண்டும் என்றும் இவர் வலியுறுத்தினார். இவருடைய இந்தக் கொள்கைகள் அனைத்தும் நவீன நோக்குடையனவாக இருந்தன. எனினும், டேக்கார்ட்டே, தாமே பல பரிசோதனைகளைச் செய்திருந்தபோதிலும், அறிவியல் முறையில் பரிசோதனைகள் செய்வதன் இன்றியமையா முக்கியத்துவத்தை வலியுறுத்தாமல் விட்டுவிட்டார்.

புகழ்பெற்ற பிரிட்டிஷ் தத்துவஞானியாகிய பிரான்சிஸ் பேக்கன், அறிவியல் ஆராய்ச்சியின் தேவையினையும் அதனால் கிடைக்கும் நன்மைகளையும் டேக்கார்ட்டேக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவித்திருந்தார். அதுமட்டுமின்றி, 'ஆகவே நான் நானாக இருப்பதாகக் கருதுகின்றேன்' என்ற டேக்கார்ட்டேயின் வாதம்கூட, அவருக்குச் சொந்தமானதன்று. அவருக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்னரே புனித அகஸ்டைன் வேறு விதமாக இதே கருத்தைக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார். அதேபோன்று, கடவுள் இருக்கிறார் என்பதற்கு டேக்கார்ட்டே கூறிய சான்றுறுதி [Proof] புனித ஆன்செல்ம் [1033– 1109] முதலில் கூறிய மெய்ப்பொருளியல் வாதத்தின் ஒரு மாற்று வடிவமேயாகும்.

டேக்கார்ட்டே 1641 ஆம் ஆண்டு 'தியானங்கள்' [Meditation] என்ற தமது புகழ்பெற்ற நூலை வெளியிட்டார். இவருடைய 'தத்துவ விதிகள்' (Principles of Philosophy) என்ற நூல் 1644 ஆம் ஆண்டில் வெளியாயிற்று. இவ்விரு மூலநூல்களும் லத்தீன் மொழியில் எழுதப்பட்டன. இவற்றின் பிரெஞ்சு மொழி பெயர்ப்புகள் 1647ஆம் ஆண்டில் வெளியாயின.

டேக்கார்ட்டே ஒரு பண்பட்ட எழுத்தாளர். அவருடைய உரைநடை கவர்ச்சிகரமாக இருந்தது. எனினும், இவரது எழுத்துகளின் 'தொனி' [Tone] எதிர்பாராத வகையில் பழைய பாணியில் அமைந்திருந்தது. உண்மையைக் கூறின் [ஒருவேளை தமது பகுத்தறிவு அணுகு முறையின் காரணமாகவோ என்னவோ] ஒரு மத்திய காலத்துப் புலவரின் செருக்கு மிகுந்த முழக்கத்தைப்போல் அது தொனிக்கிறது: பிரான்சிஸ் பேக்கனுடன் இவரை ஒப்பிடும்போது, பேக்கன் இவருக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு, பிறந்தவராயினும், பேக்கனின் எழுத்துகள் நவீன தொனியுடன் திகழ்கின்றன.

டேக்காட்டே தீவிரக் கடவுள் பற்று மிக்கவராக இருந்தார் என்பது, அவருடைய எழுத்துகளிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது. இவர் தம்மை ஒரு சிறந்த கத்தோலிக்கராக கருதினார். எனினும், திருச்சபை அதிகாரிகள் இவரை வெறுத்தனர். இவருடைய நூல்கள், கத்தோலிக்கத் திருச்சபையினரால் தடைசெய்யப்பட்டிருந்த நூல்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தன. அக்காலத்தில், ஐரோப்பாவிலேயே சமயச் சகிப்புணர்வு மிகுந்த நாடாகக் கருதப்பட்ட புரோட்டஸ்டாண்டு ஹாலந்தில்கூட, டேக்கார்ட்டே நாத்திகர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகி அதிகாரிகளிடம் பல தொல்லைகளை அனுபவித்தார்.

1649ஆம் ஆண்டில் ஸ்வீடன் அரசியான கிறிஸ்டினா, டேக்கார்ட்டே-க்கு தாராளமாக நிதியுதவி வழங்கி, ஸ்டாக்ஹோமுக்கு வந்து தமக்கு ஆசிரியராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஸ்வீடனுக்கு வந்த நான்கே மாதங்களில் 1650 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், இவர் காலமானார்.

டேக்கார்ட்டே திருமணம் செய்து கொள்ளவில்லை. எனினும், அவருக்கு ஒரு குழந்தை– ஒரு மகள் இருந்தாள். ஆனால், இந்த மகள் இளமையிலேயே இறந்துவிட்டாள்.

டேக்கார்ட்டேயின் தத்துவத்தை அவருடைய சமகாலத்தவர் பலரும் வன்மையாகக் கண்டித்தனர். இவருடைய தத்துவம் சுற்றுவழிப் பகுப்பாய்வாக இருந்தது, இதற்கு ஒரு காரணமாகும். பிற்காலத் தத்துவஞானிகள் பலர், இவருடைய முறையில் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். இன்று இவருடைய முறையை முழு மனதுடன் ஆதரிப்பவர்கள் மிகச் சிலரே உண்டு. ஆனால், ஒரு தத்துவஞானியின் முக்கியத்துவம், அவருடைய முறையின் துல்லியத்தை மட்டும் பொறுத்தது அன்று. மாறாக, அவரது கருத்துகள்– அல்லது அவரது எழுத்துகளிலிருந்து மற்றவர்கள் எடுத்துக் கொள்ளும் கருத்துகள்– பெருமளவு செல்வாக்குப் பெற்றுள்ளதா என்பதையே பொறுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், டேக்கார்ட்டே ஒரு முக்கியமான மனிதனாக விளங்கினார் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

டேக்கார்ட்டேயின் கருத்துகளில் குறைந்தது ஐந்து கருத்துகள் ஐரோப்பியர் சிந்தனையில் முக்கியமான பாதிப்பை ஏற்படுத்தின. அவையாவன:

1. உலகம் பற்றிய அவரது எந்திர முறைக் கண்ணோட்டம்
2. அறிவியல் ஆராய்ச்சிகள் குறித்த அவரது ஆக்கமுறையான அணுகு முறை
3. அறிவியலில் கணிதத்தைப் பயன்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியது.
4. தொடக்க நிலை ஐயுறவை அவர் ஆதரித்தது
5. அறிவியல் ஆய்வு முறையில் அவர் கவனத்தை ஒருமுகப்படுத்தியது.

# கவிக்களம்

## வானூர்திகளுக்கு ஓர் எச்சரிக்கை!!

கழுகாய் பறந்து திரிந்து
தமிழன் உயிர் குடித்த
சிங்கள வானூர்திகளே!
வரைகிறேன் உமக்கோர்
கவியொன்றை நானும்

ஆழ்ந்த துயிலில் அமைதியுடன்
தூங்கும் அன்புக் குழந்தைகளை
கழுகாய் பறந்து வந்து
துண்டு துண்டாய் சிதறடித்தீர்!

படுக்கையில் இருந்து
கண் விழித்துப் பார்க்கையில்-
இன்று
என்ன துயர் வருமோ
எங்கெங்கு அடி விழுமோ என
ஏங்க வைத்தீர் எம் மக்களை.

வயலுக்குச் சென்ற விவசாயி
வியர்வை சிந்தி வேலை
செய்கையில்
விர் என்று விரைந்து வந்து
திண்டாட வைத்து- அவரை
துண்டு துண்டாக்கி விட்டுச்
சென்றீர்!

துன்பக் கடலில் வாழும் எம்
மக்கள்
நெஞ்சிற்கு நிம்மதி தரும்
சந்நிதிகள் பலவற்றை
அடியோடு தகர்த்துச் சென்றீர்!

அடைக்கலம் தேடி
ஆலயங்களில் தஞ்சம் புகுந்த
ஆயிரமாயிரம் உயிர்களை
அப்படியே கொன்று குவித்தீர்!

பாடசாலை சென்ற
மாணவ மாணவியரை
பதை பதைக்க வைத்து
பறித்துச் சென்றீர் அவர்
உயிரை!

பாதுகாப்புத் தேடி
பதுங்கு குழிக்குள் பதுங்கிய
பாவமறியா அப்பாவிகள் உயிரை
பருந்தாய் வந்து பறித்துச்
சென்றீர்!

அமைதியாக இருந்த நம்
நாட்டில்
அவலக் குரலை எழுப்ப
வைத்தீர்!
பசுமையாக இருந்த நம்
நாட்டில்
செங்குருதியை பாய வைத்தீர்!
தென்றல் காற்றை சுவாசித்த
எம் மக்களை
கந்தக காற்றை சுவாசிக்க
வைத்தீர்!

பொறுத்தது போதும் பொங்கி
எழுவோமென
பதுங்கிய புலிகள் பாய்ந்ததே
கட்டு நாயக்கா விமானப் படைத்
தளத்துள்!
பதறியதே சிங்களப் படையணி!
சிதறியதே குண்டு வீச்சு
விமானங்கள்!

சிங்கள இனவாதமே...
தமிழன் உயிர் குடிக்க
இனியும் நீ நினைக்காதே.
இத்தோடு நிறுத்து உன்
விமானக் குண்டுவீச்சை...
இல்லையேல் இதே அடிதான்
மீண்டும் உனக்கு...

– வன்னேரியூர் ஜான்.சிவகௌரி
நோர்வே

## முற்றத்தில் மூண்ட இடி

வெள்ளிப் பருதியை
வீழ்த்திவந்து வைத்ததுபோல்
இரவைப்பகலாக்கி...
உயரமுத்த மின்னொளியில்
கொழும்பும் நீர் கொழும்பும்
மின்னி மிதக்க...

பத்தடிக்கு ஒன்றாய் படைஞனும்
எத்திருப்பத்திலும் தடைக்காவலும்
வெள்ளையுடை வேவுதாரிகளும்
விழிப்போடு வழிக்காவலிருக்க...
பதிந்தும் ஏறிமிதந்தும்
பல கெலிகள் வானக்காப்பிருக்க...,

இரும்புவேலி அடைப்புகளில்
மின் இணைத்துப் பாய்ச்சி...
ஈயெறும்புதானும் இயல்பாக
நுழையா நுட்பம் செய்து;
உயர் நிபுணர் பார்வையிலே
உன்னிப்பாய் பாதுகாக்கும்
பண்டாரநாயக்கா விமான நிலையத்தில்
குண்டுகள் வெடித்தன!!!

துரித இடிசொரிந்து விரிந்து
எரிமலையாய் சிலர் சீறியணைந்து
புரிந்த அதிசய அதிரடியால்...
சரிந்த பாதுகாப்பை சந்திரிகா
சரிக்கட்டுவாரா? பதவியை உரிந்து
துறவுதான் பூணுவாரா...?

ந. கிருஷ்ணசிங்கம் - நோர்வே

# 14ம் ஆண்டு நினைவஞ்சலி

பிரதேச படைத்துறைத் தளபதி


## தேவா

**மங்களநாயகம் (தேவா)**

கள்ளப்பாடு முல்லைத்தீவு



| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 06 – 09 – 1952 | 04 – 08 – 1987 |



தகவல்: மகன் M.A கொண்சலஸ் (பிரான்ஸ்)

Pub.

இனி உங்களுக்கு கவலைகள் ஏது!...

**தடைகள் ஏதுமின்றி யாழ்ப்பாணம் சென்றுவர விசேட ஒழுங்குகளுடன் கூடிய விமானப்பயண வசதி.**

SriLankan Airlines

IATA

ROYAL JORDANIAN

ABTA J1528

உலகத்தின் எந்தப் பகுதிக்கும் நீங்கள் பறந்து செல்ல நினைத்தால் உடனே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். தமிழிலேயே பேசி உங்கள் தேவைகளை விளக்கி விமான டிக்கட்டுகளைப் பதிவு செய்துகொள்ளலாம்.

**Sri Lankan Airlines** ல் Colombo £ 440 அத்துடன் மேலதிகமாக £ 20 செலுத்தினால் **Singapore. Kuala Lumpur. Bangkok or south India** விமானச் சீட்டை பெறலாம்.

**Air Canada** வில் Toronto, Montreal £ 241. ← Only At Time Travel

**Tel: 020 8907 6969**

020 8907 6969

**Email: Sutha@ucanfly.co.uk**

**Kenton**
**136 Kenton road**
**Harrow**
**Middlesex**
**HA3 8AZ**

*Main Agent*

TIME Travel & TOURS

வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

*Flights To Every, Destination on All Popular Airlines*

# 6 குழுக்களாக 200 இரகசியப் பொலிஸார் தீவிர விசாரணை

(05.08.01)

முன்னொருபோதும் இல்லா தளவிற்கு கட்டுநாயக்கா விமான நிலைய மற்றும் விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் சிறீலங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக ஈடுபடுத் தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆறு குழுக் கள் அமைக்கப்பட்டு அவர்க ளுக்கு கீழே விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுமார் 200 விசேட குற்றப் புலனாய்வுப் பொலிசாரும் நியமிக்கப்பட்டுள் ளனர்.

இந்த விசாரணைகளை மேற் கொள்வதற்கு நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்களும், ஆறு உதவிப் பொலிஸ் அத்தி யட்சர்களும் நியமிக்கப்பட்டுள் ளனர்.

# விமானப் படைத்தளத்தை இடம் மாற்ற கோரிக்கை

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் அதனுடன் இணைந்திருக்கும் சிறீலங்கா விமானப் படைத் தளத்தை வேறு ஓர் இடத்துக்கு மாற்றுமாறு சிறீலங்கன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்தை நிர்வகித் துவரும் டுபாய் எமிரேட்ஸ் நிறுவன அதிகாரிகள் சிறீலங்கா அரசிடம் கோரியுள்ளனர். ஜெய ராஜ் பெர்னாண்டோ புள்ளே தலைமையில் கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. விமான நிலைய விவகாரம் தொடர்பாக ஆராய் வதற்காகக் கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில் விமானப் படை யின் உயர் அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தனர். அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, விமான நிலையத்துடன் விமா னப் படையின் தளமும் அமைந்திருப்பது அந்த விமான நிலையத்துக்கு பாதுகாப்பே என்பதை மறுக்க முடியாது. ஆனால் விமானத் தளத்தில் [illegible] னங்களை இலக்கு வைத்தே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். பிரான்ஸ், பிரிட்டன், சுவிஸ் ஆகிய நாடுகளில் இயங்கும் விமானப் பயண முகவர்களின் விமானங் களே கூடுதலாக கட்டுநாயக்கா வுக்கு வந்து போகின்றன. அந்த நிறுவனங்கள் தமது பாதுகாப்பு அதிகாரிகளை இங்கு அனுப்பி, நிலைமையை ஆராய்ந்த பின்பே இங்கு விமானங்களை அனுப்ப முடியும் என்று தெரிவித்துள் ளன. இந்நிலையில் விமானத் தளத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதே சாலச் சிறந்த நட வடிக்கை எனக் கூறியுள்ளன.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

**குமார்...**

எண்ணத்துடனேயே நான் அங்கு சென்றிருந்தேன். ஆனால் வன் னிக்குச் செல்ல அனுமதியளித் துவிட்டு, தற்போது புலி ஆதர வாளன் என்ற முத்தி ரையை என் மேல் குத்த முயற்சிக்கின் றது அரசு.

குமார் பொன்னம்பலம் புலி களுக்கு ஆதரவானவர் என்று ஜனாதிபதி கூறிய சில நாள் களில், குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டார். அதே போன்று, என்னையும் புலி ஆதரவாளன் என்று ஜனா திபதி கூறி வருவதன் மூலம், தென்னிலங்கை அடிப்படை வாதிகளால் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் மரண அச் சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனது சொந்தத் தொகுதியான யாஎல, கட்டுநாயக்கா பிரதேசத்திற்கு அருகே இருக்கும் ஒரே காரண த்தினால், கட்டுநாயக்கா விமானப் படைத்தளத் தாக்குதலின்போது, புலிகளுக்கு நான் உதவியதாகப் பொய்ப் பிரச்சாரம் ஒன்றை அரசு அவிழ்த்து விட்டுள்ளது. இவற்றின் மூலம் குமார் பொன் னம்பலத்தைப் போன்றே, எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட் டால், அதற்கு ஜனாதிபதியே பொறுப்பு. இவ்வாறு டாக்டர். ஜெயலத் ஜயவர்த்தனா அப் பத்திரிகைக்கு மேலும் தெரிவித் துள்ளார்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

**எட்னா எரிமலை...**

பட்டது. ஐரோப்பாவில் செயற் பாட்டில் உள்ள மிகப்பெரிய எரி மலை எட்னா என்பது குறிப் பிடத்தக்கது. கடந்த ஞாயிறன்று எட்னாவின் பிரதான வாயில் வழியாக வெளிவரும் புகையின் அளவும், வேகமும் குறைந்திருந் தது. அதேவேளை வெளியாகிய தீக்குழம்புகள் அப்பகுதியின் நக ரொன்றினை அண்மித்துள்ளது. ஆனால் அப்பகுதியில் பாதுகா -ப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ள தென அதிகாரிகள் கூறியுள்ள னர். பல நாட்களின் பின் முதல் முறையாக இப் பகுதிக்கு உல் லாசப் பயணிகள் செல்ல அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

**வரோதயநகர்...**

தயநகர் கிராமத்தில் 250 க்கு அதிகமான தமிழ்க் குடும்பங் கள் வாழும் பகுதியில் கடற் படையினர் நேற்று முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். இது அப்பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத் தியுள்ளது. சில கிராம மக்கள் தங்களின் குடும்பங்களை பாது காப்பான பகுதிகளுக்கு நேற்றே அனுப்பி வைத்துவிட்டனர். வேறு சிலர் இடம்பெயர்வதற்கு தயார் செய்து வருகின்றனர்.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

**சர்வஜன...**

காங்கிரஸ், புளொட், மக்கள் மலையக முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், முஸ் லிம் ஐக்கிய முன்னணி உட் படப் பலகட்சிகள் கலந்து கொண்டன.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதோடு இதற்கு எதிராக வடக்குக் கிழக்கு மற்றும் கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களில் எதிர்ப்புப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8ம் திகதி முதல் வடக்குக் கிழக்கிலும் மலைய கத்திலும் இந்த எதிர்ப்புக் கூட் டங்களை நடத்துவதெனவும் முடிவாகியுள்ளது. கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் மத்தியி லும் சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில் கூட்டங்கள், சந்திப்புக்களை நடத்துவதெனவும் இத்தமிழ் கட்சிகள் ஏகமனதாக முடிவெடுத் துள்ளன. இந்த எதிர்ப்புப் பிரச் சாரக் கூட்டங்களுக்கு அனைத் துக் கட்சிகளினதும் பிரதிநி திகள் ஒவ்வொரு இடங்களுக் கும் சென்று மக்கள் மத்தியில் பிரச்சார வேலைகளில் ஈடுபடு வதெனவும் இக்கட்சிகளின் பிர திநிதிகள் முடிவெடுத்துள்ளன.

## மரண அறிவித்தல்

மலர்வு: 06 – 09 – 1932



உதிர்வு: 29 – 07 – 2001

### திருமதி முத்துமலர் சோதிநாதன்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஒட்டாவா - கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி.முத்துமலர்.சோதிநாதன் ஒட்டாவாவில் அகால மரண மானார். அன்னார் ஆனந்தசுந்தரம் சோதிநாதன் (முன்னாள் Island ஊடகவி யாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற வைத்திலிங்கம், அசு வதி அவர்களின் அருமைப் புதல்வியும், காலம்சென்ற ஆனந்தசுந்தரம், கனகம்மா அவர்களின் அருமை மருமகளும்,


பிரமிளா (UK), ஆனந்தமோகன் (USA),Dr.ஆனந்தவிஜயன் (UK), ஆனந்தகுமார் (Canada), மேனகா (SriLanka), சுகனியா (Canada), ஆனந்த விமலன் (Canada), ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவீந்திரன், நதீரா, பவானி, அஜந்தா, மனோகரன், சுந்தர், அமிதா, ஆகியோரின் அருமை மாமி யாரும், யூடிகா, ஜெசான், ஜெனிசா, சத்தியா, சஞ்சீவ், சபேசன், பார்த்தீபன், ஆதிரை, ஆரணி, ஆரபி, சுதனி, ஆகியோரின் ஆசைப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக 01.08.2001 (புதன்கிழமை) மாலை 5மணி தொடக்கம் 9 மணிவரை 3280 Sheppard Ave.EastYs;s Highland Funeral Homeயல் பார்வைக்காக வைக்கப்பட்டு 02.08.2001 (வியாழக்கிழமை) மதியம் 12 மணியிலிருந்து 2 மணிவரை Donmills & McNicoll சந்திப்பில் அமைந்த 33 Memory Garden மயானத்தில் இறுதிக்கிரிகைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: திரு.ஆனந்தகுமார் 416-281-1859
திரு.ஆனந்தவிமலன் 416-298-9457
திருமதி சுகன்யா சுந்தர் 905-427-0531

## மரண அறிவித்தல்

தோற்றம்: 19 – 05 – 1919



மறைவு: 30 – 07 – 2001

### சின்னக்குட்டி கந்தையா

இலங்கை வரணியைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வசித்து வந்தவருமான திரு.சின்னக்குட்டி.கந்தையா அவர்கள் 30.07.2001 திங்களன்று 46 Moor Road, Wellawatta யிலுள்ள அன்னாரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னக்குட்டி தம்பதிகளின் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவபாதம் (ஆசிரியர், யாழ்ப் பாணம்), இராஜேஸ்வரி (கனடா), இராஜேந்திரன் (சந்திரன்,கொழும்பு) திருமதி.மனோ கரன் (கிராமசேவகர், வரணி), கலாநிதி (கொழும்பு), பரமேஸ்வரன (ராதா, கனடா), பரமேஸ்வரி (ரதி, கனடா), தயாபரன் (சுவிஸ்), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமநாதன் (கனடா), சர்வேஸ்வரி (கொழும்பு), மனோகரன் (கனடா), ஜெயலட்சுமி (கொழும்பு), சோதிலிங்கம் (கனடா), முத்துக்குமாரசாமி (குமார், கனடா), சாந்தினிதேவி (கௌரி, கனடா),சுமதி (கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மினி, சுகந்தன், கிருபா, ஜனகன், தீபா, கோபிகா, சிந்துஜன், யதுஹீன், சாமினி, அனந்தினி, மயூரினி, தக்ஷீரயினி, நிஷீந்தன், நிஷீனி, விஷ்ணுகோபன், நிதர்சன், தாரணி, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 46, Moor Road, Wellawattaயிலுள்ள அவரது இல்லத்தில் 01.08.2001 (புதன்) மாலை 1 மணிக்கு நடைபெற்று 3 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனக்கிரி யைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இராமநாதன்: 416-752-0646 ராதா: 416-288-0939
குமார்: 416-752-9730 சோதி: 416-615-2655 சிவபாதம் / இராஜேந்திரன் (சந்திரன், கொழும்பு): 556527

தொடர்புகளுக்கு : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


PAPAYA Restaurant

MODERN CEYLON CUISINE



குறைந்த விலையில் குன்றாத மனநிறைவு

* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்.

15 Village Way East,
Rayners Lane,
Harrow,
Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# குமார் பொன்னம்பலத்தை போன்று எனது உயிருக்கும் சந்திரிகா ஆபத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்

## - ஜெயலத் ஜயவர்தனா குற்றச்சாட்டு -

(06.08.01)

குமார் பொன்னம்பலத்துக்கு நேர்ந்ததைப் போன்று, எனது உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்த சிறீலங்கா ஜனாதிபதி முயற்சி செய்வதாக சிறீலங்கா எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார். யாழில் இருந்து வெளிவரும் உதயனுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த சனியன்று அவர் வழங்கிய இப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த யூலை 29ம் திகதிய சண்டே ஒப்சேவர் (ஆங்கில வார இதழ்) மற்றும் தினமின (சிங்கள இதழ்) ஆகிய அரசு சார்புப் பத்திரிகைகளில், துணுக்காய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நான் அஞ்சலி செலுத்துவது போன்றதொரு படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் கடந்த சில வாரங்களாக, சிறீலங்கா வானொலி, ரூபவாஹினி, ஐ.ரி.என்.ஆகிய அரசின் ஊடகங்கள் மூலமாக என்னை புலிகளின் ஆதரவாளனாக சித்தரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. ஜனாதிபதியை அமைச்சராகக் கொண்ட பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றே நான், கடந்த மே மாதம் 2ம் திகதி வன்னிக்குச் சென்றேன். வன்னிப் பிரதேசத்தில் உணவு, மருந்து, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் எதுவுமின்றி பெரும் துன்பங்களை அனுபவிக்கும் தமிழர்களின் நிலையை நேரடியாகப் பார்த்து, அது குறித்து வெளி உலகுக்குத் தெரிவிக்கும் நேர்மையான தூய

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வரோதயநகர் கிராமத்தில் புதிய கடற்படை முகாம்

## - தமிழ் மக்கள் வெளியேறும் ஆபத்து -

(06.08.01)

திருமலை வரோதயநகர் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை கடற்படையினர் புதிதாக முகாம் ஒன்று அமைத்ததை அடுத்து அங்கு வாழும் சுமார் இரண்டாயிரம் தமிழ் மக்கள் மூன்றாவது தடவையாக இடம்பெயர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக அவர்கள் திருமலை மாவட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஒன்றியத்திடம் மகஜர் ஒன்றையும் அப்பகுதி மக்கள் கையளித்தனர். அதில், படையினரால் துன்புறுத்தல் ஏற்படும் என்று அச்சப்படுகின்றோம் ஆகவே நாம் மீண்டும் இடம்பெயராது இருப்பதற்குத் தேவையான மாற்று நடவடிக்கைகளை எடுத்து உதவும்படி கேட்டுக்கொள்கின்றோம், எனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

1985ம் ஆண்டு இடம்பெற்ற வன்செயலின் போது இம்மக்கள் முதலாவது தடவையாக இடம்பெயர்த்தனர். பின்னர் 88ம் ஆண்டு மீளக்குடியமர்த்தப்பட்டனர். மீண்டும் 90ம் ஆண்டு வன்செயலின் போது இடம்பெயர்ந்தனர். மீண்டும் 1993ம் ஆண்டு இவர்கள் இரண்டாவது தடவையாக மீளக் குடியமர்த்தப்பட்டனர். இப்போது கடற்படை முகாம் அங்கு நிறுவப்பட்டதை அடுத்து மூன்றாவது தடவையாக இடம்பெயரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வரோதயநகரில் உள்ள பாரதி வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் பொலிஸ் முகாம் ஒன்றுள்ளது. பாடசாலையின் இன்னொரு பகுதியில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்போது வரோ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# படகு மூலம் இத்தாலி செல்ல முயன்ற 116 பேர் கைது

(06.08.01)

நீர்கொழும்பில் இருந்து படகுகளின் மூலம் இத்தாலி நாட்டுக்குச் செல்ல முயன்ற 116 இளைஞர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடலில் பயணப்பட்டுக் கொண்டிருந்த இவர்கள் பற்றிய தகவல் பொலிசாருக்கு கிடைத்ததையடுத்து அங்கு விரைந்த கடற்படையினர் கரையில் இருந்து ஐந்து கடல் மைல் தூரத்தில் வைத்து படகுகளுடன் இவர்களை கைது செய்துள்ளனர். தற்போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களில் நீர்கொழும்பு, வென்னப்புவ, யா—எல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுடன், 40ற்கும் மேற்பட்டவர்கள் தமிழர்களும் அடங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது. அண்மையிலும் இவ்வாறு படகு மூலம் இத்தாலி செல்ல முயன்றவர்கள் இதே பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் பலர் கரையை அடைந்ததும் அங்கிருந்து தப்பியோடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக பிரச்சாரம் 11 தமிழ் கட்சிகள் முடிவு

(06.08.01)

இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதற்கும் இதற்கு எதிரான பிரச்சாரத்தை நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்கும் தமிழ் கட்சிகள் இன்று மாலை கூடி முடிவெடுத்துள்ளன. இன்று மாலை கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரெஸ் அணி), அகில இலங்கைத் தமிழ்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கிளைமோர் தாக்குதல் 8 விமானப்படையினர் படுகாயம்

(06.08.01)

வவுனியா இரணை இலுப்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் கண்ணி வெடித்தாக்குதலில் சிறீலங்கா விமானப்படையினர் எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர். வவுனியா - மன்னார் வீதியில் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோது கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டு இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதன்போது காயமடைந்த அனைத்துப் படையினரும் உடனடியாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் இவர்களில் சிலரது நிலைமை மிகவும் ஆபத்தாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, HA0 2DJ,
Tel: 0181 - 9024590
Pub
நிர்வாகி: G.சதீஸ்



★ Leela அரிசிமா - 89P ல் இருந்து
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
★ CD 2.99 இல் இருந்து - ★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ அனைத்துத் தொலைபேசி அட்டைகளும் 10% விலைக் கழிவில்
£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!